# ஸ்ரீ சரசுவதி சங்கம் – மணிவிழா

## ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை-பொன் விழா

## புதுவயல் - 1982



# சிறப்பு மலர்




*With the best compliment from*

Phone : 36255 (3 Lines) Grams : RAJDOOT

## Anamallais Agencies

15/1, Mettupalayam Road, COIMBATORE-641 043



*Authorised Dealers for :*

**Escort & Ford Tractors, Rajdoot Motor Cycles, Scooters For Coimbatore, Nilgiris, Trichy and Pudukottai Districts**

*Also Dealers for :*

**Escort & Ford Tractors for Periyar District.**

*&*

*Authorised Dealers for :*

**Hindustan Ambassador Cars, Bedford Trucks for Trichy, Tanjore, Pudukottai & South Arcot Districts**

*Branches :*

| | | |
|---|---|---|
| **4-A, Birds Road,** | **Dr. Nanchappa Road,** | **SRM Building** |
| *Trichy-620 001* | *Coimbatore-641 018* | *Mettur Road, Erode-9* |
| **Phone: 23222 (3 Lines)** | **30100** | **77040** |

உ

# ஸ்ரீ சரசுவதி சங்கம் மணிவிழா.

# ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை பொன்விழா.

# ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடக்கவிழா.

## சிறப்பு மலர்

SRI SARASWATHI SANGAM
ஸ்ரீ
சாஸ்வதி சங்கம்.
புதுவயல்.
PUDUVAYAL

தலைமை:

உயர்திரு. **டாக்டர் ராஜாசர் மு. அ. முத்தையா செட்டியார்** அவர்கள்
இணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

வெளியீடு:

**திரு. இராம. முத்தையா அவர்கள்,**
தலைவர், மதுரை வங்கி.

நாள்: துந்துபி — ஆவணி — 15 [31 - 8 - 1982]

# மலர்க் குழுவினர்

வீர. வீர. சோலையப்பன் B. SC.

மு. க. இராமசாமி செட்டியார்.

அள.பெரி.நா.வெ.நாராயணன் என்ற சோமையா.

பெரி. சிதம்பரம்.

செயலர். பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

எ. அ. ப. வீர. பழ. வீரப்பன் (மலேயா)

வீர. வீரசேகரன் B. SC. பள்ளத்தூர்.

பதிப்பாசிரியர்:

புலவர். பழ. முத்தப்பன். M.A.

# பதிப்புரை

"வெள்ளி பெரிதன்று, விளங்கும் அறிவு தரும்

பள்ளி பெரிதென்று படைத்த கலைக் கோயில்"

என்று போற்றுமாறு சிறப்புப் பெற்றது ஸ்ரீசரசுவதி சங்கம். சங்கம் தோன்றி இற்றைக்கு 60 ஆண்டுகள் நிறைவெய்துகின்றன. சங்கம் தோற்றுவித்த கல்விக்கூடமாம் வித்தியாசாலை தோன்றி 50 ஆண்டுகள் ஆகின்றன. ஆம்... அரை நூற்றாண்டுக் காலம் கல்விப் பணி செய்த வித்தியாசாலை - இன்று பெண்கள் உயர் நிலைப் பள்ளியாக உயர்வு பெறுகிறது என எண்ணும்பொழுது பள்ளியில் கல்வி பெற்ற ஒவ்வொரு உள்ளமும் பூரிப்படையும் என்பதில் ஐயமில்லை. ஆலவாய் அண்ணல் குடிகொண்ட மதுரை மாநகரில் தோன்றிய முச் சங்கங்களின் பின் தொடர்ச்சியாய் - முத்தமிழ் காக்கும் சரசுவதி சங்கம் தன் வாழ்க்கையில் மணி விழாவைக் காணுகிறது. சங்கம் செய்திருக்கும் தமிழ்ப் பணி அளவற்றது. ஆண்டுக்காண்டு சங்கம் தன் பணியைத் தரணி போற்றும் வண்ணம் செய்து வந்திருக்கிறது. தமிழன்னையின் அருந்தவப் புதல்வனாய்ச் சங்கம் விளங்கி - அன்னைத் தமிழை அழகுறப் பேணி வளர்ந்திருக்கிறது. அதில் ஒரு சிறு பணியே இம் மலர். முப்பெரு விழாவின் அழகு மலரை - அன்னை கலைமகளின் திருவடி மலராக - அன்புத் தமிழ் நெஞ்சங்கள் சூடும் மலராக உங்கள் முன் படைக்கின்றோம்.

சங்கம் தோன்றிய அறுபதாண்டில் பல ஆண்டறிக்கைகள் சங்க வெளியீடாக வெளிவந்தாலும் சங்கப் பொன் விழாவில் "பொன் விழா மலர்" ஒன்று வெளியிடப் பெற்றது. அதனை அடுத்து மணிவிழாவில் – வித்தியாசாலையின் பொன்விழாவையும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் தொடக்க விழாவையும் நினைவுபடுத்தும் வண்ணம் இம் மலர் சிறப்பு மலராக வெளிவருகின்றது.

மலரில் நல்லறிஞர் பலரின் வாழ்த்துக்களும், நற்றமிழ்ப் புலவர்களின் பாமாலைகளும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களின் கட்டுரைகளும், சங்கம் - வித்தியாசாலை பற்றி அறிஞர் பெருமக்கள் வெளியிட்ட எண்ணத்துளிகளும் இடமபெற்றுச் சிறப்பு மலரை மணம் வீசச் செய்கின்றன.

பாட்டுக்கொரு புலவர் பாரதியின் நூற்றாண்டு விழாவை நினைவுபடுத்தும் வகையில் பாரதியின் பாடல்களில் ஆய்வுக் கட்டுரைகள் பல இடம்பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாது பாரதியின் வாழ்த்தினைப் பெற்ற சங்கம் தன் மணி விழாவில் பாரதிக்கு விழா எடுத்துச் சிறப்பிப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சங்கத்தார் பெருமுயற்சியை மேற்கொண்டு – பல திங்களாக உழைத்த உழைப்பின் பலனே – இன்று வெளியாகும் இச் சிறிய மலர். மலருக்கு ஆக்கம் தந்த அனைத்து அங்கத்தினர்கத்ளுக்கும் மலர்க் குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவின்பெறு கட்டுரைகள் தந்த அறிஞர் பெருமக்களுக்கும், கவிஞர்களுக்கும், விளம்பரம் தந்து மலர் வெளியிட மிகத் துணையாக இருந்த வணிகப் பெருமக்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர் சிறக்க வாழ்த்திய ஆன்றோர்களுக்கும், தலைமை தாங்கி வாழ்த்தியருளிய டாக்டர் ராஜாசர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்களுக்கும் மதுரை வங்கியின் நிர்வாக இயக்குநரும், தலைவருமான திரு, இராம. முத்தையா அவர்களுக்கும், வாழ்த்திப் பேருரையாற்றிய தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநரான வணக்கத்திற்குரிய பெருந்தகை டாக்டர், திரு, கி. வேங்கிட சுப்பிரமணியன் அவர்களுக்கும் எங்கள் நன்றியை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை அச்சுப் பதித்த புதுவயல் ஜி. டி. என். ஏ அச்சகத்தாருக்கும், விளம்பரப் பகுதிகளை அச்சுப் பதித்த காரைக்குடி ஸ்ரீராம் பிரிண்டர்ஸ் உரிமையாளருக்கும் அட்டைப் பகுதியையும் புகைப்படங்களையும் அச்சுப் பதித்த மதுரை பாலாம்பிகா ஆர்ட் பிரஸ் உரிமையாளருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

**வாழ்க தமிழ்!** வளர்க சங்கம்!

--மலர்க் குழுவினர்.

# காணிக்கை



வெள்ளிக் கலைமகளே
விணைக் கரத்தோளே!
உள்ளம் உவந்தினிதே
உன்னடி சூடிட்டோம்
பொன்மணி மலர்தனையே!

-மலர்க்குழுவினர்

Dr. RAJAH
SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD

CHETTINAD HOUSE,
RAJAH ANNAMALAIPURAM
MADRAS - 28.
22 - 5 - 82.

அன்புள்ள ஐயா,

தங்கள் அன்புள்ள 14 - 5 - 82உ கடிதம் கிடைத்தது. தங்களுக்கும் தங்கள் சங்க அங்கத்தினர்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கம் தமிழ்ப்பணியும், கல்விப்பணியும் 60 ஆண்டு காலமாக தொடர்ந்து மிக்க சிறப்புடன் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் தொண்டாற்றிவருவதை நான் நன்கறிவேன். 60 ஆண்டு தொண்டினையொட்டி மலர் வெளியிட தாங்கள் தீர்மானித்திருப்பதும் மிகவும் பொருத்தமே. தங்கள் பெருமுயற்சி வெற்றிபெறவும், ஸ்ரீ சரஸ்வதி சங்கம் தம் பணியை மேலும், மேலும் மிக்க சிறப்புடன் ஆற்றிவரவும் வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,

மு. அ. முத்தையா செட்டியார்.

ஆதிபகவன் முதற்றே உலகு

# திருக்குறள் பீடம்

குருபழநி ஆதீனம், குருதலம், மதுராந்தகம் - 603 306.

12 - 4 - 82

ஏற தேறும் இடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்கு
ஊறி யூறி உருகுமென் உள்ளமே.

(அப்பர்)

பேராசிரியர்ப் பெருந்தகை

**திரு. பழ. முத்தப்பன்** அவர்கட்கு அன்பு பல,

காலவெள்ளத்தால் அலைக் கழக்கப்படும் நாகரிகப் புனையைத் துன்பப் புயலிலிருந்து காத்து உய்திக்கரை சேர்க்கும் உதவிக்கருவிகளே நூல்களும், சங்கங்களும், அவற்றைப் பாது காத்துக் கொள்வதும், போற்றிப் பயன் அடைவதும் வாழ்வின் வெற்றிக்கு அடிப்படை. இத்தகு பெருமைக்குரிய அறிவுப் பனியிலீடுபட்டு உலகை வாழ வைக்கும் நிறுவனங்களில் ஒன்றாய முகவை, புதுவயல் ஸ்ரீ சரசுவதி சங்கம் உலகுக்கு உண்மைப் பொருளை உணர்த்தி வாழ்வாங்கு வாழ உதவித் தன் மணிவிழாவினைக் கொண்டாடுவதோடு தானீன்ற ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலையின் மூலம் ஆன்ற பெருமக்களை உருவாக்கி அதன் பொன் விழாவினைக் கண்டு களிக்கும் பேறு பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

மணிவிழாக் காணும் ஸ்ரீ சரசுவதி சங்கமும் பொன் விழாவில் திளைக்கும் ஸ்ரீ சரசுவதி வித்யாசாலையும் மேலும் சிறந்து உலகைத் தமிழ்ப் பணியிலும் சமயப் பணியிலும் ஈடுபடுத்திப் பெருவாழ்வு வாழ, சோதியாய், சுடராய், சூழ் ஒளி விளக்காய்த் திகழும் 'ஆதி பகவனின்' இணையடிகளை நாளும் வந்தித்து வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள,

குருபழநி அடிகள்
திருக்குறள் பீடாதிபதிகள்

HIS HOLINESS

Sri-la-Sri Arunagirinatha Sri Gnanasambanda Desika Paramachariga Swamigal

**292nd Guru Maha Sannidhanam & Aadheena Karthar**

MADURAI AADHEENAM

70, South Avani Moola Street,
**MADURAI - 625 001.**
(S. INDIA)

27 - 3 - 82

# ஆசியுரை

**எல்லாம்வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.**

செட்டிநாட்டு மண் மணக்க ஸ்ரீ சரஸ்வதி சங்கம் தமிழ்ப் பணியும் சைவப்பணியும் பாரில் பலரும் புகழ்ந்திடும் வண்ணம் இயற்றி வருவதை நாம் நன்கு அறிவோம். கல்விப் பணியிலும் தங்கள் சங்கம் பெயர் பெற்று வருகிறது. இதைக் குறிக்க விழா எடுப்பிக்க இருப்பது மகிழ்ச்சிக்குரியது. சங்கத்தின் மணி விழாவும் பள்ளியின் பொன் விழாவும் ஒரு சேரக் கொண்டாடத் திருவருள் பாலித்திருப்பதையும் அறிந்தோம்.

விழா மலர் சிறக்க கட்டுரைகளில் கல்வித்தரம் பொருக்கும் கருத்துக்கள் பொலிந்திடுக. பொன்னனை வாழ்வை விழா எடுத்து மகிழும் அன்பர்கள் பகிர்ந்திட எல்லாம்வல்ல ஸ்ரீ சோமசுந்தரப் பெருமாள் திருவருள் பாலிக்க வேணுமாய்ப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**எல்லோருக்கும் ஆசீர்வாதம்.**

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி,

சென்னை - 600113.

அன்புடையீர், 5 - 5 - 82

வணக்கம்.

ஸ்ரீ சரஸ்வதி சங்கம், ஸ்ரீ சரஸ்வதி வித்தியா சாலை இவைகளின் மணி விழாவும், பொன் விழாவும் நடக்க இருப்பது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். பெண் கல்வியின் பெருமையினைத் தமிழ் சமுதாயம் மட்டுமின்றி உலக மக்களும் உணர்ந்து, உலகப் பெண்டிர் அனைவரும் கல்வி கற்றால் தமிழ்ச் சமுதாயமும், உலக மக்களும் உயர்ந்த நிலையை அடைவர் என்பதில் ஐயமில்லை.

ஒரு இனம் அல்லது நாட்டின் வளர்ச்சிக்கு அவ்வினத்தின் அல்லது நாட்டின் பெண்களின் கல்வி வளர்ச்சிதான் அடிப்படை. பல பேரறிஞர்களோடு தொடர்புள்ள இந்நிறுவனம் எல்லா நிலைகளிலும் வளர இறைவனை வணங்குகின்றேன். இன்னும் தொடங்க இருக்கும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி எல்லா நிலைகளிலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

ச. வே. சுப்பிரமணியன்.

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க.

தொலைபேசி : 26479.

வித்துவான்,
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூர் ஆதீனம்.

பேரூர் அஞ்சல்,
கோயமுத்தூர்-641 010.

நாள் 28 - 3 - 82

# வாழ்த்துப் பா.

சான்றோர் போற்றும் புதுவயலில் சரசுவதி சங்கம் தனைத் தொடங்கி
ஆன்ற அறிவும் சிந்தனையும் அமைந்த சான்றோர் அறுபதின் மேல்
தோன்றும் விழாக் கண்டுள்ளார் நற்றொடர்பாம் பள்ளி வளர்த்
துள்ளார்கள்
ஏன்ற வகையில் பணிபலசெய் இவர்தம் தொண்டு வளர்ந்திடுக

கல்வி நலமும் தமிழநெறியும் கலந்து பண்பாம் அறநெறியால்
செல்வம் சேர்க்கும் தமிழ் மக்கள் சிறந்த சமய நெறி வளர்த்து
ஒல்லும் வகையால் அறவினையை ஓவாதாற்றிப் பெண்களுக்கு
நல்ல பள்ளி உயர்நிலையில் நடத்தி வாழ்க பல்லாண்டு

கலைகள் வளர சரஸ்வதிபேர் சங்கங் கண்டு பள்ளியினை
நிலையாய்ப் போற்றி பொன்விழா நிகழ்த்தி நாளும் பெண்களினம்
மலைவில்லாமல் கற்றுயர வளஞ்சேர் பள்ளிதனைத் தொடங்கி
நிலையாம் அறஞ்செய் பண்பாளர் நீடு வாழ்க பல்லாண்டு.

அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமியடிகள்.

# தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்
துணை வேந்தர்.

நாள்: 25 - 3 - 82

## வாழ்த்து

சரஸ்வதி சங்கம் போன்ற
நிறுவனங்கள் ஊர் தோறும்
தமிழின் பெருமையைப் பரப்பின
தமிழனின் வரலாற்றுப் பெருமையை
விளக்கின. வருங்காலத்தில்
இறுமாப்புடன் தமிழன் முன்னேற
வழி செய்தன. எனவே உங்கள்
பணி சிறக்க வாழ்த்தும்

அன்பன்,

வ. அய். சுப்பிரமணியம்

உ
சிவசிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்

திருப்பானந்தாள்-612504.
(தஞ்சை ஜில்லா)

தேதி: 24 - 3 - 1982

புதுவயல், ஸ்ரீ சரஸ்வதி சங்கம் செயலர் பழ. முத்தப்பன் அவர்கட்குச் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க

உலகியலை உணர்ந்து ஒட்ட ஒழுகவும் உயர்வு பெறவும் பள்ளிக்கல்வி இன்றியமையாதது போல உளநிலையில் அமைகின்ற அகவாழ்வுக்குப்பக்தி மார்க்கவழிப்-படுத்தலுக்கு சமய அறிவு மிகவும் அவசியமானதாகும், **'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'** என்பது முதுநூல் வாக்கு.

கற்றதன் பயனையுணர்ந்து, கடவுள்நெறி பேணி தாம்பெற்ற பேரின்பத்தை உலகினர் பெற விழைந்து நல்லுளங்கொண்டு பணியாற்றி வருகின்ற அன்பர்களின் செயலாற்றலால் சீரிய புகழை எய்திச் செழித்து வருகின்ற சங்கத்தின் **மணிவிழாவும்,** கலைதெரி கழகத்தின் **பொன்விழா-வும்** இனிதே நிகழவும், சமய, கல்விப் பணிவரிசையில் நிறுவனங்கள் நிலைத்த-நீடித்த-புகழைப் பெறவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

- சுபம் -

சிவ சிவ.

டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணியன், எம். ஏ; பி. எல்; பி. டி; பிஎச். டி;
பள்ளிக் கல்வி இயக்குநர்,
தலைவர், மேனிலைக் கல்வி வாரியம்,
தமிழ்நாடு.

அன்புள்ள திரு. பழ. முத்தப்பன்,

புதுவயல், ஸ்ரீ சரஸ்வதி சங்கம் கடந்த 60வது ஆண்டுகளாக தமிழ்ப்பணியும், கல்விப்பணியும் ஆற்றி உள்ளதன் பொருட்டு மணிவிழா எடுக்க இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், இச்சங்கம் தொடக்கப்பள்ளி ஒன்றினையும் நன்முறையில் நடத்தி இளம் மாணவர்களின் நன்னடத்தை வளர்ச்சிக்கு உதவுவதும் போற்றுதற்குரியது.

சங்த்தின் மணிவிழாவும், தொடக்கப்பள்ளியின் பொன்-விழாவும் இனிது நடைபெற என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

தங்களன்புள்ள,
(கி. வேங்கடசுப்ரமணியன்)

உ
சிவமயம்

# வாழ்த்துரை.

இராமநாத ஞான தேசிகர். கோவிலூர், ஆதீனம்.

சுமார் அறுபது ஆண்டுகட்கு முன்னர், இரத்தின தன மகுடபூபால வைசியர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்து இளஞ் சந்ததியினரிடையே புத்துணர்ச்சி ஊற்றெடுத்துப் பொங்கியது. பொதுவாக நகரத்தார்களிடையே "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன" என்று ஒதுங்கியிருந்த மனப்போக்கு மாறி தேச விடுதலை, சமூக சீர்திருத்தம் முதலான பொதுநலப் பணிகளில் தீவிர நாட்டங்கொண்டது இளைஞர் சமுதாயம்.

தியாகப் பெருவீரர்களான, திரு. வ. வெ. சு.திரு.அய்யர், திரு. சுப்பிரமண்ய சிவா, திரு. வ. உ. சி., திரு. மகாகவி சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் போன்ற பல பெருந் தலைவர்களின் செட்டிநாட்டு விஜயத்தால் தனவணிக இளைஞர்களிடையே சுதந்தர உணர்வும் சமூக சீர்திருத்த வேட்கையும் மேலும் வலுப்பெற்று வளர்ந்தது. நகரத்தார் சமுதாயத்தில் அந்நாளில் இருந்துவந்த சிலஅர்த்தமற்றதும் காலத்துக்கு ஒவ்வாததுமான பழய பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகள் ஆகியன இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டின. அதன் காரணமாக செட்டிமார் நாட்டின் பல ஊர்களில் "தனவைசிய ஊழியர் சங்கம்" முதலான பல சங்கங்கள் தோற்றுவிக்கப்பெற்றன தேசீய விடுதலைக்கும் சமூக மேம்பாட்டிற்கும் இச் சங்கங்கள் செய்துள்ள பெரும்பணிகள் என்றும் போற்றத்தக்கனவாகும்.

அந்நாளில் காரைக்குடிக்கு விஜயம் செய்த மகாகவி பாரதியார், தனவணிக இளைஞர்களின் சிறப்பான சேவைகளைப் பாராட்டி ஏழு பாடல்கள் இயற்றியுள்ளார். அதில்,

"தத்துபுகழ் வளப்பாண்டி நாட்டினில்கா
      ரைக்குடியூர் தனிலே சால
உத்தமராம் தனவணிகர் குலத்துதித்த
      இளைஞர்பலர் ஊக்கம் மிக்கார்
உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
      தொண்டொன்றே வழியாக் கண்டார்"

"பலநூல்கள் பதிப்பித்தும் பலபெரியோர்
பரசங்கம் பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா
லைபலவும் நாட்டி யும்தம்
குலம்உயர நகர்உயர நாடுஉயர
உழைக்கின்றார் கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி
வாழ்ந்துஒளிர்க நிலத்தின் மீதே"

என்று வாயார வாழ்த்துகின்றார்.

அந்நாளில் புத்துணர்வு பெற்ற, ஊக்கம் மிக்க புதுவயல் நகரத்தார் இளைஞர்களால் தோற்றுமாக்கப் பெற்றது இந்நாள் அறுபது ஆண்டு விழாக்காணும் 'சரஸ்வதி சங்கம்' சரஸ்வதி சங்கத்தின் செல்லக் குழந்தை சரஸ்வதி வித்தியாசாலை.

அப்பொழுது செட்டிமார் நாட்டின் பல ஊர்களில் சங்கங்கள், வித்தியா சாலைகள், வாசகசாலைகள், தோற்றுவிக்கப் பெற்றன. ஆனால் அவைகளில் சில காலப்போக்கில் கவனிப்பாரின்றி மறைந்துவிட்டன. [எல்லா இடர்ப்பாடுகளையும் எதிர்த்து நின்று ஆல் போல் தழைத்து ஆறுபது ஆண்டையும் தாண்டி அரும் பணி ஆற்றிவரும் புதுவயல் சரஸ்வதி சங்கமும் சரஸ்வதி வித்தியாசாலையும் பெரிதும் பாராட்டுக்குரியவை.

அன்றுபோல் இன்றும் ஆடம்பரமற்ற முறையில் நாளுக்கு நாள் சிறந்து வளர்ந்துவரும் சரஸ்வதி சங்கத்தையும் சரஸ்வதி வித்தியாசாலையையும் சோர்வடையாமல் கண்காணித்துவரும் நிர்வாகக் குழுவினருக்கு கயிலாசவிநாயகப் பெருமான் கருணையால் எல்லா நலன்களும் நிறைந்து விளங்குவதாக!

கலைத் தெய்வத்தின் பெயர்தாங்கி விளங்கும் சரஸ்வதி வித்தியாசாலை மேன் மேலும் உயர்ந்து பல் கலைகளுக்கும் தாயகமாக விளங்கவும் சரஸ்வதி சங்கம் மகாகவி பாரதியார் வாக்குப்படி பல நூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர் பிரசங்கம் பண்ணுவித்தும், குலம் உயர, நகர் உயர, நாடு உயரத் தொண்டாற்றியும் புகழ் பெற்று விளங்க தேவி பாரசக்தியின் திருவருளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்,

கோவிலூர்.
21—5—1982.

இராமநாத ஞான தேசிகர்,
(கோவிலூர் ஆதீனம்.)

[மலருக்கு வாழ்த்து தந்த மாமுனிகள் முக்தியடைந்த நாள் 2—7—82 அன்னாரின் அருள்வேண்டிப் பணிகின்றோம்.

—மலர்க் குழுவினர்.]

அன்று மூவேந்தர் வளர்த்த தமிழை இன்று வளர்த்திட
நம் சங்கத்தை தோற்றுவித்த ஏற்றமிகு பண்பாளர் மூவர்.



பெரி. சித. இராமசாமி



சா. சிதம்பரம்
அமரர்



பெரி. அரு. பெரியகருப்பன்
அமரர்

# அறுபதாண்டு வரலாற்றுப் பாதையில் ஸ்ரீ சரசுவதி சங்கம்.

பெரி. சித. இராமசாமி — தலைவர்.

என் வாழ்க்கையின் கடந்த அறுபதாண்டு கால வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கிறேன். அவை ஏதோ கடந்து போன வாழ்க்கையல்ல. என் நெஞ்சில்-ஏன் எங்கள் சங்கமென்னும் குடும்பத்தில் பசுமை மாறுக் காலக் கட்டங்கள். இயற்கை சூழ்ந்த புதுவயல் நகரில் சாலிவாஹன சக ஆண்டு 1845. கலியுக ஆண்டு 5024 துந்துபி ஆண்டு ஆடித் திங்கள் ஒன்பதாம் நாள் (22 –7—1922) திங்கட்கிழமை அமாவாசை திதி பூசநக்ஷத்திரம் அமிர்தயோகம், சித்த யோகம் கூடிய நல்ல மங்களகரமான மாலை நேரத்தில் எங்கள் சரசுவதி சங்கம் தோற்றுவிக்கப் பெற்றது.

சங்கம் தோன்றிய அந்த நாளை நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது. இந்நகர் அ. மு. வீர. கட்டிட கேட்டில் உயர்திரு. சா. சிதம்பரம் செட்டியார் அவர்களும், உயர்திரு. பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் அவர்களும், நானும் ஆகிய மூவரும் சேர்ந்து அந்த நன்னாளில் சங்கத்தினைத் தொடங்கி, தொடக்க விழாவை நடத்தினோம். அந்நாளில் ஊரெல்லாம் இளைஞர் சங்கம் என்ற பெயருடன் பல சங்கங்கள் இருக்க நாங்கள் மட்டும்தான் கல்விக்கரசி சரசுவதியின் பெயரில் சங்கத்தை துவங்கினோம். அந்த ஆரம்ப விழாவிற்குத் தலைமை தாங்கிய பெருந்தகை எங்கள் வழிபாட்டிற்குரிய கோட்டையூர், திரு. **அ. ராம. அ. கருப்பன் செட்டியார்** அவர்கள் (ஏ.கே. செட்டியார், குமரி மலர் ஆசிரியர்.) அவர்களின் கைராசிதான் இன்று சங்கம் பெற்றிருக்கும் வளர்ச்சி என்றால் மிகையாகா. அன்றைய சந்தா 0-12-0 ஆகும்.

திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள் தொடங்கிய சங்கத்தில் மாதம் தோறும் கூட்டங்கள் நடந்தன. நம் பாரதநாடு அடிமைப பட்டுக்கிடந்த அந்தக் காலத்தில் தேசப் பற்றையும், கொல்லாமையையும் அடிப்படையாகக் கொண்டு மாதக் கூட்டங்கள் நடந்தன. கால வெள்ளத்தில் அ. மு. வீர. கட்டிடக் கேட்டில் பிறந்த சங்கம் திரு. அ. ப. சி. மு. சி. அவர்கள் கட்டிடக் கேட்டிலும், திரு. பெ. ப. வி. சித. பங்களா மேல் மாடியிலும், திரு. பெரி. சித. ராம. கட்டிடக் கேட்டிலும், மாறி மாறிப் பணியைச் செய்தது. இறுதியில் திரு. யெ. பெரி. பங்களாக் கேட்டில் சில ஆண்டுகள் சிறப்பான பணியைச் செய்து **ஸ்ரீசரசுவதி வித்தியாசாலையை** உருவாக்கி அதன் மூலமாக கவின்மிகு கட்டிடத்தைப் பெற்று இன்று அருங்கலைகளை வளர்த்து வருகிறது.

சங்கத்தின் மாதக் கூட்டங்கள் அக்கால உயர்ந்த அரசியல் பேச்சாளர்களையும், இலக்கிய பேச்சாளர்களையும் கொண்டு நடத்தப் பெற்றன. சங்கத்துப் பணிகளை இளைஞர்களாகிய நாங்களே (இடம் சுத்தம் செய்தல், தோரணங்கள் கட்டுதல் போன்ற பணிகள்) செய்து வந்தோம். அக்காலத்தில் ஒரு முறை **ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள்** எங்கள் சங்கத்திற்கு வருகைதந்து பேசிய போது எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அமைதியோடு அதனைச் சமாளித்துக் கூட்டம் நடத்தியது என் நினைவுக்கு வருகிறது. அதுபோலச் செக்கிழுத்த செம்மல் **வ. உ. சி. அவர்கள்** சங்கத்தின் 13-ஆம் ஆண்டு விழாவிற்குத் (28—4—1935) தலைமை தாங்கிய போது சங்கத்தின் பெருமை கண்டு ஒரு வாரம் தங்கி எங்களோடு ஒருவராக வாழ்ந்தமை என் நெஞ்சத்தில் திரைப்படமாக ஓடுகிறது. இன்னும் தமிழ்த் தென்றல் **திரு. வி. க.**, பண்டிதமணி. **கதிரேசன் செட்டியார், டி. கே. சி.** கல்கி. **இரா. கிருஷ்ணமூர்த்தி, சுவாமி சித்பவானந்தா, சச்சிதானந்தம் பிள்ளை** போன்றவர்கள் சங்க விழாககளுக்கு வருகைதந்து சிறப்பித்தமையை நெஞ்சார மகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன்.

சங்கத்தைத் தோற்றுவித்தவர்கள் நாங்கள் மூவராக இருந்தாலும் திரு. யெ. பெரி. வீரப்ப செட்டியார், பழ. ப. ப. வீரப்ப செட்டியார், திரு. யெ. அ. ப. வீர. பழனியப்ப செட்டியார், திரு. அசு. பழ. வீர. இராமசாமி செட்டியாா, திரு. பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார், திரு. ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியார், திரு. சுப. சரு ராம. சுப்பிரமணியன் செட்டியார், திரு பெரி. நா. வெங்கடாசலம் செட்டியார், திரு. சுப. சித. லெட்சுமணன் செட்டியார், திரு. கு. வீர. பழ. அ. பழனியப்ப செட்டியார், திரு. ப. வடு. பெரி. காசிச் செட்டியார், போன்ற பெரியார்கள் ஆற்றிய பணிகள் தலை வணங்கிப் போற்றுதற் குரியனவாகும். அவர்களை எல்லாம் இந்த மணிவிழா நேரத்தில் நெஞ்சாரப் போற்றி மகிழ்கிறேன்.

மாதக் கூட்டங்கள் நடத்துவதோடு அல்லாமல் கொல்லாமையை வலியுறுத்தும் சிறப்புக்கூட்டங்களையும் அவ்வப்போது நடத்தி வந்தோம். அதன் சாரமாக 1. உய்யவந்த அம்மனின் உத்தரவு 2. சைவம் பிடிக்கக்கூடாதா 3. என்ன செய்யப் போகிறீர்கள் என்பன போன்ற நூலகளை வெளியிட்டோம். அவை மட்டுமல்லாது பழஞ்சுவடிகளைப பதிப்பிக்கு மூகத்தான உமையாம்பிகை நவரத்தின ஆசிரியம் என்ற அறிய நூலையும் வெளியிட்டோம். இத்கைய பணிகளைச் செய்து வந்த பொழுதுதான் சங்கம் தோன்றிய பத்தாவது ஆண்டு சரசுவதி வித்தியாசாலையைத் தோற்றிக் கல்விப் பணியைச் செய்ய ஆரம்பித்தோம். இன்றுவரை அதனைக் காப்பாற்றி வருகிறோம்.

மாதக்கூட்டங்கள் நடத்துவதோடு அல்லாது ஆண்டுதோறும் ஆண்டுவிழா நடத்தித் தமிழையும் கலைமகளையும் போற்றுவது எங்கள் குறிக்கோளாகும் அந்த அடிப்படையில்தான் சங்கத்தின் அங்கத்தினர்கள் கூட்டு முயற்சியால் **வெள்ளியில் கலைமகளின்** திருவுருவம் எழுப்பப் பெற்றது ஆண்டு விழாக்கள் அறுபது நடந்திருப்பது எங்கள்

சங்கத்தின் பெருமைக்கோர் எடுத்துக் காட்டாகும். சங்கத்திற்கு வருகை தராத தமிழ்ப்புலவர்கள் அன்று தொட்டு இன்று வரையில்லை.

மேலும் சங்கத்தின் அங்கத்தினர் களின் இல்லங்களில் நடைபெறும் அனைத்துச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் சங்கத்தின் சாரபில் வாழ்த்திதழ் வாசித் தளிக்கும் பணியைத்தொடர்ந்து செய்து வருகிறோம்.

இன்று சங்கம் தோன்றி அறுபது ஆண்டு காலம் ஆகிறது என்று சொன் னால்-அதனை நடத்தி வந்த அங்கத்தினர் களின் ஆக்கமும், செயலர்களாக விளங் கிய அன்பர்களின் பணியுமே அதற்குக் காரணம் சங்கம்தோன்றி பத்து ஆண்டில் வித்தியாசாலை தொடங்கிற்று. இப் பொழுது அறுபதாண்டு கழித்துப்பெண் கள் உயர்நிலைப் பள்ளி உருவாகிறது. இவையெல்லாம் எங்கள் இதய தெய்வமா கலைமகளின் நற்கருணையால் நடை பெறுவன ஆகும்.

சங்கத்தின் வெள்ளி விழா 1947 மேத்திங்கள் 10, 11, 12 ஆகிய மூன்று நாட்கள் மிகச்சிறப்பாக நடந்தன. 25 ஜோடி காளைகள் பூட்டப் பெற்ற தேரில் கலைமகள் ஊர்வலம் நடைபெற்றது. இந்திய விஞ்ஞானிகளில் குறிப்பிடத்தக்க வரான **திரு. K.S. கிருஷ்ணன் அவர்களும் திரு டி. கே. சி., திரு. ம. பொ. சி., திரு கல்கி** ஆகியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை என்றும் மறக்க இயலா. அம் மூன்று நாள்களும தேர்த் திருவிழாபோல் புதுவயல் விழாக்கோலம் பூண்டிருந்தது. **திரு. K. S கிருஷ்ணன் அவர்கள்** நான் காம் நாள் அரிய உரை ஒன்று விஞ்ஞா னத்தைப் பற்றி நிகழ்த்தினார்கள். அவ் வுரை அந்நாளில் வெளிநாட்டாராலும் போற்றிப் புகழப் பெற்றமை எங்கள்சங்க வரலாற்றில் குறிப்பிடத் தக்கதாகும்.

அதுபோல சங்கத்தின் பொன்விழாவி 1972ஆம் ஆண்டு மேத்திங்கள் 22, 23, 24 ஆகிய மூன்றுநாட்கள் நடைபெற்றன. **உயர்திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. டாக்டர். வை. இரத்தினசபாபதி, தவத் திரு. குன்றக்குடி அடிகளார்** ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பொழுது மணி விழாவில் தக்க தமிழறிஞர் பலர் கலந்து கொள்ள சங்கம் பெருமை யடைகிறது.

அக்காலத்தில் ரெங்கோன், பர்மா போன்ற வெளி நாடுகளில் பொருளீட்டச் சென்று—தாய் நாடு திரும்பி வந்தவுடன் சங்க அங்கத்தினர்கள்-ஸ்ரீ சரசுவதி சங்கத் தின் வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். எனவேதான் சங்கம் மிகப் பெருமைகளை அடைந்தது. தற் காலத்தில் உள்நாட்டிலேயே பொருளீட்டு வது என்பதால் - அங்கத்தினர்கள் முழுமையும் பங்கு பெற முடியவில்லை அந்தக்குறையை நீக்க பதினைந்து வரு டங்களாக இன்றைய செயலர் **பழ. முத்தப்பன்** அவர்கள் அங்கத்தினர்களின் ஆதாரவோடு தன்னலங்கருதாது-முழுமை யும்பாடுபட்டு வருகிறார்கள். அவர்களின் முயற்சியால்தான் இன்றைய விழாவும்-பெண்கள் உயர்நிலைப் பள்ளி உருவாவ தும் ஆகும் என்றால் அது தவறில்லை.

இத்தகைய பெருமையுடைய சங்கம் மேலும் மேலும் ஆக்கம் பெற-அனைத் துப் பெரியோர்களும் ஆதரவு தநதிட வேண்டிப்பணிகிறேன்.

# ஸ்ரீ சரசுவதி சங்கம். புதுவயல்,

தலைவர் : பெரி. சித. இராமசாமி.

செயலர் : புலவர் பழ. முத்தப்பன். எம். ஏ.

## அங்கத்தினர்கள்

1 பெரி. வீர. இராம. பெரியணன்
2 மு. வினைதீர்த்தான்
3 சோம. இராமநாதன்
4 சே. பழனியப்பன்
5 சித. வயி. வயிரவன்
6 மெ. சிதம்பரம்
7 வீர. பழ. வினைதீர்த்தான்
8 யெ. பெரி. வீர. சேலையப்பன்
9 சித. அரு. வீரப்பன்
10 அ. அழ. அண்ணாமலை
11 சித. வயி. சிதம்பரம்
12 ப. பெ. அரு. பழ. இராம. அருணாசலம்
13 மெ. கரு. அண்ணாமலை
14 கா. அருணாசலம்
15 டாக்டர் வீர. இராமனுதன் M. Sc
16 வீர. வீர. சோலையப்பன் B. Sc
17 V. இராமசாமி
18 சித. வினைதீர்த்தான்
19 ந. சுப. செல்லப்பன்
20 கா. வீரப்பன்
21 வீர. நாராயணன் B. E.
22 யெ. மு. சொக்கலிங்கம்
23 யெ. மு. பெரியணன்
24 சித. நல்ல பெருமாள்
25 வீர. பழமலை
26 பெரி. வடு. வீர. வடுகநாதன்
27 ராம. சித. ராமசாமி
28 அ. அருணாசலம்
29 உ. இராம. பெ. ராம. முத்துக்கருப்பன்
30 சித. இராம. சிதம்பரம் B. E
31 V. பழனியப்பன் M. A.
32 வீர. கதிரேசன்
33 அழகு. நாகப்பன்
34 பழ. ஏகப்பன்
35 பெ. அரு. நா. வீரப்பன்
36 ராம. வீரப்பன்
37 மு. பெரி. சின்னக்கருப்பன்
38 சா. சித. திருநாவுக்கரசு
39 கு. ராம. வீர. இராமநாதன்
40 சித. ராம. ராமனுதன்
41 சோம. சுப்பிரமணியன்
42 சுப. இராமனுதன்
43 சுப. வேலப்பன்
44 பெரி. அழகப்பன்
45 வெ. இராம. லெ. லெ. லெட்சுமணன்
46 இராம. சிதம்பரம்
47 பெ. ப. வி. ராம. முத்தப்பன்
48 பெரி. சிதம்பரம்
49 பழ. ரெங்கனுதன்
50 சுப. விர. சுப்பிரமணியன்
51 வீர. சா. வீர. வீரப்பன்
52 பழ, முத்துப்பழனியப்பன்
53 குழ. உடையப்பன்
54 இராம. வினைதீர்த்தான்
55 மெ. சித. மெய்யப்பன் B. E.
56 பழ. கோவிந்தன்

57 பெரி. நா. வே. நாராயணன்
58 நா. வே. சோம. காந்தி
59 சித, ராம. பெரியகருப்பன்
60 ப. மு. நா. மு. பழனியப்பன்
61 மு. ராம. ஆண்டாச் செட்டி
62 மு. ராம. நாராயணன்
63 மு. சு. ராமசாமி
64 வீர. அழ. வயிரவன்
65 பெரி சுப்பிரமணியன்
66 பெரி. நாராயணன்
67 செ. வ. லெட்ஷ்மணன்
68 செ. வ. விஸ்வநாதன்
69 அழகு. வீரப்பன்
70 ராம. இலக்குமணன்
71 ராம. விஸ்வநாதன்
72 சுப. நா. சுப்பிரமணியன்
73 அள. குப. சுப. வீர. சுப்பிரமணியன்
74 வீர. பழ. விரு. ரெங்கநாதன்
75 எ. அண. ப. வீர. பழ. வீரப்பன்
76 சோம. கண்ணன்
77 சோம. மீனாட்சிசுந்தரம்
78 அழகு. சுப்பிரமணியன்
79 சோம. ராமக்கிருஷ்ணன்
80 ராம, பெரியணன்
81 ராம. நாராயணன்
82 ஏ. வீரப்பன்

## முன்னாள் சங்க நிர்வாகிகள்

### தலைவர்களாக

திரு. சா. சிதம்பரம் அவர்கள்
,, வடு. மு. பழ. இராமநாதன் ,,
,, வீர. பழ. வினைதீர்த்தான் ,,
,, வீர. பழநியப்பன் ,,
,, வீர. சோலையப்பன் ,,
,, பழ. முத்துவள்ளியப்பன் ,,
,, மெ. சிதம்பரம் ,,
,, சே. பழநியப்பன் ,,
,, சித. அரு. வீரப்பன் ,,

### செயலாளர்களாக

திரு. பெரி. அரு. பெரியகருப்பன் அவர்கள்
,, சா. சிதம்பரம் ,,
,, வடு. மு. ராம. பழ. இராமநாதன் ,,
,, பெரி. சித. இராமசாமி ,,
,, மெ. சிதம்பரம் ,,
,, சே. பழநியப்பன் ,,
,, அ. ராமசாமி ,,
,, அழகு. உலகப்பன் ,,
,, நா. வயி. ரெங்கநாதன் ,,
,, சித. நல்லபெருமாள் ,,
,, சித. ராம. சிதம்பரம் B.E "
,, வி. பழநியப்பன் M. A. ,,
,, வீர. சோலையப்பன் ,,

### துணைச் செயலாளர்களாக

திரு. சித. இராமசாமி அவர்கள்
,, பெரி. அரு. பெரியகருப்பன் ,,
,, வடு. மு. ராம. பழ. இராமநாதன் ,,
,, சே. பழநியப்பன் அவர்கள்
,, சா. சிதம்பரம் ,,
,, வீர. சோலையப்பன் அவர்கள்
,, பழ. வீரப்பன் ,,
,, நா. செல்லப்பன் ,,
,, பழ. ஏகப்பன் B. Com. அவர்கள்

உ

# கல்விக்கு அரசியின் கருணை வேண்டி ...

மண்கண்ட வெண்குடைக் கிழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.


—சகலகலாவல்லி மாலை.

உரைத்தமிழ் மூவர் நாவி னூற்றெழும் அமுதைச் சங்கத்
திருக்கும்வெண் முத்தைக் கற்றோ ரென்னுமிக் கூட்டுந்தேனை
வரைத்தமிழ் முனிவன் நெஞ்ச மலர்க்கம லப்பூஞ்சேக்கைத்
திருத்தகும் அரச வன்னப் பேட்டினைச் சிந்தை செய்வாம்.

—திருவாப்பனூர்ப் புராணம்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—அடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

—சரசுவதி அந்தாதி.



கலைபகளின் புகழ்பாடும் வித்தியாசாலையின்
கவின்மிகு கட்டிடம் இன்று பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்
கலைக்கோவிலாய் இலங்கிடும் அழகிதே.

கலைமகளின் கலைக்கோயிலாம் வித்தியாசாலைக் கட்டிடம்
எழுந்திடக் கடமையாற்றிய மூவர்.



பெரி. வீர. ராம. பெரியணன்



செ. பெரி. வீர. வீரப்பன்
(அமரர்)



பெ. ப. வி. அரு. ராமசாமி
(அமரர்)

உ

முத்தமிழ் முழங்குக!

# பொன் விழாக்காணும் வித்தியாசாலை.

பெரி. வீர. இராம. பெரியணன்,
தலைவர்,
வித்தியாசாலை நிர்வாகக்குழு.

முச்சங்கம் வளர்த்த தமிழை இச்சங்கத்தில் வளர்த்திட இஞ்ஞான்று எழுந்த சங்கம் எங்கள் சரஸ்வதி சங்கம். சங்கத்தின் கொள்கைகளில் ஒன்றான "யாவினும் புண்ணியங்கோடி–ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற வாக்கை உறுதிப்படுத்தும் முகத்தான ஸ்ரீ சரசுவதிவித்தியாசாலையைச் சங்கம் தான் தோன்றிய பத்தாவது ஆண்டில் தொடங்கிற்று. ஆம் ........ஆங்கிரச ஆண்டு தைத்திங்கள் 4-ஆம் நாள் (16—1—1933) காலை 9-30 மணிக்கு இந்நகர் திரு. பெரி. சித. ராம. அவர்களின் கட்டிடக்கேட்டில் வித்தியாசாலை தோற்றுவிக்கப்பெற்றது. அந்த சிறந்த நாளில் மங்களகரமான நேரத்தில் குத்து விளக்கை ஏற்றிப் பள்ளியைத் தொடங்கிவைத்த பெருந்தகை காரைக்குடி திரு. ஆ. வி. லெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் ஆவார்கள். அவர்களின் திருக்கரத்தின் பெருமையால் இன்று வித்தியாசாலை உயர்நிலைப் பள்ளியாகும் பெருமை பெற்றது.

தொடங்கிய நாளில் 2 ஆசிரியர்களும், 14 மாணவிகளும், 6 மாணவர்களும் கல்வி பயின்றனர். முதன் முதலில் பெண் ஆசிரியை திரு. பத்மாவதி அம்மாள் அவர்களைக்கொண்டு-மாணவிகள் அதிகம் 6 பேரைக்கொண்டு பள்ளி நடைபெற்ற நிலையில்தான் போலும் இன்று பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயரும் நிலை பெற்றுள்ளது.

எவ்வித அரசு உதவியும் இல்லாமல் சங்க அங்கத்தினரின் பொருள் உதவியோடு சுமார் ஆறு ஆண்டுகள் நடைபெற்றுவந்த வித்தியாசாலை 1—7—1938ம் ஆண்டில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற பங்களாப் பள்ளியின் நிர்வாகத்தை ஏற்று ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயரைப் பதிவுசெய்து நடைபெறத் தொடங்கிற்று. வித்தியாசாலையில் ஒரு பெரிய சிறப்புப்பெறும் ஏட்டுக் கல்வி மட்டும் புகட்டாமல் அன்று முதல் இன்றுவரை - தொழிற்கல்வி, நாடகம், இறைவழிபாடு, ஒழுக்கம் இவற்றையும் மாணவ மாணவிகளுக்குப் புகட்டி வந்ததாகும்.

பழைய நினைவுகளில் என் நினைவில் இன்றும் நிலைநிற்பது பாரத நாட்டில் காகிதப் பற்றாக்குறை ஏற்பட்டபோது வித்தியாசாலை மாணவ, மாணவிகளால் ஆசிரியர் முனுசாமி பார்வையில் கைமுறைப் பயிற்சியில் காகிதம் செய்தமையாகும். அதுமட்டுமெல்லாமல் நூற்பு இயக்கமும், சாரணர் இயக்கமும், தேவாரம் ஓதலும் மகமை மாறா எண்ணங்களாகும்.

நாடகத்துறையாம் கலைத்துறையில் வித்தியாசாலை பெற்றிருக்கும் உயர்வு எந்தப் பள்ளியும் பெற்றிருக்காது என்று கூறலாம். தனக்கென சீன் செட் வைத்து – வசிகர சுந்தரி, அங்கும் இங்கும், பொன்னி, தீனபந்து, தேசத்தொண்டு, போன்ற பிரபலமான நாடகங்களை நடத்திச் சிறந்தது. நாடகம் என்று எண்ணும் போது மறைந்த திரு. S. P. வீரப்பா அவர்களை நாங்கள் நினைக்காமல் இருக்க இயலா. அவர்களின் சீரிய பணியால்தான் அனைத்து நாடகங்களும் நடைபெற்றன.

தொடக்க நாளில் பெரி. சித. ராம, பெரி. வீர. ராம., பெரி. யெ. வீர. ஆகியோரின் கட்டிடங்களில் தொடங்கிய பள்ளி தன் 7வது ஆண்டில் எங்கள் குடும்பத்தாரால் (அள. பெரி. வீர. ராம.) நன்கொடையாக மன மகிழ்வோடு அளித்த இடத்தில் – வெகுதான்ய ஆண்டு சித்திரைத் திங்கள் 31–ஆம் நாள் தென் ஆற்காடு மாவட்ட கல்வி அதிகாரி திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்டப்பெற்று – கவின் மிகு கட்டிடத்தைத் தனக்கெனப் பெற்றது. சங்க அங்கத்தினர்களின் பொருள் உதவியோடு இந்நகர் திரு. பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் அவர்கள் அளித்த பெரும் பொருளுதவியால் நானும் இந்நகர் யெ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்களும் மற்ற அன்பர்களும் மேற்பார்வையிட்டு இவ் வழகுக் கட்டிடம் எழுந்து கலைமகளின் புகழ் பரப்புகிறது. கலைமகளின் திருக்கோயிலாம் வித்தியாசாலைக் கட்டிடத்தை பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 11-ஆம் நாள் (24—4—1939) செட்டிநாட்டரசர் திரு. சா.ராம.மு.அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் திறந்துவைத்தமை வித்தியாசாலை வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். எங்கள் குடும்பத்தாரால் வழங்கப்பெற்ற இடத்தில் – கலைமகளுக்கு கலைக்கோவில் எழுந்ததில் நாங்கள் மிகப் பெருமை அடைகிறோம்.

விளையாட்டு இடங்களை இத்நகர் பெரி. நா. வெங்கிடாச்சலம் செட்டியார், அ. ப. சி. மு. சின்னையா செட்டியார். பழ. மு. பழ. வீர. முருகப்ப செட்டியார் ஆகிய பெருமக்கள் அனுமதி அளித்து உதவினார். அண்மைக் காலம் வரை (1981 வரை) பள்ளிக்கு விளையாட்டு இடம் பெரி. நா. வெ. நா. இடத்தில் அவர்களின் அனுமதியால் பயன்படுத்தப் பெற்றது. தற்பொழுது திரு. யெ.பெரி வீர.வீர. சோலையப்பன் நன்கொடையாகத் தந்திருக்கிற அவர்களின் தோட்டம் விளையாட்டு இடம் பயன் பெற்று வருகிறது. இவர்கள் அனைவர்க்கும் வித்தியாசாலையின் நிர்வாக முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்று வித்தியாசாலையின் உயர்வை எண்ணும்போது அதற்குப்பாடுபட்ட அமரர்கள். திருவாளர்கள் யெ. மு. முத்தப்ப செட்டியார், யெ. மு விசுவநாதன் செட்டியார், யெ. பெரி. வீர. பழனியப்ப செட்டியார், சுப. நாராயணன் செட்டியார், அ. ப. சி. மு. சின்னையா செட்டியார், அப. சி. வீர. சின்னையா செட்டியார், அள. குப. குமு. ராமசாமி செட்டியார் ஆகியோர்களைப் போற்றி மகிழ்கின்றோம்.

அதுபோல வித்தியாசாலையில் பணிபுரிந்த ஆசிரியப் பெருமக்களையும், இப்பொழுது பணிபுரிந்து வரும் ஆசிரியப்பெருமக்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.

தற்பொழுது வித்தியாசாலையில் உயர்துவக்கப் பள்ளியாக இருந்து – பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்வுபெற்று இருக்கின்றது. உயர்நிலைப் பள்ளிக்கு அரசினர்க்கு கட்டவேண்டிய வைப்பு நிதியின் முதற்பங்கு ஐம்பதாயிரத்தை கட்டுவதற்கு நன்கொடை அளித்துள்ள இந்நகர் திருவாளர்கள் யெ. மு. சொக்கலிங்கம் செட்டியார், மு. க. இராமசாமி செட்டியார், ப. பெ. அரு. ராம. பழ. ராம. அருணாச்சலம் செட்டியார், பெரி. சித. ராமசாமி செட்டியார், பெ. ப. வி. அரு. ராம. முத்தப்பன் செட்டியார் ஆகியோருக்கும் எங்கள் மனமுவந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் உயர்நிலைப் பள்ளிக்கு பல்வேறு நிலைகளில் நன்கொடைதந்து ஆதரித்த அனைவருக்கும்-எங்கள் நன்றி. இவ்வாறு கல்விப் பணியாம் அறப் பணியைச் செய்துவரும் வித்தியாசாலை மேலும் பல பணிகளைச் செய்து மேலோங்கிட அனைவரின் ஒத்துழைப்பையும், இறையருளையும் வேண்டுகிறேன்.

---

## வாழ்த்து

சு. ஆறுமுகம் பிள்ளை, பி. ஏ., பி. டி.,
மாவட்டக் கல்வி அலுவலர்,
தேவகோட்டை.

அன்புடையீர்! வணக்கம். தங்கள் சரசுவதி சங்கத்தின் சார்பில் " பொன்விழாவும், மணிவிழாவும் " நிகழ்த்த இருப்பதனை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தங்கள் சரசுவதி வித்தியாசாலை வீறுடன் வளர்ச்சி பெற்று அதன் பொன்விழாவும், மணிவிழாவும் நிகழ்த்தலின் நினைவாக மலர் வெளியிடுவது பாராட்டுதற்குரியதாகும்.

அதன் பணி பல்லாற்றானும் சிறந்த புகழ்வளர இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

கையொப்பம்.

# சங்கத்தின் பழைய நினைவுகள்

வீர. பழ. வினைதீர்த்தான்.
மேலாளர், ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம்,
வாராணாசி.

புதுவயல் நகரில் பொலிவுடன் விளங்கும் எங்கள் ஸ்ரீசரசுவதி சங்கம் மணிவிழாக் கொண்டாடும் நேரத்தில்—முக்தித் தலங்களில் ஒன்றான காசி நகரிலி-ருக்கும் நான் கடந்த காலங்களை நினைத்துப் பார்க்கிறேன். புதுவயல் நகரம் பல சிறப்புக்களைப் பெற்றதாகும் திருக்களர் ஆண்டவரும், கோவிலூர் வேதாந்த மடாலயத்தின் ஆதீனத் தலைவராக அலங்கரித்து வரும் – திருக்களர் சிவாலயத்தை கட்டியவரும், திருக்களரில் இஞ்ஞான்று சமாதி கொண்டு அருள் பாலித்து வருபவருமான இலுப்பக்குடிக் கோவிலைச் சேர்ந்த அருள்திரு வீரசேகர ஞான-தேசிக சுவாமிகள் அவதரித்த புண்ணியபூமி புதுவயலாகும்.

கோவிலூர் மடாலயத்தில் வேதம் பயின்று தன் குருவின் பாதுகையுடன் வெளிவந்து சாக்கையம்பதியில் வேதாந்த மடாலயத்தைத் தோற்றுவித்து, அதில் தன் குருவின் பாதுகையைக் கோவிலாகக் கொண்டு வணங்கி வேதாந்தப் பாடம் சொல்லி வேதாந்தத்தை வளர்த்த புண்ணிய சீலர்–இரணிக் கோவிலைச் சேர்ந்த அருள்திரு வீரப்ப சுவாமிகள் தோன்றிய பூமி புதுவயலாகும்.

சாக்கை உமையாம்பிகை உடனாகிய வீர சேகரப் பெருமான் மீது பக்திப் பாடல்கள் பாடி-வரலாறு பாடி வெளியிட்டவரும், நம் சங்கத்திற்கு பல பழைய இலக்கியங்களை அன்பளிப்புச் செய்தவருமான, இரணிக் கோவிலைச் சேர்ந்த புலவர் திருவாளர் நா. அ.ச. சண்முக ஐயா தோன்றிய நகரம் புதுவயலாகும். புதுவயல் ஞானப் பிரகாச சபையைத் தோற்றுவித்துப் பல ஆண்டு நடத்தியவரும், கவியெழுதுவதில் திறம் படைத்தவருமான திருவாளர் நடராஜபுரம் வெ. பெரி. வீர. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தோன்றியதும் புதுவயல் நகரம்நான்.

இத்தகையவர்களின் வழியில் இன்று வாழ்ந்து வரும் அறிஞர் பெருமக்கள் விஞ்ஞானத் துறையில் மூதறிஞர் எனக் கூறப் பெறும் டாக்டர் பட்டம் பெற்ற அறிஞர் வயிரவன் கோவிலைச் சேர்ந்த டாக்டர் வீர. இராமநாதன் அவர்கள் தோன்றியதும் இந்நகரே. அதுபோல இன்றைய சங்க செயலரும், தெ. ஆ. மாவட்-டத்தின் தமிழ்க் கல்லூரி பேராசிரியரும், தமிழகப் பேச்சாளர்களில் குறிப்பிடத்தக்க-வரும், சித்தாந்தப் புலவரும் பட்டிமன்ற மாமணி எனப் பட்டம் பெற்றவருமான புலவர் பழ. முத்தப்பன் அவர்கள் தோன்றியதும் புதுலயல் நகரமே.

இதுபோல பொறியியற் வல்லுநர்களான எங்கள் வித்தியாசாலைப் பழைய மாணவர்களான சித. ராம. சிதம்பரம், வீர. மெய்யப்பன், சித. மெய்யப்பன் போன்றவர்களும் புதுவயல் நகர் தந்த அறிஞர் பெருமக்களே ஆவர். இத்தகைய ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் தோன்றிய புதுவயல் நகரில் தோன்றியதுதான் நம் சரசுவதி சங்கம்.

சங்கம் தோன்றிய காலத்தை நினைக்கும்போது உள்ளமெலாம் பூரிக்கிறது. ஆடி அமாவாசையன்று தொடங்கப் பெற்றது சங்கம். தோற்றுவித்த பெருந்தகை அன்றைக்குத் திருவண்ணாமலையில் உயர் கல்வி பெற்று-இன்றைக்கு குமரிமலர் ஆசிரியராகவும் விளங்குகின்ற திருவாளர் அ. கருப்பன் செட்டியார் ஆவார்கள். அவர்கள் அன்று பேசிய கூட்டத்திற்கு வருகை தந்தோர் மிகச் சிலரே. ஆனால் இன்று சங்க மணிவிழாவிற்கு வருகை தந்திருப்போரை நினைக்கும்போது சங்கத்தின் வளர்ச்சி நன்கு தெரிகிறது. சங்கத்தின் வெள்ளிவிழா-புதுவயலில் ஒரு பெரிய திருவிழாவாகவே நடைபெற்றது. இன்று ஓய்வில் இருக்கும் நாங்களெல்லாம் அன்று ஓடியாடி வேலை செய்தமையை நினைக்கும் போது இன்று முடியவில்லையே என்ற ஏக்கம்தான் ஏற்படுகிறது.

சரசுவதி திருவுருவம் வெள்ளியால் செய்யப் பெற்றதாகும். அதைச் செய்த சிற்பி. திரு, முத்துக்குட்டி ஆச்சாரி ஆவார்கள். அத்திருவுருவத்தைப் வார்க்கும்போது நானும் உடனிருந்தேன். மிகவும் பயபக்தியோடு இறைவியை உருவாக்கினார்கள். எவ்விதப் பிரதி உதவியை எதிர்பார்க்காது பணி செய்தார்கள். இத்தகு அருள் உருவச் சிலை வேறு எங்கும் காண இயலாது.

அதுபோல இறைவணக்க மண்டபத்தில் இருக்கும் கலைமகளின் திருவுருவப் படம், சங்கம் ஆரம்பித்த இரண்டாவது ஆண்டில் ஏலக்கம்பெனியில் அரை ரூபாய் (இம்பொழுது 50 காசு) ஏலம் கேட்டு வாங்கியதாகும். கண்ணாடியில் உள்புறமாக உருவம் எழுதப்பெற்றது. அது படம் என்று எப்பொழுதும் எங்களுக்குத் தோன்றுவதே இல்லை. கலைவாணியே நேரில் காட்சியளிப்பதாகவே இன்றும் எங்களுக்குத் தோன்றும். அத்திருவருட் படத்தை அண்மையில் வித்தியாசாலைக்கு எழுந்தருளிய காமகோடி பீடாதிபதிகள் சிறப்பித்துக் கூறியதாக அன்பர்கள் எனக்கு எழுதியிருந்தார்கள்.

சங்கம் தோன்றிய போது புதுவயலில் பல சங்கங்கள் இருந்தன. ஆனால் நம் சங்கம்போல் அவை நீடிக்கவில்லை. அச்சங்கங்களைப் பற்றி பொன்விழா மலரில் திரு. A. K செட்டியார் அவர்கள் எழுதிய கட்டுரை மிகச் சிறப்பானதாகும். அக்காலத்தில் இருந்த சங்கங்கள் ஞானப் பிரகாசசபை, லலிதா விலாஸ் ரீடிங் ரூம் தெட்சணாமூர்த்தி சங்கம், தன வணிக நிலா போஜனக் கமிட்டி, இளைஞர் சங்கம் போன்றவையாகும். இதில் தன வணிக நிலா போஜனக் கமிட்டி சிலகாலம் தொண்டாற்றி இறுதியில் அதன் சாமான்கள் அனைத்தையும் நம் சங்கத்தில் ஒப்படைத்து

அதன் மெம்பர்கள் அனைவரும் நம் சங்க மெம்பர்களாகச் சேர்ந்தனர். நம் சங்கம் இன்று வரை ஏற்றம் பெற்று விளங்குவதற்குக் காரணம் மேற்கூறப்பட்ட கலைமகள் உருவச் சிலையும், திருஉருவப்படம் ஆகியவற்றின் அருட் பெருக்கே ஆகும்.

வித்தியாசாலை சங்கம் தோன்றிய பத்தாண்டில்-தோன்றி. இன்று பொன் விழாக் காணுகிறது. வித்தியாசாலையின் சிறப்பை எப்படி எடுத்துரைப்பது என்றே புரியவில்லை. வித்தியாசாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்ந்திருக்கிறது. அத்தகு உயர்வைப்பெற-சங்கச் செயலர் பழ. முத்தப்பன் பெருமுயற்சி செய்தமை ஊர் அறிந்த ஒன்றாகும். அம்முயற்சி வெற்றி பெற்றது என்றால் அதற்குக் காரணம் இன்று உயர்நிலைப்பள்ளி உறுப்பினர்கள் 12 பேரின் பெரிய உதவிகளே காரணம். சங்கத்தின் பொன் விழாவின் போதுதான் யெ. மு. குடும்பத்தாரின் தொடர்பு சங்கத்திற்கு ஏற்பட்டது. இன்று அத்தொடர்பு ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரோடி யெ. மு. சொக்கலிங்கம் அவர்களின் பெரும் முயற்சியாக உருவெடுத்திருக்கிறது. அவர்களுடன் திரு, மு. க. இராமசாமி செட்டியார் அவர்கள், திரு, ப. பெ. அரு. குடும்பத்தைச் சார்ந்த அருணாசலம் அவர்கள் ஆகியோர்கள் சேர்ந்து உயர்நிலைப் பள்ளிக்கு வைப்புநிதி அளித்தமை பாராட்டிற்குறியது. சங்கத்தின் அங்கத்தினர்கள் அனைவரின் சார்பாக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்து போற்றுகிறேன்.

மேற்கூறப் பெற்ற மூவருடன் நம் சங்கத்தோடும் வித்தியாசாலையோடும் பிரிக்கமுடியாத அன்பர்கள் பெரி. சித. ராமசாமி, திரு, பெ. வி. அரு. முத்தப்பன் ஆகிய இருவரும் வைப்புநிதி தந்தமை நன்றி கூறத்தக்கதாகும். அவர்களுடன் திரு. பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் அவர்கள், யெ. பெரி. வீர. வீர. சோலையப்பன் போன்றவர்களின் உதவியும் உழைப்பும் போற்றுதற்குரித்தே. எனவே வேறு என்னால் பட்டியல் போட்டுக் கூறக்கூடிய அளவிற்கு அன்பர்கள் ஆதி காலத்திலிருந்து இன்று வரை வித்தியாசாலையின் வளர்ச்சியில் பங்கு கொண்டமை, உதவி புரிந்தமை மறக்கமுடியாது. இந்த நேரத்தில் அனைவருக்கும் என் வணக்கத்தைக் கூறி மகிழ்கிறேன்.

இத்தகைய நினைவுகள் எல்லாம் என் மனதில் அலை அலையாய் எழுந்து மகிழ்வை ஊட்டுகின்றன. மணிவிழா, பொன்விழா, துவக்கவிழா ஆகிய முப்பெரும் விழாவில் ஏவ்வளவோ பழைய எண்ணங்களைச் சொல்ல வேண்டும் என எண்ணுகிறேன். இதுவே நீண்ட கட்டுரையாகிவிட்டது என்பதால் அனைவருக்கும் அருள்திரு விசாலாட்சி சமேத காசிவிசுவநாதரின் அருள் கிட்டட்டும் என்று கூறி நிறைவு பெறுகிறேன்.

# பொன்விழாவில் பூத்த பெண்கள் உயர்பள்ளி

**யே. மு. சொக்கலிங்கம்**

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே பெண்கள் மாணவிகளாக அமையத் தோன்றியது ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை அதனுடைய வளர்ச்சிதான் இன்று பூத்திருக்கும் பெண்கள் உயர்பள்ளி. தனி ஒருவருக்கு உரிமையில்லாது – புதுவயல் நகரத்தார் மக்களின் முயற்சியால் நடந்து வரும் கலைமகளின் கல்விக்கழகம் இன்று ஒரு புதுப் பொலிவைப் பெற்றிருக்கிறது. வித்தியாசாலையைப் பெண்கள் உயர்–நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் எனப் பல்லாண்டுகாளக எண்ணிவந்த வேளையில் சென்ற 49 ஆம் ஆண்டுவிழாவில்தான் இதற்கொரு வடிவம் கொடுக்கப் பட்டது. ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் தலைவர் பெரி.சித.இராமசாமி செட்டியார்அவர்கள் நன்கொடை அளித்து ஆண்டுவிழாவில் பணியைத் தொடங்கி வைத்தார்கள் உயர்–நிலைப் பள்ளியின் பணிகளைச் செய்வதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை வித்தி–யாசாலை ஆசிரியர்கள், சங்கத்து அங்கத்தினர்கள் அன்று முதல் செய்துவந்தனர். தமிழக அரசின் ஆணையின்படி உயர்நிலைப் பள்ளிக்கு வைக்க வேண்டிய வைப்பு–நிதியைக் கட்டுவதற்கு நானும் உயர்திரு. மு. க. இராமசாமிச்செட்டியார் அவர்களும் உயர்திரு ப. பெ. அரு. ராம. பழ. அருணாசலஞ் செட்டியார் அவர்களும் உயர்திரு. பெரி. சித. இராமசாமிச் செட்டியார் அவர்களும் உயர்திரு. பெ. ப. வி அரு. ராம.–முத்தப்பன் அவர்களும் முன்வந்தோம். உரிய காலத்தில் தமிழகக் கல்வித்துறைக்கு உயர்நிலைப் பள்ளியாக்குவற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முயர்சிகள் அனைத்தையும் வித்தியாசாலையின் தற்காலத் தலைமையாசிரியர் திரு. சீனிவாசன் அவர்கள் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்க–தாகும். இந்த பள்ளி உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த ஆட்சேபணை இல்லை என்று நாங்கள் கேட்டவுடன் எழுதிக்கொடுத்த சுற்றுப் பகுதியில் உள்ள உயர்நிலைப் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தினர் யாவருக்கும் எமது நன்றி. தமிழகக் கல்வித் துறையினர் வித்தியாசாலையின் விண்ணப்பத்தை மகிழ்வோடு ஏற்று ஆவன செய்தார்கள். அப்பொழுது பள்ளிக்கல்வித் துணை ஆய்வளாராக இருந்த உயர்திரு. S.V. சண்முகம் அவர்கள் அவவப்போது வேண்டிய உதவிகளைச் செய்தமை பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியதாகும். அதுபோல மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி திருமதி. பொ. பாரதி அம்மா அவர்களின் உதவியும், இராமநாதபுர மாவட்ட பெண்கள் உயர்பள்ளி ஆய்வாளர் திருமதி. அ. ஜோதிஸ்மதி தங்கட்சி அவர்களின் உதவியும் நெஞ்சார நினைத்தற்கும் போற்றுதலுக்கும் உரியதாகும். இம்மூவரின் ஆக்கபூர்வமான உதவிதான் இன்று உயர்நிலைப் பள்ளி ஆவதற்குக் காரணம் என்று சொன்னாலும் அது தவறாகாது.

விண்ணப்பம் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்ற பிறகு உயர்நிலைப் பள்ளிக்கான அனுமதி உறுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் துன்மதி ஆண்டு புரட்டாசி மாதம் 22 ஆம் நாள் (8-10-81) ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் பொதுக்குழு கூட்டப்பட்டது. அப் பொதுக் குழுவில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அப் பொதுக் குழுவில் வித்தியா சாலைக் கட்டிடத்தை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொள்வதால்- வித்தியா சாலை நடத்துவதற்கு எங்கள் குடும்பத்துக்கு சொந்தமான நடுவீதியில் உள்ள இடத்தில் (நேஷனல் கிளப்) புதிய கட்டடம் வாடகைக்குக் கட்டித் தருவதென்றும், அதற்கு உரிய வாடகையை வித்தியாசாலையிலிருந்து பெற்றுக்கொள்கிறேன் என்றும் உறுதி அளித்தேன். அந்த வாடகையையும் சொக்கலிங்கம் சரோசா டிரஸ்டி-லிருந்து வித்தியாசாலைக்கு நன்கொடையாகக் கொடுப்பதென்றும் உறுதி கூறினேன். அதனைப் பொதுக்குழு மிக மகிழ்வோடு ஏற்றுக் கொண்டது.

தேர்ந்தேடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினராய நாங்கள் மேற்கொண்டு உயர்-நிலைப் பள்ளி ஆவதற்கான பணிகளை மும்முரமாகச் செய்தோம். நிர்வாககுழுச் செயலர் திரு பெரி. சிதம்பரம் அவர்களின் விடா முயாற்சியாலும் ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் செயலரும் நிர்வாகக்குழு உறுப்பினருமான திரு. பழ. முத்தப்பன் அவர்-களின் உறுதுணையாலும் உயர்நிலைப் பள்ளியின் விண்ணப்பம் உரிய காலத்தில் தமிழக அரசு பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தது. வணக்-கத்திற்குரிய பள்ளிக் கல்வி இ ய க் கு ந ர் உயர்திரு. வேங்கடசுப்பிரமணியம் அவர்களை நானும், 'குமரிமலர்' ஆசிரியர் திரு A. K. செட்டியார் அவர்களும், திரு. சாத்தப்பா சுப்பிரமணியம் அவர்களும் திரு. பொ. காளியப்பன்(முன்னாள் எம்.எல்.ஏ ) அவர்களும் சந்தித்து உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி வேண்டினோம். அப்பெருந்-தகை அவர்களும் பள்ளிக்குத் தகுதியிருக்கிற காரணத்தால் உறுதியாக கிடைக்கும் என்றுகூறிப்பரிந்துரை செய்தார்கள். அப் பரிந்துரையை மிக அன்போடு ஏற்றுக் கொண்டு மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் நானும் நம் வட்டார முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு.காளியப்பன் அவர்களும் சந்தித்து வேண்டிய போது தகுதிகள்இருப்பதால் அனுமதி கிடைக்கும் என்று கூறி அதன்படியே அனுமதி வழங்கியுள்ளார்கள் இவைகளில் நமது அறநிலைய, அமைச்சர் மாண்புமிகு திரு. ராம. வீரப்பன் அவர்களும் நம் முயற்சிக்கு ஆதரவளித்து உதவினர்கள். எனவே உயர் நிலைப்பளளி நிர்வாகக்குழுத் தலைவர் என்ற முறையில் மேற்குறிக்கப் பெற்ற பெருமக்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

அரசு ஆணை R C. No. 9877 / G 3 / 82 என்ற குறிப்புப்படி 1-7-82 முதல் உயர் நிலைப் பள்ளி துவங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதன்படி அன்று முதல் உயர்நிலைப் பள்ளியும் இயங்கி வருகிறது. இன்று வித்தியாசாலையின் பொன்விழாவோடு உயர்நிலைப் பள்ளியின் தொடக்க விழாவையும் சிறப்பாக

நடத்துவதில் பெருமை கொள்கிறோம். உயர் தொடக்கப் பள்ளியாக இருந்த வித்தியாசாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்ந்ததைப் புதுவயல் நகரமே பெருமகிழ்வோடு ஏற்றுக் கொண்டுள்ளது. நகரப் பெருமக்கள் பலர் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை அள்ளித் தந்திருக்கின்றனர்.அவர்களின் விபரம் இம்மலரில் இடம் பெற்றுள்ளது. அள்ளித்தந்த அனைத்து வள்ளற் பெருமக்களுக்கும் நன்றி தனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் உயர்நிலைப் பள்ளி நிறைவான உருவைப் பெருவதற்கு வள்ளற்பெருமக்களும் அன்புடை நெஞ்சங்களும் ஆதரவு தருமாறு நிர்வாகக்குழுச்சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய பெண்கள் உயர்நிலைப் பள்ளி நாளை பெண்கள் கல்லூரியாக வளரவேண்டும் என்பதே எங்கள் ஆசை. அதற்கு கலைமகளின் திருவருளையும் எல்லாம் வல்ல கைலாசப் பெருமானையும் வேண்டிப்பணிகின்றோம்.

★

## நிர்வாகக் குழுவினர்

தலைவர்:- திரு. யெ. மு. சொக்கலிங்கம்

செயலாளர்:- திரு. பெரி. சிதம்பரம்

### உறுப்பினர்கள்

1 திரு. பெரி. வீர. ராம. பெரியணன்

2 ,, பெரி. சித. இராமசாமி

3 ,, மெ. சிதம்பரம்

4 ,, மு. வினைதீர்த்தான்

5 ,, சோம. சுப்பிரமணியன்

6 ,, பெ. பவி. அரு. ராம. முத்தப்பன்

7 ,, மு. க. இராமசாமி

8 ,, ப. பெ. அரு. ராம. பழ அருணாசலம்

9 ,, யெ. பெரி. வீர. வீர. சோலையப்பன்

10 ,, சித. வயி. சிதம்பரம்

11 ,, பழ. முத்தப்பன்

## உயர்நிலைப்பள்ளி ஆசிரியைகள்

திருமதி. லீலா சங்கர். M. A. B. SC. B. T.
தலைமை ஆசிரியை

,, புலவர். கோ. ஆனந்தா B.LIT
தமிழாசிரியை

,, மு. தெய்வானை
இடைநிலை ஆசிரியை

,, ச. கண்ணம்மா.
இடைநிலை ஆசிரியை

,, மு. இந்திரா.
உடற்பயிற்சி ஆசிரியை

,, நா. பர்வதம்.
கைத்தொழில் ஆசிரியை

திரு, செல்வி ஸ்ரீ.செளந்தரவள்ளி
எழுத்தர்

★

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள் ;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்

-பாரதியார்.

## ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளி

### நிர்வாகக் குழுவினர்



பெரி. சித. இராமசாமி



யெ. மு. சொக்கலிங்கம்
தலைவர்



மு. க. இராமசாமி



ராம. அருணாசலம்



அரு. ராம. முத்தப்பர்



மெ. சிதம்பரம்



மு. வினைதீர்த்தான்



பெரி. வீர. ராம. பெரியணன்

# ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை தொடக்கப்பள்ளி

## நிர்வாகக் குழு.

தலைவர் :- **திரு. பேரி. வீர. இராம. பேரியணன்**

செயலர் :- **திரு. வீர. சோலையப்பன்**

உறுப்பினர்கள் :-

1. திரு. பெரி. சித. இராமசாமி
2. ,, மு. வினைதீர்த்தான்
3. ,, மெ. சிதம்பரம்
4. ,, சோம. சுப்பிரமணியன்
5. ,, பெ. ப. வி. அரு. ரரம. முத்தப்பன்
6. ,, பழ. முத்தப்பன்
7. ,, ஸ்ரீராம. சீனிவாசன், பள்ளித் தலைமை ஆசிரியர்.
8. ,, P. சண்முகசுந்தரம், ஆசிரியர், உறுப்பினர்.
9. ,, RM. பழனியப்பன், ஆசிரியர், உறுப்பினர்.

## நிர்வாகக் குழுச் செயலராகப் பணியாற்றியவர்கள்

1. திரு. மெ. சிதம்பரம்
2. ,, சே. பழனியப்பன்
3. ,, யெ. பெரி. வீர. சோலையப்பன்
4. ,, வீர. பழ. வினைதீர்த்தான்
5. ,, யெ. பெரி. வீர. பழனியப்பன்

### உதவிச் செயலராகப் பணியாற்றியவர்கள்

1. திரு. சித. அரு. வீரப்பன்
2. ,, சுப. நாராயணன்
3. ,, பெரி. சித. இராமசாமி
4. ,, யெ. பெரி. வீர. பழனியப்பன்
5. ,, யெ. பெரி. வீர. வீர. சோலையப்பன்
6. ,, பெ. ப. வி. சித. வினைதீர்த்தான்
7. ,, பழ. ஏகப்பன்

## ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை தொடக்கப்பள்ளி

### ஆசிரியர்கள்

1. திரு. ஸ்ரீராம. சீனிவாசன், (தலைமை ஆசிரியர்)
2. ,, P. சண்முகசுந்தரம், (உதவி ஆசிரியர்)
3. ,, RM. பழனியப்பன்
4. திருமதி. K. முனியம்மாள்
5. திரு. C. இராமன்
6. ,, V. வெள்ளச்சொக்கப்பன்

### மதிய உணவுப் பணியாளர்கள்

1. இராசம்மாள்
2. ஆறு. அமுதா

## கலைவாணியின் கழகம் பற்றி விஞ்ஞான மேதை

வெள்ளி விழாவில் சரசுவதி வித்தியாலயத்து மாணவர்கள், மாணவிகள் ஆடல், பாடல்களிலும், பேச்சுக்களிலும் சேர்ந்துகொண்டனர். அவைகள் மிகப் போற்றத்தக்கவை. வித்தியாலயத்தின் உபாத்தியாயர்களும் அதிகாரிகளும் கல்வித்துறையில் செய்துவரும் தொண்டு தேசத்தொண்டுகளில் முக்கியமானதாகும்.

க. ஸ்ரீ. கிருஷ்ணன்.
13—5—47.

## சேந்தமிழ்ச் சங்கம் பற்றி சைவப் பெரியார்.



சங்கம் தன் 16-ஆம் ஆண்டு நிறை வுற்ற பருவத்தில் தனது வித்தியா சாலைக்குத் தக்கதோர் கட்டிடம் கட்ட முற்பட்டு இன்று கால்கோள் விழாவும் கவினுறக் கொண்டாடியது வித்தியாசாலையின் மாணவ மாணவிகள் பலர் தமது பேச்சு, பாட்டு, நடிப்புகளில் காட்டிய திறமை பெரிதும் பாராட்டத் தக்கதாயுள்ளது. இன்றிரவு அவர்கள் நடித்த "தீனபந்து" என்னும் நாடகம் கண்டோர் அனைவரின் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து விளங்கிறது.

ச. சச்சிதானந்தம் பிள்ளை. 13—5—38.

## கல்விக் கழகம் பற்றி ஜெகவீரபாண்டியனார்.

ஸ்ரீ சரஸ்வதி வித்தியா சாலை என்னும் கல்வி நிலையத்தைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தேன். அதன் அருமையும் பெருமையும் இன்புறத்தக்க நிலையில் இனிதமைந்துள்ளன. இதில் பயின்று வருகிற மாண மாணவிகள் பல துறையிலும் நன்கு பயிற்றப் பெற்றிருக்கிறார்கள். தரும நிலையமான இத்தகைய அழகிய வித்தியாசாலையை ஆர்வத்துடன் ஆதரித்துவரும் புண்ணிய சீலர்களுடைய மனநிலை எண்ணி மகிழ்தற்குரியது.

ஜெகவீரபாண்டியன். 26—4—39.

## வாணியின் கழகம் போற்றும் பெண்மைக்குல விளக்கு

சரசுவதி சங்கம் போன்ற சங்கங்களும், பாடசாலைகளும், தேசிய முறையில் நடைபெறுவது நாட்டின் முக்கிய சாசனங்களாகும். இம்மாதிரி பல சத்சங்கள் - பாடசாலைகள் பலப்பல திகழவேண்டும்.

தேசசேவகி. வை. மு. கோதைநாயகி
19—8—35.

## கலைபயிலும் மாணவர் பற்றி கா. சு. பிள்ளை.

கல்வித் தெய்வம் பெண்ணாயிருத்தற்குத் தக்கபடி இச்சங்கம் - பற்றி மாணவிகளின் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நயங்கனிந்த ஆடல் பாடல்களை இனிது நுகர்ந்தேன். கண்ணன் பாடல்கள் மிகுதி யாய்க் காணப்படுதல் போல, கூத்தப்பெருமான் முருகன் முதலியோர் சார்பான பாடல்களும் பயிற்றப் படுதல் நலம்.

கா. சுப்பிரமணிய பிள்ளை
11—5—40.

## உயர்வு பெற வாழ்த்தும் ஐயன் பெருமாள் கோனார்.

தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்விக்கெனப் பெருமுயற்சியால் அமைந்த கழகங்கள் சிலவற்றுள் இது பல்லாற்றானும் முன்னணியில் விளங்கு கின்றது - என்பது எனது துணிபு. இறைவனது அருளும், பொதுமக்களது கூட்டுறவும் போருந்தி விரைவில் இக்கழகம் உயர்நிலையடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஐயன்பெருமாள் கோனார்
9—10—40.

| நடைபெறும் விழாக்கள் | பொருள் உதவி செய்வோர் |
| --- | --- |
| 1. தமிழ்ப் புத்தாண்டு | வித்தியா சாலை |
| 2. பிள்ளையார் சதுர்த்தி | திருவாளர்கள்<br>கு. ராம. வீரப்பன்<br>மெ. சிதம்பரம்<br>இராம. வீரப்பன் |
| 3. கிலுக்கி எடுத்தல் | திரு. ஏ. பெரி. வீர. பழ. குடும்பம். |
| 4. கலைமகள் விழா | திரு. வீர. பழ. வினைதீர்த்தான்<br>திரு. சோம. இராமநாதன்<br>திரு. யெ. பெரி. வீர. சோலையப்பன்<br>திரு. பெரி. சித. ராமசாமி<br>திரு. பெரி. அழகப்பன்<br>திரு. சா. சித. திருநாவுக்கரசு |
| 5. விஜய தசமி | திரு. கதி. வீர. கதிரேசன்<br>திரு. சே. பழனியப்பன்<br>திரு. கா. அருணாசலம் |
| 6. பொங்கல் விழா | வித்தியா சாலை |



| போட்டிகள் | பரிசுப்பொருள் உதவிசெய்வோர் |
| --- | --- |
| 1. தமிழ்ப் பாடத்தேர்வு- | 6, 7, 8 வகுப்புக்களுக்கு<br>வெள்ளிப்பதக்கம்<br>டாக்டர் ராஜாசர்<br>அண்ணாமலை செட்டியார்.<br>3, 4, 5 வகுப்புக்களுக்கு<br>வெள்ளிப்பதக்கம்<br>சுப. பழனியப்பன்<br>நினைவாக<br>திரு. சோம. சுப்பிரமணியன் |
| 2. வகுப்புத் தேர்ச்சி- | திரு. யெ. பெரி. வீர வீரப்ப செட்டியார்<br>நினைவாக<br>திரு. வீர. வீர. சோலையப்பன், B. sc., |
| 3 திருவாசகப் போட்டி- | திரு. Dr. வீர. இராமனுதன், M. sc., |
| 4. திருக்குறள் போட்டி- | தேவகோட்டை<br>திரு. சேவு. அ. அண்ணாமலை |
| 5. கம்ப இராமாயணப் போட்டி- | கோட்டையூர்<br>திரு. க. வீ. அழ. மு. இராமனுதன் |
| 6. சிலப்பதிகாரம்- | திரு. பி.ச.லெ. இலக்குமணன் செட்டியார்<br>நினைவாக<br>சிதந. இராம. இராமசாமி, B. E., |
| 7. ஆங்கிலப்பாடம்- | திரு. வி. பழனியப்பன், M. A., |
| 8. கொடைவிளக்குப் பரிசு- | திரு. மு.பெரி. சின்னக்கருப்பன் |
| 9. காரைக்கால் அம்மை- | திரு. Dr. வை. இரத்தினசபாபதி |
| 10. நீதிநெறி விளக்கம்- | திரு. V. ராமசாமி |
| 11. தேவாரப் பரிசு- (வெண்பதக்கம்) | திரு. நா. சுப்பிரமணியன் |

| | |
|---|---|
| 12. விளையாட்டுப்போட்டி | திரு. பழ. ஏகப்பன்<br>திரு. சித. இராமநாதன் |
| 13. நடிப்புப் பரிசு | திரு. சித. நல்லபெருமாள் |
| 14. பாடப்புத்தகங்கள் | திரு. V. வீரப்பன் அவர்களின்-<br>வைப்பு நிதி ரூ 1000 த்தின் வட்டியிலிருந்து ஆண்டு தோறும் இலவசமாகப் புத்தகம் வழங்கப் பெறுகிறது.<br>திரு. பெரி. சித. இராமசாமி செட்டியார் |

## பைந்தமிழ் வளர்க்கும் சங்கம் பற்றி-பண்டிதமணி

சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களையும், மாணவிகளையும் இன்று காணவும் அவர்கள் இனியவுரைகளைக் கேட்கவும் நேர்ந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவர்கள் தமிழ்ப்பயிற்சியும் இசையோடு பாடல்களைப் பாடுதலும் மனத்திற்கு மிக்க இன்பம் விளைத்தன. ஆசிரியர் திறமை பாராட்டற்பாலது. இது நீடு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

...மு. கதிரேசன். 2—10—33

உ

சிவமயம்.

# ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியவர்கள்.

1-வது ஆண்டு திரு. ஏ. வி. சேஷகிரி சாஸ்திரி அவர்கள் கண்டனூர்.

2 ,, ,, அரு. சித. இராமநாதன் செட்டியார் அவர்கள் கண்டனூர்.

3 ,, ,, சொ. முருகப்பா அவர்கள் குமரன் ஆசிரியர், அமராவதி புதூர்.

4 ,, ,, பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள் காரைக்குடி.

5 ,, ,, சா. லெ. செட்டியப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி.

6 ,, ,, டி. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள் B. A., B. L. தேவகோட்டை.

7 ,, ,, பி. வி. சங்கரகாமேஸ்வர ஐயர் அவர்கள் B. A. புதுக்கோட்டை.

8 ,, ,, பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை அவர்கள் M.A.,B.L. திருநெல்வேலி.

9 ,, ,, ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L.

10 ,, ,, டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் M. A., B. L. திருச்சி.

11 ,, ,, எஸ். சோமசுந்தரபாரதி அவாகள் M. A., B. L. மதுரை.

12 ,, ,, த. வே. உமா மகேஸ்வர பிள்ளை அவர்கள் B. A. B. L. தஞ்சை.

13 ,, ,, தேசபக்தர். வ. உ. சிதம்பரம் பிள்ளை அவாகள் தூத்துக்குடி.

14 ,, ,, டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் B. A., B. L. திருநெல்வேலி.

15 ,, ,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் "நவசக்தி" ஆசிரியர் சென்னை.

16 ,, ,, எஸ். சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் B.A.,L.T; D. E. O. கூடலூர்.

17 ,, ,, கவிராஜ பண்டிதர். ஜெகவீரபாண்டியனார் அவர்கள் தூத்துக்குடி.

18 ,, ,, கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எம், ஏ; எம். எல். திருநெல்வேலி.

19 ,, ,, அ. சீனிவாசராகவன் அவர்கள் எம். ஏ. திருநெல்வேலி.

20 ,, ,, சுவாமி. சித்பவானந்தா அவர்கள் திருப்பாத்துரை.

21 ,, ,, கு. மதுரை முதலியார் அவர்கள் ராயவரம்,

22 ,, ,, ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பி. ஏ; பி. எல். சென்னை.

23 ,, ,, D, சாம்பசிவம் பிள்ளை அவர்கள் பி.ஏ;பி.எல். டி.இ.ஒ. ராமநாட். Dt.

24 ,, ,, தேச பக்தர். சா. கணேசன் அவர்கள் காரைக்குடி.

25 வெள்ளி விழா ,, டாக்டர். கே எஸ். கிருஷ்ணன் அவர்கள் Kt., D. Sc., F. R. S.

26 ,, ,, தமிழ்க்கடல். ராய. சொக்கலிங்கம் அவர்கள் காரைக்குடி.

27 ,, ,, பாலகவி. வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை.

28 ,, ,, கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் திருச்சி.

29 ,, ,, குன்றக்குடி திருப்பெருந்துறை. திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்

30 ,, ,, புர. சுவாமிநாதன் அவர்கள் எம். ஏ; எல். டி அண்ணாமலை நகர்.

31 வெள்ளி விழா ,, சேவு.அ. அண்ணாமலைசெட்டியார் அவர்கள் பி.காம். தேவகோட்டை
32 ,, ,, க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார் அவர்கள் கோட்டையூர்.
33 ,, ,, தி.சு.பழ.ப.சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை.
34 ,, ,, P. A. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை.

## சங்கத்தின் 35-வது ஆண்டு வித்தியாசாலையின் 25-வது ஆண்டு (வெள்ளி விழா)

முதல் நாள். **திரு. நா. சுப்புரெட்டியார், எம். ஏ. பி. எஸ்ஸி., எல். டி.** அவர்கள்

இரண்டாம் நாள்: **திரு. கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார்** அவர்கள் மதுரை.

36-வது ஆண்டு திரு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் காரைக்குடி.
37 ,, ,, பி. துரைக்கண்ணு முதலியார் எம். ஏ. எல். டி. அவர்கள்
38 ,, ,, C. சுப்பிரமணியம் பி. ஏ., பி. டி. அவர்கள் புதுக்கோட்டை.
39 ,, ,, ஆர். சீனிவாசராகவன் பி ஏ., பி. ஏ. பி. டி. அவர்கள்
40 ,, ,, R. நாட்டராயன் பி. ஏ., எல். டி. அவர்கள் (முதல் நாள்)
,, திரு V. S. சுப்பையா ஐ. ஏ. எஸ். (தமிழக அரசு விவசாயத் துறைத் துணைச் செயலாளர்.
41 ,, ,, கோ. வன்மீகநாதன் அவர்கள் திருச்சி.
42 ,, ,, பழ சிதம்பரம் செட்டியார் அவர்கள் மேலைச்சிவபுரி.
43 ,, ,, எம். இராமச்சந்திரன் பி. ஏ. பி. டி. அவர்கள் காரைக்குடி.
44 ,, ,, W. மாணிக்கம் பி. ஏ. பி. டி. அவர்கள் காரைக்குடி.
45 ,, ,, வித்துவான். பூ. அமிர்தலிங்கம் பி. ஏ. காரைக்குடி.
46 ,, ,, சௌ. தோத்தாத்தரி எம். ஏ., பி. எஸ்ஸி., பி. டி பள்ளத்தூர்.
47 ,, ,, கவிஞர். அரு. சோமசுந்தரம் பி. ஏ., பி. டி. காரைக்குடி.
48 ,, ,, வயி. ராம. கி. இராமசாமி செட்டியார் பி. ஏ. அரியக்குடி.
49 ,, ,, சித. சிதம்பரம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், காரைக்குடி.
50 பொன் விழா. ,, டாக்டர். வை. இரத்தினசபாபதி, திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. தி. மாணிக்கவாசகம்.
51 ,, ,, புலவா. இரா. செல்வகணபதி எம். ஏ. அவர்கள் தருமபுரம்.
52 ,, ,, பேராசிரியர். வே. சிவசுப்பிரமணியன் அவர்கள் மயிலம.
53 ,, ,, பெரி. சித. இராமசாமி செட்டியார் அவர்கள்.
54 ,, ,, பேராசியர். இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் திருச்சி.
55 ,, ,, பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை,
56 ,, ,, இராம. குப்பான் செட்டியார் அவர்கள் தலைமை ஆசிரியர், கண்டனூர்.
57 ,, ,, குழந்தைக் கவிஞர். அழ. வள்ளிப்பா அவர்கள் காரைக்குடி.
58 ,, ,, பேராசிரியர். டாக்டர். வெ. சு. அழகப்பன் எம். ஏ. எல். பிஎச்டி. அவர்கள் காரைக்குடி.
59 ,, ,, பாலயோகி. இராமதாஸ் சுவாமிகள் அவர்கள் மேலமங்கலம். தென் ஆற்காடு மாவட்டம்.

## "எம் சங்கம் ஓர் கருவி"......

இலங்கு நூல் கற்றலே மாந்தர்க்கு ஏற்றம்தரும் என்னும் விழுமிய கொள்கையை வழுவாதுபற்றி, பழுதுற்ற பழைய மாசுகளைக் களைந்து, சிவநெறியும், செந்தமிழும் புத்துயிர்பெற்று மிளிர்வதற்கு சரசுவதி சங்கம் ஓர் சிறந்த கருவியாயிருக்கும் என்று எண்ணி உள்ளம் களிக்கின்றேன்.

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை—9-வது ஆண்டு விழா
19—4—31.

★

## சங்கத்தார் பற்றி கரந்தைச் சங்கம்

இச்சங்கத்தார் கலாசாலையை நடத்திவரும் முறை தமிழுலகு போற்றத்தக்கதாகும். ஊரிலுள்ள தலைவர்கள் அனைவரும் ஒரு மனதுடன் பொருளையும் தந்து-தங்கள் சீரிய தொண்டையும் உரிமைஆக்கி இருக்கின்றனர்.

வே. உமாமகேசுவரன். 12-ஆம் ஆண்டு விழா
6—5—34.

★

## கலைக் கழகம் பற்றி கப்பலோட்டிய தமிழர்

வித்தியாசாலை மாணவ, மாணவிகளின் சொற்களால் – பாடல்களால், நடிப்பு முதலியவற்ருல் யானும், அவையினரும், "அறனறிந்தோம், ஆன்ற பொருளறிந்தோம், இன்பின் திறனறிந்தோம், வீடு தெளிந்தோம், மறனெறிந்த, வாளார் அறிஞர்காள்...... மாணவர்கள் தம்வாயால் கேளாதன வெல்லாம் கேட்டு"-என்று கூறுதல் மிகையாகாது.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.
29-4-1935

## சங்கத்தை வாழ்த்தும் ஞானத்தந்தை

சரசுவதி சங்கம் ஆற்றிவரும் பணிகளில் பங்குகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அகனமர்ந்த அன்புணர்ச்சியுடன் தமிழ்ப்பணி செய்துவரும் சங்கத்தை அன்புகலந்த நெஞ்சத்துடன் வாழ்த்துகின்றோம். இளைஞர்களிடையே நல்ல அறிவுணர்ச்சியையும் அன்புணர்ச்சியையும் பெருக்கி, சிறப்புடையவர்களாக்கும் சங்கத்தின் பணி தலையாய பணி. உண்மையாகவே போற்றுதற்குரியது.

தெய்வசிகாமணி (குன்றக்குடி அடிகளார்)
*14—5—51*

❋

## "உயர்நிலைப்பள்ளி உருவாகிட வாழ்த்து தந்தார்"

சங்கமும் பள்ளியும் நல்ல தொண்டுகளைச் செய்து வந்திருப்பது குறித்து தமிழ் நாடு பொதுவாகவும் செட்டிமார் நாடு குறிப்பாகவும் பெருமையடைய உரியன. வெகு விரைவில் இப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக மிளிர வேண்டும் என ஆசைப் படுகிறேன். அதற்குரிய முயற்சியினை இவ்வூராரும் பிறரும் செய்தாகவேண்டும்.

கி. ஆ. பெ. விசுவநாதம். *7—5—1950.*

❋

## கலைமகளின் சங்கம் பற்றி கணேசனார்

புதுவயல். ஆம்; இது ஒரு புதுவயல்தான். இங்கே பசியாற்றும் தானியம் விளையவில்லை. ஆனால் பசி ஊட்டும் கல்வி விளைகிறது. சரசுவதி சங்கம் தனது பத்தாம் ஆண்டில் பூத்த சரசுவதி வித்தியாசாலை கல்வி மணம் பரப்புகிறது.

சா. கணேசன். *5—5—1946.*

## வெள்ளி விழாவில் டாக்டர். சுப, அண்ணாமலை

சரசுவதி வித்தியா சாலையில் நிகழ்ந்த வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளும் பேறு எனக்குக்கிடைத்தது. மாணவர்களின் நாவன்மை கண்டு வியந்தேன். கலைவன்மையைக்கண்டு மகிழ்ந்தேன்.

*சுப. அண்ணாமலை.*
*11-5-57*
*தியாகராசர் கல்லூரி, மதுரை.*



## எழிலார் சங்கம் பற்றி டாக்டர். மெ. சு.

சரசுவதி சங்க ஆண்டு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இன்று மாலை பெற்றேன். பள்ளி மாணவ மாணவியரின் இயல், இசை நாடக நிகழ்ச்சிகள் அன்னார் பெருந்திறனையும் ஆசிரியர்கள் அளித்த பயிற்சியினையும் புலப்படுத்தின.

*மெ. சுந்தரம்.*
*9-6-50,*

## "முத்தமிழ்ச் சங்கம் பற்றி முடியரசனார்"

கல்வித் தொண்டே கடவுள் தொண்டு என்பது இன்றைய நோக்கு. இந்நோக்கும் போக்கும் எழுச்சி பெறும் நாட்டிற்குத் தேவை. தேவையையுணர்ந்து முப்பந்தேழு ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் புதுவயல் சரசுவதி சங்கத்தை வாழ்க! வளர்க! என நெஞ்சார வாழ்த்துகிறேன்.

*முடியரசன்.*
*13-5-59.*

# மாணிக்க வாழ்த்து.

ஆர்வம் மிகுந்த இளைஞர்களும் பெரியோர்களும் கலந்து வளர்க்கும் இச் சங்கம் வாழிய தமிழ் வளர வாழிய.

வ. சுப. மாணிக்கம்.
5—5—52

# சீரார் சங்கம் பற்றி ரசிகமணி

சரஸ்வதி சங்கத்தின் சிறப்புகளைப்பற்றியும் வெள்ளி விழாவின் வைபவங்களைப்பற்றியும் எழுதுவதென்ருல், ஒரு பெரிய கட்டுரை எழுதவேண்டும். ரயிலுக்குப் போகும் அவசரத்தில் அது சாத்தியமில்லை. ஆதலின் "சரஸ்வதி சங்கம் நீடுழி வாழ்ந்து பொன் விழாவும், வைர விழாவும் கொண்டாடட்டும்!" என்று வாழ்த்தி நிறுத்துகிறேன். விழாவுக்கு என்னை அழைத்தவர்-களுக்கு மிக்க நன்றி.

டி. கே. சி.
12—5—47.

# கல்விக்கழகம் பற்றி — கட்டுரை ஆசிரியர்.

சரஸ்வதி சங்கம் சரியான முறையில் சரஸ்வதியை வணங்கி வருகிறது என்பதற்கு அதன் ஆண்டு விழாவுக்கு திரு. கே எஸ். கிருஷ்ணன் விஜயம் செய்ததே அத்தாட்சியாகும். இதுபோன்ற சங்கங்கள் நாட்டின் முற்போக்குக்கு உதவிசெய்யும் சக்தி வாய்ந்தவை.

ஏ. என். சிவராமன்.
13—5—47

# கல்வி

○ டாக்டர் ஆர். இராமநாதன், M. Sc., Ph. D.,

எனது உயர்நிலைப் பள்ளிப் படிப்பு தஞ்சாவூர் ஜில்லாவில் பட்டுக்கோட்டையில் நடந்தது. நானும் இரண்டு மாணவர்களும் சேர்ந்து அங்கு ஒரு வீடு வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதிலிருந்து போய் பள்ளியில் படித்துவந்தோம். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அவர் பட்டுக்கோட்டைக்கு வரும்பொழுது எங்களுடன் தங்குவார். மாலை நேரங்களில் ஓய்வாக இருக்கும் பொழுது அவர் நகைச்சுவையாகப் பல விஷயங்களைப் பற்றி எங்களுடன் பேசிக் கொண்டிருப்பார். ஒருநாள் எங்களைப் பார்த்து "நான் ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றார். அக்கேள்வியாவது:- "படித்த முட்டாள் தேவலையா? (Educated Fool) படிக்காத முட்டாள் (Uneducated Fool) தேவலையா?"

இப்பொழுது நம்நாட்டில் இருந்துவரும் கல்வியின் தரத்தைப் பார்க்கும்பொழுது மேற்கண்ட கேள்விதான் ஞாபகத்திற்கு வருகிறது. கல்வியின் நோக்கம் அறியாமை மையைப் போக்கி அறிவைப் பிரகாசிக்கச்செய்வது. இப்போது நாட்டில் முன்னைவிட நிறையப் படிப்பு இருக்கிறது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் முதலியன அதிகரித்துக் கொண்டிருக்கின்றன ஆனால் இந்த இடங்களில்தான் இன்று போலீஸ் பந்தோபஸ்து, மிலிடரி எல்லாம் தேவைப்படுகிறது. குணத்தைக் கொடுக்கவேண்டிய கல்வி இன்று குணத்தைக் கெடுக்கும்படியானதாக இருக்கிறது. கல்வியின் முக்கிய பிரயோஜனமாக விநயம் அதாவது அடக்கம் ஏற்படவேண்டும். முன்காலத்தில் மாணவனுக்கு "விநேயன்" என்ற பெயர் இருந்தது. இன்றைய மாணவன் அடக்கமாக இருப்பதற்குப் பதில் உபாத்தியாயரை அடக்குகிறான். "காப்பி அடிக்கவிடு, இல்லாவிட்டால் வெளியில் வந்தவுடன் ஒரு கை பார்க்கிறேன்" என்கிறான். இப்படி மாணவர்களிடையே அடக்கம், ஒழுக்கம், குருபக்தி, படிப்பில் சிரத்தை எல்லாம் போய்விட்டது. இந்தக் காலத்தில் படிக்கிற மாணவர்களில் பெரும்பாலோருக்குத் தெய்வ பக்தியே இல்லை. கல்வியின் முக்கிய பயன் மெய்யான பொருளாகிய இறைவனிடம் பக்தி செலுத்துவது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

பரமேஸ்வரனின் திருவடிகளை நினைக்க வைக்காத கல்வியால் என்ன பிரயோஜனம் என்கிறார் திருவள்ளுவர்.

மருந்தோடு பத்தியமும் தேவை. கல்வி என்கிற மருந்துக்கு அடக்கம், ஒழுக்கம், பக்தி என்ற பத்தியம் மிக அவசியம். இப்போது இந்தப் பத்தியம் இல்லாததால் மருந்தே விஷமாகியிருக்கிறது. பத்தியத்தோடு பயின்றால் கல்வியே சகல சம்பத்துக்களையும் தரும் அமிர்தமாகும்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டுக்கு மெகஸ்தனிஸ் என்பவர் வந்து நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சொன்னர், "இந்த நாட்டிலே திருட்டு என்பதே இல்லை. வைத்த பொருள் வைத்த இடத்திலே இருக்கிறது. பொய் பேசுபவர் யாரும் இல்லை. எந்தப் பொருளைக் கொடுத்தாலும் கைநீட்டி வாங்கிக் கொள்பவர் யாரையும் காணேம்.'' நம் மக்களின் பண்பாடு இவ்வளவு உயர்ந்த நிலையில் அப்பொழுது இருந்தது. ஆனல் இன்று அந்த நிலை முற்றிலும் மாறிப் போய்விட்டது. இதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, அக்காலத்தில் கல்வியானது குருகுல முறையில் நடந்தது. குருவானவர் தியாகமே வடிவெடுத்தவராகவும், ஒழுக்கம், அடக்கம், பக்தி, கல்வி அறிவில் பாண்டித்தியம் பெற்றவராவும் இருந்தார், அவரிடம் பயின்ற மாணவர்களும் இந்த உத்தம குணங்களை எளிதில் அடைந்தனர்.

இரண்டாவது காரணம், அந்தக் காலத்தில் கோயில்களிலெல்லாம் பாரதம், ராமாயணம் வாசிக்கப்பட்டது. இதற்காக ராஜாக்கள் மானியம் வழங்கி வந்திருக்கிருர்கள். இக்காலத்தில் மக்கள் திரளாக சினிமா, டிராமா, கேளிக்கைகளுக்குப் போகிறமாதிரி அக்காலத்தில் பாரதம், ராமாயணம், புராணப் பிரவசனங்கள் கேட்க ஜனங்கள் சென்ருர்கள். இதனல் உத்தமமான ஆத்மாக்களான ராமன், சீதை, பரதன், தர்மபுத்திரர் முதலானவர் போல வாழ முயன்ருர்கள்.

சென்ற சுமார் ஐம்பதாண்டு காலத்தில் நாட்டில் விஞ்ஞானம், பொருளாதாரம், விவசாயம், மருத்துவம், அரசியல் முதலான துறைகளில் பெரிய மாற்றங்கள், முன்னேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதற்கு முன் மூவாயிரம் ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களைவிட இந்த 50 வருஷ மாறுதல்கள் மிக அதிகம் என்றே தெரிகிறது. அப்படி இருந்தும் இன்று நாட்டில் அமைதியின்மை, ஒழுக்கக் குறைவு, கஷ்டங்கள் அதிகமாகி வருவதைப் பார்க்கிருேம். 50 வருஷத்திற்கு முன் வாழ்ந்தவர்கள் மனச்சாந்தியுடனும், ஒழுக்கசீலர்களாகவும், வாழ்ந்தார்கள். காரணம், அவர்கள் தர்ம நூல்களில் சொல்லப்பட்டுள்ள நீதி நெறிகளைக் கடைப் பிடித்தும், தெய்வ நம்பிக்கையுடனும், வாழ்ந்தார்கள். அதாவது அவர்களது வாழ்க்கையில் சமயம் பின்னிப் பிணைந்திருந்தது.

இன்று விஞ்ஞானம் அபரிமிதமாக வளர்ந்திருக்கிறது. அப்படி இருந்தும் இன்று உலகத்தில் நிம்மதியின்மை, பயம் அதிகரித்திருக்கிறது. காரணம், இன்றைய

மனிதன் விஞ்ஞானத்தை மட்டும் பிடித்துக்கொண்டு செல்கிருன். மெய்ஞ்ஞானத்தைப் புறக்கணித்துவிட்டான்.

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் வைத்துப் படிப்பை விருத்தி செய்கிருேம. படித்து வெளிவந்தவர்கள் யோக்கியமானவர்களாக இல்லாவிட்டால் பள்ளிக்கூடம் முதலானவைகள் ஏற்படுத்தியும் பிரயோஜனமில்லை. அதனுல் நாட்டுக்கு நன்மையைவிட தீமைதான் அதிகமாகும். விஞ்ஞானம், பொருளாதாரம் முதலான கல்வியால் புத்தி நன்கு வளர்கிறது. ஆனுல் அதே சமயம் அவர்கள் நல்லவர்களாகவும் வேண்டும். அதற்கு சமயக் கல்வி இன்றியமையாததாகும். பக்தி, தர்மசாஸ்திர அறிவு, தியானம் முதலான சமய அனுஷ்டானங்கள் பலவிதமான சுயநல ஆசைகளால் ஆட்டிவைக்கப்படுகிற ஜீவனைப் பரிசுத்தப் படுத்தும்.

ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக் கழகப் புதுமுகப் படிப்புவரை சமயத்தை ஒரு கட்டாய பாடமாக வைத்து அதற்குப் பரீட்சையும், சிறப்பு மதிப்பெண்களும் வைத்து கல்விமுறை அமையவேண்டும்.

ஒரு நாட்டின் மக்கள் நல்லொழுக்கம் பேணவும், ஒற்றுமையுடன் வாழவும் சமய உணர்வு மிகவும் அவசியம்.

ஆகையால் எந்தவொரு கல்வித் திட்டத்திலும் சமயக் கல்வி முக்கிய இடம் பெறவேண்டும்.

# "பொருட் சிந்தனை"

சரஸ்வதி நிலைய மணிவிழா மலரில் பொருளைப் பற்றிய சிந்தனை எழுந்தது. சிந்தனையென்றாலே முடிந்த முடிபன்று; சிந்தனையாளனுடைய சுற்றுச் சூழலுக்கும், அவனுக்குக் கிடைக்கிற நூல்கள் முதலான சாதனங்களுக்கும், சிந்திக்கின்றவனுடைய சிந்தனை வன்மைக்கும் ஏற்ப வளர்ந்துகொண்டே போகும்.

அத்தகைய நிலையில் பொருளைப் பற்றிய சிந்தனை எழுபத்தைந்தாண்டுகட்கு மேல் காலங்கடந்த காலத்தில் அதைப் பற்றிய கவலை தோன்றியிருக்கிறது. முற்ற முடிவு காண இயலாது என்பதை நன்குணர்வேனாயினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தருவது பொய்க்காதே!

மக்கள் தோன்றிய காலமுதல்-உழைப்பைப் பயன்படுத்தி வயிறு நிரப்ப வேண்டிய காலமுதல் 'பொருள்' ஆட்சியில் இருக்கிறது ஆனால் அப்போது எந்த நோக்கில் ஆட்சியில் இருந்ததோ அந்த நோக்கில் இன்று இல்லை. நெடுந்தூரம் பயணம் போயிருக்கிறது. உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் என்று மெய்ப்பொருள் நூலிற் படித்திருக்கிறோம். அதுபோலவே: பொருளும் சார்ந்ததன் வண்ணமாய் மாற்றமும் வளர்ச்சியும் தேய்வும் பெற்றுள்ளன.

அளவை நூல் ஆசிரியனைக் கேட்டால் திரவியம், குணம், தொழில், பொதுமை, சிறப்பு, சமவாயம், இன்மை இவையனைத்தும் பொருள் என்பான். சைன மதவாதியைக் கேட்டால் தங்கள் சமுதாயத்திற்கே சொந்தமான உயிர், உயிரில்லாதன, தருமம், அதருமம், ஆகாசம என ஐந்து என்றும், காலத்தையும் எண்ணி ஆறு பொருள் என்றும், புண்ணியம் பாவம், ஆசிரவம், சம்வரை, நிர்ச்சரை, பந்தம் மோட்சம் இவைகளைக் கூட்டி ஒன்பது என்றும் கூறுவர். இங்ஙனம் ஒவ்வொரு கொள்கையினரும் கொள்ளும் வகையில் பொருள் பெருகிக் கொண்டே போகும் எல்லையற்றதாகிவிடும். அவற்றைப் பின்பு எண்ணிப் பொருள் என்ற பெயர் பொருந்துமா என்பதைப் பார்த்துக்கொள்வோம். இப்போது, இலக்கியப் பூங்காவிற் புகுந்து 'பொருள்' என்ற சொல்லின் தோற்றம், வளர்ச்சி முதலியவைகளைக் காண்போம்.

உலோக காலந் தொடுவதற்கு முன்னே உழைப்பால் வந்த நெல், கொள்ளு, அவரை, துவரை முதலான வாழ்வியற் பண்டங்களின் தேவைகளைப் பரிமாறிக் கொள்ள நேர்ந்தபோது ஒன்றைக் கொண்டு ஒன்றை வாங்கி வாழ்ந்தனர். அப்போது, உழைப்பின் அருமை, விளைவின் பெருக்க சுருக்கம், தேவைகளின் மிகுதி-குறைவு இவைகளை எண்ணி ஒரு பொருளோடு ஒரு பொருளுக்கு ஒப்புணர்ந்து கொண்டுகொடுத்து வாழ்ந்தார்கள். பொரு-ஒப்பு. பொருள்-ஒப்புடையது என்ற அடிப்படையில் பொருள் பண்டங்களுக்குப் பெயராக முதன்முதல் வழங்கலாயிற்று.

இந்தப் பண்டமாற்றில் விளைந்த கருத்துமாற்றக் காலத்தே உலோக காலம் உருக்கொண்டது. உலோகப் பொருள்களை மண்ணிலிருந்து எடுத்து, ஆங்காங்குள்ள தேவைக்கு ஏற்ப ஏற்றம் கொடுத்தும் உலோக-பண்டங்கள் கைமாறின. அப்போது உலோகங்களும் பொருள் எனப்பட்டன.

பின்னர் உலோகங்களின் தேவை, கிடைக்கும் அருமை, தோண்டிக் காணும் முயற்சியின் கூலி இவை கூடி உலோகங்களுக்கு மதிப்பு ஏறிக் குறைந்தது. நிலைத்த நிறமாருத்தன்மையில் மட்டுமன்று. அருமையாலும் பொன், வெள்ளிகளின் தரம் உயர்ந்தன. பொருள் என்ற பெயர் பொன், வெள்ளி, செம்புகளுக்கும் உண்டாயின.

மக்களின் ஆட்சி முறையும், சட்டதிட்டங்களும், அயல்நாட்டுத் தொடர்பும் ஏற்பட்டபோது, உலோகங்களின் தரம், நிறைகளால் ஏமாற்றும் புன்மை சமுதாயத்தில் அடிவைத்தது. அப்போது ஆண்ட மன்னர் தரத்தையும், நிறையையும் உறுதிப்படுத்தத் தொளையிட்ட உலோகங்களைக் காசாக-குன்றின்மணி, தகடு வடிவமாக்கி ஆண்டனர். அப்போது பொருள் என்ற பெயர் உலோகக் காசுகளுக்கும் பெயராயிற்று.

உழுவித்துண்போனிடமும், வணிகனிடமும் பொருள் குவியத் தொடங்கியது. தாழ்விலாச் செல்வர் நாட்டுக்கு உயிர்நாடியாயினர். அதனாலேயே எங்ஙனமாயினும் பொருள் குவிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசர்க்கும் ஏன் அனைவர்க்கும் உண்டாயிற்று. பொருள்களை வாங்குவோர் மத்தளம் மரக்காலாக வாங்கினர். வாங்கி விற்கின்றபோது உழக்கு மரக்காலாக்கினர். இந்த நிலையைக் கண்ட வள்ளுவர் கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் இருக்கவேண்டும். அதுதான் வாணிகம்; பிறவும் தம்போற்செய்ய வேண்டும் என்றார். அவர் சொன்ன கருத்து தம்பொருளைச் சீரும் செட்டுமாகக் கண்காணிப்பது போல பிறன் பொருளையும் பார்க்க வேண்டும் என்பதுதான். தன்னலம் எதனையும் கணப்பொழுதில் கருத்தை மாற்றிவிடுமே! மக்கள் அயலான் பொருளையும் தன் பொருளாகவே கருதிவிட்டனர். அப்போது உரையாசிரியர்கள் ஒருவருக்குப் பத்துப்பேர் வந்து இப்படியல்ல பொருள்; வள்ளுவர் கருத்து இது என்று வலியுறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்படிப் போட்டியில் பொருளாகக் குவிந்தது பொருளையுடையவனையும் பொருளாக மதிக்கச் செய்துவிட்டது. "கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று" என்றும் "நில்லாதனவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவான்மை கடை" என்று புத்தி சொல்லும் வள்ளுவரையே

"பொருளல்லவரைப் பொருளென்றுணரும்
பொருளல்லதில்லை பொருள்" என்று சொல்லவைத்துவிட்டது.

அவரும் மயங்கியபடிச் சொல்வதற்காக நான் கவலைப்படவில்லை. பொருள் என்ற சொல் பண்டங்களுக்காய்-பணங்காசுகட்கு ஆய், பணக்காரனுக்கு ஆய், அவனுக்கு நாடு கொடுக்கும் மதிப்பளவிற்குக் கொண்டுவந்துவிட்டதே! என்றுதான் வியப்பு.

மீளவும் ஓர் ஐயம். ஒருகாசுக்கும் உதவாதவனை இப்படி மதிக்கச் செய்து விட்டதே! இது பொருளுக்கே என்றுமுள்ள தன்மையா? உலகவரின் மதிப்பிடும் ஏமாந்த புத்தியா என்று. அப்போது, இரண்டு பெண்கள் வந்தார்கள். அவர்களில் ஒருத்தி சொன்னாள். நம் தலைவரோ இக்கணம் வரையில் அருளை நம்பிப் பொருளைப் பொருளென்று மதிக்காமல் வாழ்ந்தவராயிற்றே! இன்றைக்கு என்ன வந்தது? பொருள் தேடப் புறப்பட்டுவிட்டாரே என்றாள். அது கேட்ட தோழி என்னம்மா சொல்கிறாய்? 'இவ்வுலகத்துப் பொருளே மன்ற பொருள்; அருளே மன்ற ஆரும் இல்லது' இது என் கருத்தா? வெண்பூதியார் தரும் விளக்கம் ஆகவே பொருளுக் குள்ள மதிப்பு அதற்கேயியல்பாக உள்ளது. அதனை மிகுதியும் உடைமையாற்றான் பொருளையுடையவனையும் உலகம் பொருள் என்று மதிக்கிறது என்றாள்.

இப்படிக் காணப்படுகின்ற இந்தப் பொருள் பிரபஞ்சத்தில் பொருளுக்குள்ள மதிப்பையும், அது உடையவனை மதிக்கச் செய்வதையும் தெளிந்த நான் இப்படித் தான் சொல்லுலகுக்கும் இருக்குமா? என்று ஐயப்பட்டேன்.

அங்கென்ன வாழ்ந்தது! ஆடு, மாடு, வந்தான், போனான் முதலான இந்த சொற்கூட்டம் எல்லாம் உணர்த்துவது பொருளைத்தானே பொருளில்லாத சொல்லுக்கு எள்ளளவு மதிப்பு உண்டா? அதை அசையென்று பெயர் வைத்துச் செல்லாக்காசாக, நடைப்பிணமாக ஆக்கிவிட்டதே இலக்கணம் என்று தோன்றியது. அப்போது இலக்கண ஆசிரியர் ஒருவர் அசை பயனற்றதன்று? கடைக்காற்சல்லி போல சொல்லுக்கும் தொடருக்கும் உறுப்பாய் அசைத்து நிற்பதுதான் அதன் பொருள். அப்படியும் ஒரு தேவையிருக்கத்தானே செய்கிறது. இல்லையானால் அந்தில் ஆங்கு முதலியன அணிசெய்யுமா?

இப்படிச் சொல்லுலகிலும் பெருமை பொருளுக்குத்தானே உள்ளது. ஆகவே சொல்லுணர்த்துவனவும் பொருள் என்ற பெயரை அடைகின்றன. ஏன் இப்படி எண்ணவேண்டும்; பொருளையுணர்த்தும் கருவிதானே சொல். ஆகவே ஈண்டும் பொருளுக்குத்தானே மதிப்பு.

நான் அறிந்தவரையில் இலக்கியப் பூங்காவின் பூத்த பொருண் மலர் ஏனைய மலர்களின் கூட்டுறவாலும், வண்டுகள் முகர்ந்தமையாலும் ஆசிரியன் எடுத்தாலும் இடமாற்றத்தாலும் இருநூறுக்கு மேற்பட்ட வகையில் பயணம் போயிருக்கிறது. இதனை ஊன்றிச் சிந்திக்கத் தொடங்கினால் பொருட்சிந்தனை ஒரு சிறு நூலாகக்கூட உருக்கொள்ளும். இந்நெறியில் என் இளவல்கள் முயன்று முடிவு காட்டுவார்களாக.

-சிந்தனையாளர் மகா வித்வான் ச. தண்டபாணி தேசிகர்,
மதுரைப் பல்கலைக் கழகம்

# பாரதி பாடல் - சொல்லாட்சி முரண்பாடு

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியருள் ஒருவராகிய சேனாவரையர் 'கிளவியாக்கம்' என்பதற்கு விளக்கம் கூறும்போது, 'கிளவி' என்பதற்குத் 'தனிமொழியும் தொடர்மொழியும் கொள்ளப்படும்' எனக் கூறினார். அப்பொருளிலேயே இங்கு மேலே குறிப்பிடப்பட்ட 'சொல்லாட்சி' என்பதிலுள்ள 'சொல்' என்பதற்குத் 'தனி மொழியும் தொடர்மொழியும்' எனக் கொள்ளலாம். மேலும் தொடர்மொழிக் கருத்தையும் தொடர்மொழியில் கொள்ளலாம். இருவகை மொழிகளையும் பாரதியார் தம் பாடல்களில் சிறப்புற ஆண்டுள்ளார். அவரின் சிறப்புச் சொல்லாட்சி பற்றிய கருத்துக்கள் இன்று அறிஞர்கள் மத்தியில் பேசப்பெறு கின்றன. இக்கட்டுரையில் அவர் பாடல்களில் காணப்பெறும் சொல்லாட்சி முரண் பாடுகளைக் காண்பதும், அவற்றினைக் களைதற்கு முயல்வதுமான செய்திகளைக் காணலாம்.

1. புதிய ஆத்திச்சூடியில் முதலில் எடுப்பு 'அச்சம் தவிர்' (1) என்பது. அதிலேயே தீயோர்க்கு அஞ்சேல் (45) என்றும், தொன்மைக்கு அஞ்சேல் (51) என்றும் பேய்களுக்கு அஞ்சேல் (72) என்றும் கூறியுள்ளார். முதலில் உள்ள 'அச்சம் தவிர்' என்பது தீயோர், தொன்மை, பேய் என்பனவற்றை நீக்கி மற்றைய னவற்றிற்குக் கூறப்பட்டது என உரையாசிரியர்கள் போக்கில் கூறுவதா? அச்சம் தவிர் என்பதிலேயே எல்லா அச்சமும் அடங்கவா? இதற்கு அமைதி கிடைக்க வில்லை. தவத்தினை நிதம்புரி (53) என்றவர், நோற்பது கைவிடேல் (64) மொய்ம்புறத் தவம்செய் (83) என மீண்டும் கூறியமை கூறியது கூறல் ஆகாதா? அமைதியில்லை.

பாப்பாப் பாட்டில் – ஓடி விளையாடு பாப்பா எனத் தொடங்கும் பாடலில்,

"வாலைக் குழைத்து வரும் நாய்தான் – அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா" (4)

என நாயைச் சிறப்பித்தவர், ஆத்திச்சூடியில் 'ஞமலிபோல் வாழேல் (37) என்றது ஏன்? குழந்தைக்கு இவ்விரண்டையும் கூறின் குழந்தை ஏற்பது எப்படி? 'ஞமலிபோல் வாழேல்' என்பதற்கு நாயின் இழிகுணங்களை எடுத்துக் கூறி, அக்குணங்களுடன் வாழாதே என்று கூறியதாகக் கொள்வதுதான் பொருத்தம் என அமைதி கொள்ளாக்கால் இரண்டும் முரண்பட்டனவாகிவிடும்.

2. அறிவே தெய்வம் என்னும் தலைப்புப் பாடலில்,

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் – பல்
ஆயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம் உண்
டாமெனல் கேளீரோ

என்று பலதெய்வ வணக்கத்தை வெறுத்தவர் - பல தெய்வங்களைத் தேடி வணங்குபவரை அறிவிலி என்றவர்-தாமே பல தெய்வங்களை வணங்கியுள்ளார். ஒவ்வொரு தெய்வத்திடமும் நீயே முதல்; நீதான் என்னைக் காக்கவேண்டும்; நின்னையே சரண்புகுந்தேன் என்றெல்லாம் சொல்கிறார்.

விநாயகர் நான்மணி மாலையில் நீயே சரண் "(2) என விநாயகரைச் சரணடைந்து" கனக்கும் செல்வம் நூறு வயது இவையும் நீ தரக்கடவாய்" (7) என வேண்டினார்

முருகன் பாடலில் "வருவாய் மயில்மீ தினிலே" (1) என முருகனை அழைத்துச் "சரணம் சரணம்" எனச் சரண் புகுந்து (4) "தருவாய் நலமும் தகவும் புகழும் தவமும் திறமும் தனமும் கனமும்" என வேண்டுகிறார். "வேலை வணங்குவது எமக்கு வேலை" (வேல்பாட்டு) எனவும் பாடுகிறார்.

"காணிநிலம் வேண்டும்" எனப் பராசக்தியை வேண்டியவர் "அடைக்கலம் உனைப் புகுந்தோம் எங்கள் முத்து மாரியம்மா" என முத்துமாரிப் பாடலில் (2) கூறுகிறார். "தேடியுனைச் சரண் அடைந்தேன்" என்றார் தேசமுத்துமாரிப் பாடலில் (1) "சாகா வரம் அருள்வாய் ராமா" எனச் சாகாவரம் பாடலில் (1) வேண்டியவர், இலக்குமியை நோக்கி, "எனை நீயென்றும் வாழவைப்பாயே" (திருவேட்கை 5) என்கிறார்.

எங்கும் சக்தி எதிலும் சக்தி எனக் கண்ட பாரதியார் அல்லாப் பாடலில் "எல்லாரும் வந்தேத்தும் அளவில் யமபயம் கெடச் செய்பவன் அல்லா" என்கிறார். சிறு தெய்வங்களையும் காற்று, ஞாயிறு, திங்கள், நெருப்பு போல்வனவற்றையும் அடைக்கலம் புகுந்துள்ளார். இந்த முரண்பாடு ஏன்? இதற்கு ஓர் அமைதி காணலாம்.

ஆயிரம் தெய்வங்களைத் தேடியலைபவரை அறிவிலிகள் என்றவர், எத்தகைய அறிவு அவர்கட்கில்லை என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். மாடனைக் காடனை, வேடனைப் போற்றி மயங்கும் அறிவிருக்கிறதே தவிர, எதனுடும் நின்று ஒளிறும் அறிவு ஒன்றே தெய்வம் (அறிவே தெய்வம் 2) என்ற அறிவு இருக்கவில்லை. அவ்வறிவு இருந்தால் எத்தெய்வத்தையும் தேடி வணங்கலாம். அறிவே தெய்வம் என்ற உணர்வினால்தான் பராசக்தியை ஓம்சக்தி என்று போற்றுகின்றவர், திருமகள் துதியில் "இடு நினக்கோர் தெய்வம் உண்டோ" (3) எனக் கேட்கின்றார். அதுமட்டுமின்றி அங்கேயே 'எனக்கு உனையன்றிச் சரணம் உண்டோ" (3) என்றும் கேட்கின்றார்.

எனவே பாரதியார் பலதெய்வ வணக்கம் உடையவர் என நாம் நினைத்தாலும் அத்தெய்வங்களைத் தனித்தனித் தெய்வங்கள் என்றோ உயர்வு தாழ்வு உடையன என்றோ கருதாமல், 'யாவும் ஒன்றே' என்ற உணர்வு நிலையிலேயே அவற்றைப் போற்றிப் புகழ்ந்து வணங்கி வரங்கள் வேண்டினார் எனக் கருதலும் வேண்டும். அதனால்தான் அவர்,

யாரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று" (முரசு 11)

என முரசறைந்தார்.

இவ்வாறு அமைதி கொள்ளவில்லையென்றால் தெய்வ வணக்கக் கொள்கை முரண்பாடு அவர் பாடலில் உண்டென வேண்டிவரும்.

3. "வேதம் என்றும் வாழ்க" என்று முரசு கொட்டியவர், (முரசு 1) "பதந்தரற்குரியவாய்ப்பல் மதங்கள் காட்டினாள் (ஜயபாரத 5) என்று பாரதத் தாய் பல மதங்களைக் காட்டியதாகக் கூறியவர், வேதத்திற் கூறியதற்கும் பாரதமாதாவின் மதங்களுக்கும் மாறாகச் "சாதி மதங்களைப் பாரோம்" என்றும், "வேதியராயினும் ஒன்றே - வேறு குலத்தினராயினும் ஒன்றே" (வந்தேமாதரம் 1) என்றும் கூறியது ஏன்? அன்றியும் தொடர்ந்து 'ஈனப்பறையர்' என அவரே ஒரு சாரார்க்கு 'ஈனம்' வழங்கியது ஏன்? இம்முரண்பாட்டுக்கு அமைதி யாது?

வேதத்திற்குறியபடிச் சாதிகளின் நெறிமுறை தவறிய காரணத்தினாலும், மதங்களுக்குரிய நெறிமுறைகளை அவற்றிற்குரியோர் பிறழ்ந்த காரணத்தினாலும் சாதி மதங்களைப் பாரோம் என்றார் எனக் கொள்வதே அமைதி. அல்லது விடுதலை வேட்கைப் பாடல் 'வந்தே மாதரம்' ஆதலின் அவ்வேட்கை காரணமாகச் சுதந்தரம் ஒன்றே குறிக்கோளாக இருக்கும் நாங்கள் சுதந்தரத்துக்கு இடையூறாகச் சாதி மதங்கள் இருக்குமேயானால் அவற்றைப் பாரோம் எனக் கூறினார் என்ற அமைதியும் கொள்ளலாம். அப்படியாயின் வேத விதிப்படியான சாதி ஒழுக்கத்தை அவர் ஏற்பவர் என்றும் எம்மதங்களிலும் கூறப்படும் தெய்வம் ஒன்றே என்ற எண்ணம் இருந்தால் மதங்கள் தேவையே என்று மதங்களையும் ஏற்பவர் என்றும் கருதலாம்.

'ஈனப்பறையர்' என்பதில் உள்ள 'ஈனம்' என்பதற்கு இழிவு என்னும் பொருளைக் கருதினால் பாரதியாரும் குறைபாடுடையவரேயாவர். உலக வழக்கை அடிப்படையாகக் கொண்டு 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே (அப்பர் தேவாரம் பதிகம் 309–10) என அப்பரடிகள் வாக்கில் புலையர் என வந்ததுபோலப் பாரதியார் பாடிவிட்டார். எனக் கொள்ளலாம். என்றாலும் இக்காலத்தில் அந்த அடைமொழியுடன் கூடிய அச்சொல்லை வெளியில் துணிவாகக் கூறமுடியாது. அதனால் ஈனம் என்பதற்கு

வேறு பொருள் கொள்ளவேண்டும். ஈன் என்பதற்கு இவ்விடம் என்பது பொருள். (ஆன்–அவ்விடம்) "ஆனும் ஈனும்" எனத் தொல்காப்பியம் ஆளுகின்றது (புள்ளி மயங்கியல் 38) அதனால் 'ஈனப்பறையர்' என்பதற்கு 'இந்நாட்டிடத்துப் பறையர்' எனப் பொருள் கொள்ளலாம். பாரதிக்குக் குறை வராது.

4. தமிழ் மொழியைப் பற்றி உயர்வாகக் கூறியவர்கள் சங்க காலந்தொட்டே இருந்துவருகின்றனர். பாரதியார் "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்றும் அதைத் தொழுது படிக்கவேண்டும் என்றும் (பாப்பாப் பாட்டு) கூறுவதுடன் அமையாமல் மற்றையோரிலும் தமிழ் உணர்வை ஊட்டுவதில் தலைசிறந்தும் விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" (தமிழ் 1) என்றும், "யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை" (தமிழ் 2) என்றும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" (செந்தமிழ் நாடு 7) என்றும் கூறினாலும் பாரத நாட்டின் ஒருமைப்பாட்டுணர்ச்சி வரும்போது உலகுக்கே தரப்பட்ட வள்ளுவர் நினைவு வராமல் போய்விடுகிறது. தமிழ்நாடும் நினைவுக்கு வருவதில்லை. பாரத தேவியின் திருத்த சாங்கத்தில் பாரதமாதாவின் தலம் காசித்தலம். (3) என்றும் ஆறு கங்கை (4) என்றும், முரசு வேதம் (8) என்றும் கூறிய இடங்களில் எங்கே யாவது திருக்குறள் முரசு என்றோ காவிரியாறு என்றோ மதுரைத் தலம் என்றோ ஏதேனும் ஒன்றையாவது கூறாமல் விட்டதே சான்றாகும்.

வள்ளுவர் உலகுக்குத் தரப்பட்டவர் என்றால் அவர் திருக்குறள் உலக நூலாகும். எனவே "மன்னும் இமய மலை" எனத் தொடங்கும் பாடலில்,

"பன்னரும் உபநிடத நூல் எங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல் இதுபோலே"

என்று கூறியதற்குப் பதில்

"பன்னருந் திருக்குறள் நூல் எங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல் இதுபோலே"

என்று கூறியிருக்க வேண்டாவா?

இக்குறை நீக்கத்துக்கு அமைதியாக ஓரிடம் காட்டலாம். பாப்பாப் பாட்டில் ஓடிவிளையாடு பாப்பாவில் - பாரதத் தாயைக் கும்பிடு என்று கூறவந்தவிடத்தில் "தமிழ்த் திருநாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா" எனக் கூறியதைக் கொள்ளலாம். இங்கும் தமிழ் பாப்பாவுக்குக் கூறியதால் அவ்வாறு கூறினார் என்று கூறிவிடுதலும் ஆம்.

எனவே பாரதியார் தமிழ், தமிழ்நாடு என்று சிறப்பிக்கும் பாடல்களில்தான் தமிழுணர்வுடன் இருப்பாரே தவிரப் பொதுவில் பாரதநாடு என்றபோது அவ்வுணர்வு மேலோங்கி இருப்பார் இல்லை என்னலாம்.

5. 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்னும் பாடலில் தாயின் மணிக்கொடியில்,

இந்திரன் வச்சிரம் ஓர்பால் – அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறையோர்பால் (தாய்)
மந்திரம் நடுவுறத் தோன்றும் – அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ

எனத் துருக்கர்க்கும் கொடியுரிமை கூறியவர் பாரத நாட்டை இந்துக்கள் நாடு என்னும் கருத்தில் 'இந்துஸ்தானம்' (ஒடிவிளை 12) எனப் பெயர் கூறுவது பொருந்துமா? அமைதியாக இந்தியா ஸ்தானம் – இந்துஸ்தானம் ஆயிற்று என்னலாமா? சுதேச மித்திரன் 25–9–1906 நாளிட்ட தாளில் 'சந்திரிகை' என்னும் தலைப்புப் பாடலில் 'இந்து நாடு' என்றே குறிப்பிடுகிறார்.

தமிழ் நெஞ்சம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பெயரைப் பாரத நாட்டுக்கு ஏற்றுகிறார் பாரதியார். அப்பெயர் 'ஆரிய நாடு' என்பது. ஆரிய என்னும் சொல் உயர்ந்த(வர்) என்னும் பொருளது. ஆரிய நாடு என்பது உயர்ந்தவர் நாடு என்னும் பொருளது. இவ்வாறு பொருள் கொள்வதில் தவறில்லை. 'ஆரியர்க்குரிய நாடு' என்னும் பொருளும் கொள்ள நேருமே. வரலாற்று நோக்கில் பார்ப்போர் ஒரு காலத்தில் ஆரிய வம்சத்தாருக்குரியதாக இருந்தது போலும் பாரத நாடு எனக் கொள்வரே. பாரதியார் பாடல்களை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற குரல் பலமாக இன்று எழுகிறது. அப்படி மொழிபெயர்க்கப்பட்டால் வடநாட்டவர்-வேற்று நாட்டவர் பாரதநாட்டை 'ஆரியநாடு' என்ற பெயரில் அழைக்கத் தொடங்கிவிடுவர். தமிழராயினார் மறுத்தால் அவர்கள் நீங்கள் போற்றும் தமிழரே- உங்கள் இனத்தாரே (பாரதியார்) கூறிவிட்டாரே - இதோ, அந்தப் பாடல் என்று,

தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானாள் பொன்னாட்டை அறிவிப்பாய்-வானாடு
பேரிமய வெற்புமுதல் பெண்குமரி யீறாகும்
ஆரியநா டென்றே யறி (திருத்த சாங்கம் 2)

என்னும் பாடலைக் காட்டுவரே ஆவர். ஓரிடமன்றிப் பல இடங்களில் ஆரிய நாடு, ஆரிய தேசம், ஆரியர் என்றே பாடுகிறார். 'வந்தே மாதர'ப் பாட்டொன்றில் பாரத நாட்டை 'ஆரிய பூமி' என்றும் 'வாழிய செந்தமிழ்'ப் பாடலில் பாரதநாட்டு மக்களை ஆரிய நாட்டினர் என்றும் பாடியுள்ளாரே.

தெரிந்தோ தெரியாமலோ பாரத நாட்டை-இந்திய நாட்டை ஆரிய நாடு எனப் பாரதியார் கூறியது தமிழ் நெஞ்சத்தைத் துணுக்குறச் செய்யும் என்பது என் திடமான எண்ணம்.

6. சாதி மதங்களை வெறுத்துப் பாடிய பாரதியார், சுயசரிதையில், சர்வமத சமரசம் என்னும் பகுதியில் கோவிந்த வீரஞானி கூற்றாகக் கூறியவிடத்து

ஒருமொழியே பலமொழிக்கும் இடம் கொடுக்கும்
ஒருமொழியே பலமொழிக்கும் ஒழிக்கும் என்ற
ஒருமொழியைக் கருத்தினாலே நிறுத்தும் வண்ணம்
ஒருமொழி ஓம் நமச்சிவாய என்பர்;
அரிகரி யென்றிடினும் அஃதே ராமராம
சிவசிவ என்றிட்டாலும் அஃதே யாகும்
தெரிவுறவே ஓம்சக்தி யென்று மேலோர்
செபம்புரிவ தப்பொருளின் பெயரே யாகும் (63)

எனும் பாட்டில் நமச்சிவாயத்தைப் போற்றி, முடிவில்

பூமியிலே வழங்கிவரும் மதத்துக் கெல்லாம்
பொருளினைநாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்
சாமிநீ சாமிநீ கடவுள் நீயே
தத்வமசி தத்வமசி நீயே அஃதாம்
பூமியிலே நீகடவுள் இல்லை யென்று
புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை
சாமிநீ அம்மாயை தன்னை நீக்கிச்
சதாகாலம் 'சிவோகம்' என்று சாதிப்பாயே (66)

என்று கூறியது ஒரு மதக் கருத்துத்தானே. இதற்கும் அமைதி காணலாம்.

பாரதியார் பாடல்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். தன்னைச் சார்ந்தோர்க்குப் பாடியவை, தன் நாட்டார்க்குப் பாடியவை, தன் தேசத்தார்க்கும் பாடியவை என்பன அவை. மேலே கூறிய சைவ மதச்சார்பும் அத்துவிதக் கோட்பாடும் உள்ள பாடல்கள் தன்னைச் சார்ந்தோர்க்குக் கூறப்பட்டவை யென்னலாம்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து - பாரதியார் பாடல்களில் காணப்படும் முரண்பாடுகளுக்குக் காரணம், "பாரதியார், தாம் பாடத் தொடங்கும்போது நாட்டு நிலை, தம் மன நிலைகளுக்கு ஏற்பப் பாடுவார்; அவ்வப்போது தோன்றும் கருத்துக் களைப் பாடுவார்;முன் பாடிய பாடல்களின் கருத்துக்களுக்கும் இப்போது பாடப்படும் பாடல்களின் கருத்துக்களுக்கும் முரண்பாடு உண்டா இல்லையா என்று கருதாமல் பாடுவார்" என்பதேயாகும். பாரதியார் பாடல்களைப் படிக்கும்போதும் அப்படியே அந்தந்த பாடலளவில் கருத்துக்களைக் கொண்டு அவரை நாம் போற்றுவோமாக. அடுத்த கட்டுரையில் சொல்லாட்சி முரண்பாட்டின் சிறப்பு விளக்கப்படும்.

குறிப்பு : இக்கட்டுரைக்குப் பயன்பட்ட புத்தகம் :
பாரதியார் கவிதைகள். பூம்புகார் பிரசுரம் (1976)
109, மன்னார்சாமி கோயில் தெரு, சென்னை–13

பிறைக்கோடுகளில் உள்ள எண்கள் ஆங்காங்குக் குறிக்கப்பட்ட தலைப்புப் பாடல்களின் எண்கள்.

# ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலைக்கு சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியான் சூடும் பாமாலை

சரசுவதி சங்கம் தோற்றிய பள்ளி
சரசுவதி வித்தியா சாலைநற் பள்ளி
வரந்தரு கலைமகள் வளர்த்திடும் பள்ளி
வானவர் வந்து வணங்கிடும் பள்ளி

மூவர் முயற்சியில் முளைத்தஇப் பள்ளி
முத்தமிழ் விளைத்து முதிர்ந்ததோர் பள்ளி
காவலாய் ஆயிரம் காளைகள் சூழ்ந்து
காத்து வளர்த்துக் கனிந்திடும் பள்ளி



'காரை' நிறுத்தக் கட்டிய 'ஷெட்டில்'
கல்விப் பயிரை நாட்டிய பள்ளி
ஊரைக் கவரும் உயர்ந்தோர் பலரை
உலகிற் கீந்த உத்தமப் பள்ளி

கட்டிடம் விரைவில் கட்டிய பள்ளி
கட்டிடம் திறந்திட அண்ணா மலையெனும்
செட்டிநாட் டரசரைச் சேர்த்தநம் பள்ளி
திக்குகள் எட்டினும் சீர்பெறும் பள்ளி

பள்ளியில் பயிலும் மாணவர் தம்மைப்
பல்கலை வல்லுந ராக்கிடும் பள்ளி
கள்ளியைக் கனிமரம் ஆக்கிடும் பள்ளி
கன்னித் தமிழிற்குக் காவல்இப் பள்ளி

கவிஞரை நாடகக் கலைஞரை, மேடையில்
கழறும் சொற்பொழி வாளரை நாளும்
புவியினுக் கீந்திடும் பொற்தேறு கற்பகம்
புதுவயல் வித்தியா சாலைஇப் பள்ளி

ஆண்டு மாறினும் மாறும், இப்பள்ளி
ஆண்டு விழாநாள் அனுப்பிச காது
ஈண்டு வந்திடா எழிற்றமிழ் சான்றோர்
இனிப் பிறந்தால்தான், எல்லாரும் வந்துளர்

இயலிசை நாடகம் இணையும்அவ் விழாவில்
எழில்மலர்ப் பொழிலாய் இயங்கும்அம் மேடை
பயனுறு மக்களைப் பார்த்திடப் பெற்றோர்
பகலும் இரவும் படையெடுத் திடுவர்

போட்டியிற் கலந்து புகழ்பெறு வோர்க்குப்
பொன்னில் வெள்ளியில் பதக்கம் பொறிக்கும்
நாட்டினர் போற்றும் ஆசான் மார்களை
நாள்முத லாகக் கொண்டநற் பள்ளி



பொன்விழாக் காணும் புண்ணிய நாளில்
பூவையர் பள்ளியாய்ப் பொலிவுறும் பள்ளி
பன்னலம் பெற்றுப் பல்கலைக் கழகமாய்
பரவிப் பெருகிடப் பாமலர் சூடினேன்.

**********************

## சங்கம் பற்றி மறை-திருநாவுக்கரசு

இச்சங்கத்தையும் வித்தியாசாலையையும் போல ஒவ்வொரு செட்டியார் நகரங்களிலும் அமைப்புக்கள் அமைக்கப்பட்டால் செட்டிநாடு மிகமிக விரைவில் எல்லா நலங்களும் பொருந்திய இந்தியாவின் சிறப்பிடமாய்க் கொண்டாடப்பெறும்.

-வித்வான் மறை-திருநாவுக்கரசு

**********************

# சைவ சமயம்

நா. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,
ஆசிரியர், திருக்கோயில்,
அறநிலையத் துறை, சென்னை-34

தொன்று தொட்டே தமிழ்நாட்டில்
　　தோன்றி, மிகவும் சிறப்பினதாய்
நின்று நிலவி வழங்கிவரும்
　　நிகரில் பழைய பெருஞ்சமயம்!
இன்றை உலகில் அறிவியலார்
　　இன்னும் காண்டற்கு இயலாத
ஒன்றை யல்ல உண்மைபல
　　உணர்த்தி நிற்கும் அருஞ்சமயம்! 1

சங்க காலத் தமிழ்நெறிதான்
　　தளர்ந்து பெரிதும் தடுமாறி
மங்கு நிலைமை எய்தியக்கால்,
　　மாண்போடு அதனை வளர்த்தளிக்கத்
துங்க நால்வர் பெருமக்கள்
　　தோன்றி, நாட்டிற் புத்துணர்ச்சி
பொங்கி வழியத் தொண்டாற்றிப்
　　போற்றிக் காத்த பொருட்சமயம்! 2

சிவம்தான் தூய தமிழ்ச்சொல்லே:
　　செம்மை என்னும் சொல்லடியா
உவந்து தோன்றி வழங்குவதாம்;
　　உண்மை இதனைத் தெளிந்துணர்க!
நயந்து சைவ நன்னெறியை
　　நல்ல தமிழர் நெறிஎன்றே
வியந்து மகிழ்க! எனஅறிஞர்
　　விளக்கித் தேற்றும் மெய்ச்சமயம்! 3

அறிவின் முடிந்த முடிபாக
அருமை பெருமை பலநிறைந்து,
செறியும் 'சைவ சித்தாந்தம்'
என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும், அறிவியலும்,
நல்லோர் அடைவும், நடைமுறையும்
நெறியின் அமையக் கொண்டொளிர்ந்து,
நிலைபெற் றிலங்கும் நெடுஞ்சமயம்! 4

மேலை நாட்டின் அறிஞருமே,
மிகவும் வியந்து பாராட்டும்
சால நல்ல பன்முடிபும்,
தருக்க நெறியில் அறிவியலும்,
தோலத் தெருட்டி அறிவுறுக்கும்
தூய நல்ல எழிற்சமயம்!
ஏல மிகச்சீர் திருத்தத்திற்
கிகலாது இயைந்த இன்சமயம் 5

கருதி யுணர்ந்து கலைஞரெலாம்
களித்து வியந்து மெய்ம்மறக்க,
வரையும் வடிவிற் சிறந்துயர்ந்தே
மாட்சி மிகும்அம் பலவாணர்,
அரிய சிறப்பின் அம்மையப்பர்,
ஆலின் நீழல் அமர்செல்வர்,
முருகன் அழகு வடிவமெலாம்,
முன்னி அமைத்த முதற்சமயம்! 6

சைவ சமயம் மிகச்சிறந்த
தமிழர் சமயம்! பழஞ்சமயம்!
மெய்யிற் செறிந்த விழுச்சமயம்!
விரிந்த நோக்கின் வியன்சமயம்!
பொய்யில் கேள்விச் சான்றோர்கள்
போற்றிப் புகழப் பொலிசமயம்
வையம் செழிக்க இதுபரவி
மக்கள் நலமே மிகவாழ்க! 7

★



# பெருங்கவிஞன் பாரதியும் பெண் கல்வியும்

டாக்டர் மு. அறிவுநம்பி, எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
... ... ... ... ... ... ... ... ... ...
பெண்களறிவை வளர்த்தால்–வையம்
பேதமை யற்றிடும் காணீர்"

என்று முரசறைந்து, பெண்மை வாழ்கவென்று கூத்திட்டவர் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். தான் வாழ்ந்த காலத்தில் பெண்டிரெலாம் கால்நடைகளைப்போல, வீட்டு வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டமையைக் கண்டு வெகுண்டெழுந்தார் பாரதியார். "மைத்ரேயியும் ஸீதையிமிருந்த நாட்டிலே சூரிய கிரணம் பார்த்தறியாத புழுக்களைப் போன்று கல்வி,அறிவு,முதலிய யாதுமில்லாத பெண்கள் உலவுகிறார்கள்" (பக்கம் 42-சக்கரவர்த்தினி கட்டுரைகள்) என்று ஆதங்கப்பட்ட நிலையில்தான் 'தமிழ்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே நோக்கமாக வெளியிடப்படும் 'மாதாந்தரப் பத்திரிகை' என்ற குறிப்புரையுடன் "சக்ரவர்த்தினி" என்ற மாதஇதழ் ஒன்றினைத் தொடங்கினார். அதிலே காணப்படும் கட்டுரைகளின் வாயிலாகவும், பெண்களைப் பற்றிய அவருடைய கட்டுரைகளின் மூலமாகவும் பெண்களின் கல்வி, பெண்களில் முன்னேற்றம் இவற்றில் அவர் காட்டிய ஈடுபாடும், அதற்கென அவர் உழைத்த பெற்றிமையும புலனாகும்.

"சக்தி ரூபங்காளகிய மாதர்களை அறிவின்மை என்றும் பேரிருளில் ஆழ்த்தி வைத்துவிட்டுத் "தேசாபிவிருத்தி", "தேசாபிவிருத்தி" என்று கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்றுரைப்போம்?"(பக்.43) என்று வருந்தும் எட்டயபுரத்தான் "தேசத்தின் பெருமை மாதர்களின் அறிவையும் ஆவல்களையும் பொறுத்திருக்கின்றதானபடியால்" பெண்களின் கல்வி மேம்பாட்டிற்கென நிறைய எழுதிடக் காணலாம்.

"உலக வாழ்க்கையினுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நால்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்"

என்று, புதுமைப்பெண்' பற்றிப் பாடுகின்ற மாக்கவி பாரதியார், தன் நெஞ்சத்தில் விழைவைப் புலப்படுத்தும் வகையில், "நமது தேசத்தின் ஆதார சக்திகளாகிய" மாதர்களின் இருதயமும், அவர்களது ஆன்மாவும் இருளடைந்து போக விடுவதைக்காட்டிலும் பாதகச் செயல் வேறில்லை. ஞான கிரணங்கள் அவர்களது ஆன்மாவில் தாக்குமாறு செய்தாலன்றி நமக்குவேறு விமோசனம் கிடையாது" (பக்.44) என்று பலபடப்பேசுவதைக்காணலாம். பெண்களின் அறிவு வளர்ச்சியில் நாட்டு முன்னேற்றமே அடங்கியுள்ளது என்ற அவரது கருத்தின் ஆழத்தினையும், அதற்கென அவர்எல்லா வகையாலும் உழைக்கவேண்டுமென்று கூறுவதையும் நாம் உணர்தல் அவசியமானதாகும்.

மகாகவிஞன் பாரதி, நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமுமின்றி வாழ்ந்தவர்களைக் கடுமையாகச் சாடியவன். நெஞ்சு பொறுக்குதில்லையே என்று நேரடியாகவே எதிர்த்தவன்தான் பாட்டுத் திறத்தால் இந்த வையத்தைப் பாலிக்க வந்த அறிஞன். நாட்டின் தேவையை நன்குணர்ந்த நிலையில் பெண் விடுதலைக்காகப் போர்க்கொடி தூக்கிய முதல் மறவன் அவன். நாட்டினில் சுபிட்சமும், அறிவுப் பேரொளியும், ஆக்கமும் நிறைந்திட அவன் வலியுறுத்திய நெறிமுறைகள் எல்லாமே பெண்களின் கல்வி, பெண்களின் முன்னேற்றம், பெண்களின் விடுதலை ஆகியவைகளே. அதனாற்றான், பெண்களையெல்லாம் ஒருங்கு கூட்டி, "ஸ்திரீயின் முக்கிய கடமை தாம் தேசமக்களுக்குத் தாய்மார் என்பதை நன்றாக அறிந்து, தமது புத்திரர்களும், பெண்களும் ஒழுக்கம், அறிவு, கல்வி, செல்வம் என்பவற்றிலே சிறந்து விளங்குமாறு தாம் செய்தற்குரிய தகுதியடைவதன்கண்ணே அரிய ஆவல் கொண்டவர்களாகி, அவ்விஷயத்தில் தம்மால் கூடியவரை முயற்சி புரிய வேண்டும். மகான்கள் பிறந்து வாழ்ந்த நாட்டிலே மண்ணுண்ணிப் பூச்சிகள் நடமாடுவதைக் கண்டு ஒவ்வொரு ஸ்திரீயும் மனம் புழுங்கவேண்டும். தத்தம் மக்களுக்கு அறிவு, உயர்குணம், சரீரத் திடமை, மனோதைரியம், ஆண்மை முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டே இருக்கவேண்டும்." (பக். 78-79) என்று அறவுரையும், அறிவுரையும் அளித்துப் பிறருக்கும், "அதற்கு மூன்று விதமான உபாயங்கள் இருக்கின்றன; முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே"(பக்.83)என்று போதிக்கவும் காணலாம். எனவே பெண்களது அறிவாற்றல் கொண்டு இந்த உலகையே வல்லதாக்கும் வழிமுறைகளைக் கூறி வற்புறுத்துவதில் பாரதிக்கு நிகர் பாரதி மட்டுமே. இந்தியக் கண்டத்தில் மட்டுமில்லாது உலகப் பெண்களின் முன்னேற்றத்தினையும் அவர் தன் நோக்கமாகக் கொண்டிருக்கின்ற தன்மையை அவரது பிற பாட்டுக்களிலும் காண முடிகின்றது. அதனாற்றான், 'சியூசினி' என்ற பெண்ணொருத்தி சீன மொழியில் எழுதிய பாட்டைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து தமிழர்க்கு வழங்குகின்றார்.

"அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர்; நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர், துணிவுற்றே" என்ற அப்பாட்டு வரிகளில்

நெஞ்சைப் பறிகொடுத்த நிலையில்தான் அதனைத் திருத்தமுறத் தமிழில் மாற்றி,

மக்கள் மனத்தில் ஆழப் பதிக்கின்றார். அதுமட்டுமின்றி வாய்ப்புக் கிடைக்கின்ற வேளைகளில் எல்லாம் பெண்கள் படிக்க வேண்டியதன் அவசியத்தை ஆழமாகவும் அழுத்தமாவும் எடுத்துரைப்பார். அடிமைச் சமுதாயமாக நம் பெண்கள் இருப்பதை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறியழ நேர்ந்ததை அவரது பாடல்கள் பறைசாற்றுகின்றன என்று கூறல் வேண்டும். அறிவற்ற நிலையில் நம் பெண்கள் அலங்கோலமாகத் திரிவதையே, 'பாஞ்சாலி சபதம்' என்ற காவிய ஓவியத்தில் காட்டுகின்றார் என்று கூறுவதும் மிகையில்லை. ஏனெனில் 'புதுமைப் பெண்'ணைப் பாடும்போதும், பாஞ்சாலி சபத்தில் தேயம் வைத்திழந்த நிலையைச் 'சீச்சீ! சிறியர் செய்கை' என்று காறியுமிழ்ந்ததைப் போலவே,

"நாணுமச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்தரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"என்று

உணர்ச்சி பொங்கப் பாடிடக் காணலாம்.

"கல்வி யில்லாத பெண்கள்
களர் நிலம் அங்கே
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதலில்லை" என்று பாவேந்தர் பாரதிதாசன்

பாடுவதற்குக் காரணமே பெண்களின் அறியாமையால் ஏற்படுகின்ற அல்லல்கள்தாம் என்பதைக் காலம் சுட்டிக்காட்டும். பாரதியின் அடிச்சுவட்டில் பாரதிதாசன் உட்படப் பலர் பல்வேறு வகைகளில் மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைச் சாடியிருத்தல் கண்கூடு. இவர்களின் பாட்டுக் கணைகள் ஏற்படுத்திய பாதிப்பே பெண்களும் சம உரிமை கேட்டுப் போராடிய வீரவரலாறு. அதன் காரணமாகக் கிடைத்த வெற்றியே ஆண்களும் பெண்களும் ஒன்றென்னும் சித்தாந்தம். அதுமட்டுமா?

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

பெண்களும் ஆண்களைப்போன்று கல்வி, கேள்வி, அரசியல், உலகியல் அறிவியல் போன்ற அனைத்துத் துறைகளிலும் தேரத்தொடங்கினர். கல்வியறிவு பெற்றதால் 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருளை' உய்த்துணரும் ஆற்றல் கைவரப்பெற்று, நுண்மான் நுழைபுலங்கொண்டு துறைதோறும் துறைதோறும் பங்கெடுத்துச் சிறக்கக் காண்கின்றோம். பெண்கள் தொடாத துறையே இல்லை என்று சொல்லுமளவிற்கு ஒரு தேர்ச்சி வந்துற்றதென்றால் அதற்குக் காரணம் பாட்டுக்கொரு புலவன் பாடிப்பாடியும், பாடுபட்டும் வலியுறுத்தியும் சுட்டிக்காட்டிய பெண்கல்வியன்றோ? உலக நாடுகள்

அனைத்திலும் ஆணுக்குப் பெண் சமமாக இருக்கும் காட்சியைக்காண விழைந்தவன் அந்த மகாகவி. படிப்பறிவும், உலக ஞானமும் கற்றுத் தேறிய பெண்களைக் கண்டு அவன் மனம் துள்ளிக் குதித்தது. ஆனந்தப்பள்ளுப் பாடியது. எல்லாப் பெண்களையும் வரவழைத்து இந்தக் கண்கவர் காட்சியைக் கூறிக்கூறிக் கும்மியடித்தது. அதன் வெளிப்பாட்டு வரிகளே இவை:-

“ பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி”.

பாரதியாரின் கனவு நனவாகியது உண்மைதான். பெண்களின் கல்வி மேம்பாடும், அறிவுத்திறமும் நாட்டினையும் உலகையும் நலப்படுத்தும் ஆக்கத்திற்குத் உறுதுணையாக விளங்குகின்றன. இந்நிலைமையானது பட்டுப் போகாமலும், கெட்டுப்போகாமலும் காத்தல் அவசியமான பணியாகும். பாரதியாரின் பாட்டுநெறி பாரெல்லாம் பரவுதல் வேண்டும். அவர் தந்த பாட்டைப் பாடுவோம்; அவர் போட்டுத் தந்த பாட்டையில் நலத்தைத் தேடுவோம்; அவர்போலப் பாடுபடல் வேண்டுமென்ற நன்னெஞ்சை நாடுவோம். அப்போதுதான் நாம் நலமுற வாழுவோம்.

வாழ்க பாரதியின் புகழ்.

*****************

## தமிழ் வளர்க்கும் சங்கம் பற்றி
## தமிழ்த் தென்றல் திரு. வி. க.

9—5—37

இச்சங்கத்தின் 15-ம் ஆண்டுவிழாக் கூட்டத்தில் தலைமைவகிக்கும் பேறுபெற்றமை குறித்து மகிழ்வெய்துகிறேன். இச்சங்கச் சார்பில் நடைபெற்றுவரும் வித்தியாலயத்தின் நடைமுறை செட்டிமார் நாட்டுக்குப் புத்துயிர் வழங்குவதாயிருக்கிறது. சங்க உறுப்பினர்க்கும், பள்ளி ஆசிரியன்மார்க்கும், மாணாக்கர்க்கும் உற்றுள்ள தொடர்பு ஈரமைப்பின் ஆக்கத் திற்கு அடிப்படையாயிருத்தல் உள்ளத்தைக் கவர்ந்தது.

*****************

# யார் நல்லவர்கள்?

வித்துவான் மு. சிவச்சந்திரன், எம். ஏ.,
(துணைப் பேராசிரியர், தருமையாதீனம் தமிழ்க் கல்லூரி, தருமபுரம்)

★

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமாம் மழை" என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வுலகில் மழை இன்னும் காலம் தவறாது பொழிகிறது என்றால் நல்லவர்கள் சிலபேர் இருப்பதாலேதான் என்பது சான்றோர்களின் நம்பிக்கை. இவ்வுலகம் நிலை பெற்றிருக்கிறது என்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? தமக்கென வாழாமல் பிறருக்கென்றே வாழும் தகை சான்ற பெரியோர்கள் இருப்பதால்தான் என்று புறநானூறும் கூறுகிறது. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று தொடங்கும் பாடலின் கருத்து அனைவரும் அறிந்ததே! 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்பது பொய்யா மொழிப்புலவரின் கருத்து. எனவே நல்லவர்கள் நாலு பேராவது இருந்தால்தான் நாடு நலம்பெறும் என்பதில் ஐயமில்லை.

அந்த நல்லவர்கள் இன்று நம் நாட்டில் இல்லையா? இல்லை இருந்தும் பயனில்லையா? இன்று நாட்டில் நடக்கும் கொடுமைகளுக்கு என்ன காரணம்? என்பன போன்ற வினாக்கட்கு விடை காண வேண்டுவது சோறு உண்பதை விட மிக முக்கியமான செயலாகும்.

இன்று நம் நாட்டை, நம்நாடு என்ற உணர்வில்லாமல் வேறு அயலார் மனநிலையில் நின்று சிந்தித்துப் பார்த்தால் நாட்டில் நடக்கும் திருட்டும், பொய்யும், புரட்டும், தீமைகளும், வஞ்சனையும், சூதும்வாதும் வல்லவனை வணங்கும் பேடிமையும் நம் கண் முன்னே தெளிவாகத் தெரியும். இத்தகைய தீமைகளைச் செய்வோர் நாட்டின் தொகையில் எத்தனை பேர்? என்று கணக்கிட்டுப் பார்த்தால் மிகவும் குறைந்த சதவீதமே என்பதும் புலனாகும். 2 பேர் தப்பு செய்யும் அந்த இடத்தில் 20 பேர் நல்லவர்கள் இருந்தும் அவர்களுக்குள் ஒற்றுமையின்மையும் துணிவின்மையும் நமக்கேன் வீண் வம்பு? என்று போகும் ஒட்டாத மனநிலையும் இருப்பதால் எந்தத் தப்பும் தடுக்கப்பட முடியாமல் போய்விடுகிறது. தடி எடுத்தவன் தண்டல்காரன் என்னும் பழமொழி இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நல்லவர்கள் பலர் இருந்தும் தீயோர்கள் சிலர் இருந்தும் துன்பங்கள் நாளுக்கு நாள் பல்கி வருவதற்கு என்ன காரணம்? என்று சிந்தித்தால், தனக்கு நேரிடையாகப் பாதிப்பு ஏற்படாத வரையிலும் எதிலும் யாரும் தலையிடுவதில்லை என்ற எண்ணத்தைக் கலியுக தர்மமாகக் கடைபிடித்து வருவதே காரணமாகும் என்பது விளங்கும். ஆனால் நேற்று பக்கத்து வீட்டுக்காரனுக்கு நடந்த அந்த செயல் நமக்கு நாளைக்கு வராதா? வந்தால் என்ன செய்வது? என்ற எதிர்காலச் சிந்தனை இல்லாமல் பக்கத்து வீடு பற்றி எரிந்தால் தன்வீட்டில் தண்ணீர் ஊற்றும் மனோபாவத்தில் வாழ்க்கை நடத்துவது இன்று நல்லோரின் தர்மமாக இருப்பதும் மற்றுமொரு காரணமாகும். தனக்கு நேரிடையாகத் துன்பம் வந்தபொழுது "ஐயோ! என்னைக் காப்பாற்றுங்களேன்!" என்று கத்தினால் யார் வருவார்? உடனே, "சமுதாயம் ரொம்பக் கெட்டுப் போச்சு! உதவி செய்யும் மனநிலையே அத்துப்போச்சு!" என்று திட்டுவதால் லாபம் என்ன? இவற்றை எல்லாம் நன்கு சிந்தித்தல் வேண்டும்.

இந்த சமயத்தில் கந்த புராணக் கருத்தொன்று நினைவுக்கு வருகிறது சூரபதுமனின் ஆட்சிக்குள் அடங்கி, ஒடுங்கி, சுதந்திரமே இன்றித் தேவர்களும் தேவர்களின் தலைவனும்

துன்புற்ருர்கள் என்று கந்தபுராணம் கூறுகிறது. ஆனல் அவர்கள் துன்புற்றதற்குக் காரணம் அவர்களின் முந்தைய செயல்களே என்றும் கந்தபுராணம் விளக்கம் கூறுகிறது. தட்சன் தான் செய்த யாகத்திற்கு எல்லோரையும் அழைத்திருந்தான். சிவபெருமானுக்கு மட்டும் அழைப்-பில்லை. தங்கள் தலைவனும் சிவனை ஒதுக்கி நடத்தும் யாகத்திற்கு சென்றது முதற்குற்றம். தங்கள் முன்னிலையிலேயே தங்கள் தலைவனை இழிவு படுத்திப் பேசிய தட்சனின் செயலைக் கண்டும் வாளா இருந்தது இரண்டாவது குற்றம். இக்குற்றங்களால் அவர்கள் பின்னே துன்புற்ருர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? நல்லவர்களுக்குப் பிறனெருவன் துன்பம் விளைவிக்கின்ருன் எனின் அதனைப் பார்த்துக் கொண்டிருப்பதும் கூட ஒரு பெருங்குற்றமே எனக் கந்தபுராணம் கூறுகிறது. தேவர்கள் அனைவரும் தட்சனின் செயல் தவறு என்று எண்ணி அவனைத் தண்டிக்க முனைந்திருப்பார்களானல் அவர்கள் அழிய வேண்டி வருமே என்ற கருத்து எழுதுவது இயற்கையே! அங்ஙனம் நன்மைக்காகத் தீயோனிடம் போரிட்டு மாண்டால் அந்த அறம் – அறக்கடவுள் அவர்களைக் காப்பாற்ற மாட்டாரோ? என்பதே அதற்குரிய விளக்கமாகும்.

இக்கருத்தினை ஒத்துப் பாரதியும் பாடுகின்ருர். பாஞ்சாலி சபதத்தில் துச்சாதனன் திரௌபதி கூந்தலைப் பிடித்து தெருவழியே இழுத்துச் சென்ற பொழுது ஊர்மக்கள் எங்ஙனம் அக்காட்சியைக் கண்டும் வாளா இருந்தனர் என்பதை மிகவும் கடுமையாகப் பாடுவார்.

"நீண்ட கருங்குழலை நீசன் கரம் பற்றி
முன்னிழுத்துச் செல்கின்ருன், வழிநெடுக மொய்த்தவராய்
'என்ன கொடுமை இது' என்று பார்த்திருந்தார்
ஊரவர் தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ!
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே
பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்கள்என நின்று புலம்பினர்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"

இவ்வரிகள் தாம் எத்துணை ஆழம் வாய்ந்தவை. 'என்ன கொடுமை இது' என்று சொல்லவும் சிந்திக்கவும் தெரிந்த அந்த ஊர் மக்களுக்கு, அதனைத் தடுக்கவும் அவனைப் போக்கவும் இயலவில்லையே ஏன்? என்று பாரதியார் கேட்கிருர். துணிவும் ஒற்றுமையும் இன்மையே காரணமாகும் என்று சொல்லாமல் சொல்கின்ருர் அந்த மகாகவி. அதனல் தான் அவர்களுக்கு அடைமொழியாக 'வீரமிலா நாய்கள்' என்றும் அவர்களின் உருவம், 'நெட்டை மரங்கள்' என்றும் அவர்களின் நல்வார்த்தைகள், 'பெட்டைப் புலம்பல்' என்றும் வருணிக்கின்ருர்.

மேற்கூறும் கருத்துக்கள் அனைத்தையும் சிந்தித்துப் பார்த்தால் ஒரு முடிவுக்கு வரலாம். "நாம் நல்லவர்கள்; ஒரு வம்புதும்புக்குப் போகமாட்டோம்" என்றிருருந்த நிலையை மாற்றிக் கொண்டு நம் கண் முன் நடக்கும் அக்கிரமங்களைக் கண்டு துடிக்கும் மனேநிலையுடன் அத் துயர் துடைக்கும் உடனடிச் செயலையும் மேற்கொள்வோம்; துணிவோம்; துயர் களைவோம்! என்று முடிவு எடுப்பதே நல்லவர்களின் இலக்கணம் எனக் கொண்டு வாழ்வதும் வாழ வைப்பதும் உயிர்மூச்சாகக் கருதி வாழ்வில் வளம் பெறுவோமாக!

நல்லவர்கள் கையாலாகாதவர்கள் என்னும் நிலை மாறி நல்லவர்கள் வல்லவர்கள் என்னும் நிலையைப் படைப்போமாக! — அவர்களே நல்லவர்கள்.

————

# புத்தகமும் படித்தலும்

ஆசிரியர் ஸ்ரீராம. ஸ்ரீநிவாசன்,
ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை, புதுவயல்

புத்தகம் என்றால் என்ன? புத்தகம் என்பதன் பொருளை நாம் உணர்த்த விழையும் போது அச் சொல் தமிழ் மொழிக்கே உரிய சொல் அல்ல என்பதை அறிய வேண்டும். புஸ்தகம் என்னும் வடமொழிச் சொலலில் இருந்தே உருவாகி "ஸ்" என்னும் வடமொழி எழுத்து நீக்கப் பெற்று "த்" என்னும் நம் தாய் எழுத்து இணைக்கப்பெற்று உருவானது என்பது திண்ணம். புத்தகம் என்னும் சொல்லுக்கு நூல் என்பது உரிய நம் மொழிச் சொல்லாகும். புது+அகம் எனப் பகுத்துப் பார்க்கும் பொழுது அதன் பொருள் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. புதுமையின் கருத்துகளை, எண்ணங்களை, சொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் அப் பெயர் வழங்கப்படலாயிற்று ஒருவன் புத்தகம் (நூல்) படிக்கிறான் என்றால் அவன் புதுமையான கருத்துக்களை, எண்ணங்களை, சொற்களை அறிந்து கொள்கிறான். ஆகவே தான் பள்ளிகள் முதல் கல்லூரிகள் வரை புத்தகங்கள் வாங்க வேண்டும் என்ற முறை மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு வாங்கா விட்டால் மேற்சொன்ன வாய்ப்புகள் கிட்டாமல் போய்விடுகிறது, புத்தகங்களை மூன்று பிரிவுகளாக நன்னூல் நமக்குத் தெளிவாக பிரித்துக் காட்டுகிறது. அப்பிரித்துக் காட்டப்பெற்ற முறை யாதெனில், 1. முதல் நூல், 2. வழி நூல், 3. சார்பு நூல் எனக் கொள்கிறோம். இக் கொள்ளுதலின் அடிப்படையில் பல கிளைப்பிரிவு முறைகள் தோன்றி உள்ளன. அது யாது என்று இவண் காணும் பொழுது வரலாற்றுப் பிரிவு, புவியியல் பிரிவு, அறிவியல் பிரிவு, மருத்துவப் பிரிவு, மதப் பிரிவு, வேளாண்மைப் பிரிவு, சமூகவியல் பிரிவு, இயல் பிரிவு, இசைப் பிரிவு, நாடகப் பிரிவு எனப் பல பிரிவுகளாகப் பிரிந்து நம்மிடையே உலவி நம்மை நிறை மனிதனாக மாற்ற வகைகள் செய்து வருகின்றன.

நாம் உரை நடை வடிவில் உள்ள நூல் பிரிவுகளை மட்டும் சார்ந்து படித்துப் பயன் பெறுவதோடு பாடல்கள் படிப்பதை, கவிதைகள் படிப்பதை அலட்சியப்படுத்தக் கூடாது. பாடல் கவிதைகள் படிப்பதால் உயர்ந்த எண்ணங்கள் கருத்தாழமிக்க அழகான கற்பனை வளங்கள், இயற்கை வர்ணனைகள் ஒன்றை ஒன்று ஒப்பிடக் கூடிய பக்குவங்கள் எதுகை மோனைச் சொற்கள் போன்ற பல அறிய பொக்கிஷங்கள் அவைகளின் வாயிலாக கிடைக்கப்பெற்று அறிய முடிகிறது. மேலும் இசைத் தொடர்பான நுணுக்கங்கள் பாவனைகள், ராகங்கள், தாளங்கள், பல்லவிகள், சரணங்கள் அனுசரணங்கள் முதலியவைகளையும் அறியும் பேறு நமக்குக் கிடைக்கப் பெறுகிறது. ஆதலின் உள்ளத்தைத் தொடும் கவிதைகளையும் அதன் கருத்துகளையும் பள்ளியில் பயிலும் இளங்குழவிகள் முதல், கல்லூரிக் காளைகள் வரை அறிந்து அவற்றின் இன்ப மணத்தை நுகரக் கூடிய வழி வகைகளைப் பிரித்துக் காட்டி அவர்களைச் செயல் படச் செய்ய வேண்டும்.

நம்முடைய நண்பர்கள் உயிருக்கு உயிராக இருக்கும் இணை பிரியாத் தோழர்கள் விதி வசத்தாலோ அல்லது கால மாறுபாட்டாலோ மாறலாம். அல்லது இவ்வுலகை விட்டே ஈசனுடைய பாதங்களைச் சென்று அடையலாம், ஆனால், நம்முடைய புத்தகங்கள், (நூல்கள்) நாம் விரும்பும் நூல்கள் நம்முடன் இருந்து நம்மோடு பொறுமையாகப் பேசும். நம்முடைய வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்காது. நம்மை வெறுக்காது, நம்மைக் கண்டு பொறாமை கொள்ளாது. புத்தகங்கள் நமக்காகவே தியாகம் செய்து ஏணிப்படியாக இருந்து, தோணியாக இருந்து, கருவியாக இருந்து நம்மை நல்ல வழியில் நடத்திச் செல்லும் ஊன்றுகோலாக அமையும். நம் நண்பர்கள் நம்முடைய வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்பார்கள். புத்தகங்கள் அவ்வாறு இல்லை. உண்மையான நண்பர்கள் யார் என்று ஆராய்ந்து பார்த்தோமேயானால் புத்தகங்களைத் தவிர (நூல்கள்) வேறொன்றும் இல்லை என்பது தெளிந்த உண்மை.

"ரஸ்கின் என்பவர் புத்தகங்களை அரசர்களுடைய பொக்கிஷங்களுக்குச் சமம் என்று வர்ணித்துக் கூறுகின்றார். மேலும் அவர் பொன்னாலும், பொருளாலும் குவித்தால்தான் பொக்கிஷங்கள் என்பது அல்ல எனவும் விலை மதிக்க முடியாதவை அறிவு, உயர்ந்த எண்ணங்கள், பரந்த நோக்கங்கள் என்பன. இவற்றையெல்லாம் அறிய பொக்கிஷங்களாகப் புத்தகங்கள் தாம் வழங்குகின்றன. ஆகவே நூல்கள் படிக்கும் எண்ணத்தை, வழக்கத்தை, செயலை மாணவர்களிடையே பழக்கப்படுத்தி அவற்றை வழக்கமாக்க வேண்டும்.

நம் சுவைக்கு ஏற்ப, நம் விருப்பத்திற்கு இணங்க புத்தகங்களை, அதாவது வரலாறு சம்பந்தப்பட்ட நூலோ, அல்லது அறிவியல் சம்பந்தப்பட்ட நூலோ, அல்லது மருத்துவ சம்பந்தப்பட்ட நூலோ, அல்லது தத்துவ நூல்களோ, அல்லது நம்மைச் சான்றோனாக்கச் செய்யும் எவ்வகையான நூல்களைப் பற்றியோ படிக்கலாம்.

புத்தகம் படிக்கும் பழக்கம் நம்மை மகிழ்ச்சி அடையச் செய்கிறது. மன நிறைவை உண்டாக்குகிறது. வாழ்க்கை முழுதும் மகிழ்ச்சியைக் காட்டக்கூடிய வழி முறைகளையும், ஈஸ்வர ஞானத்தையும் பெற அறிய வாய்ப்பாக அமைகிறது. மனதை அலைய விடாமல் ஒரு நிலைப்படுத்த வழிவகை செய்கிறது ஒய்வு நேரங்களை வீணாக்காமல் அறிவை வளர்க்க ஏதுவாகிறது. தங்கம் போன்ற செல்வத்தை விட விலை உயர்ந்த செல்வம் அறிவுச் செல்வம். அந்தச் செல்வத்தை நமக்குப் புத்தகங்கள் வழங்குகின்றன. அச் செல்வத்தை நம் இளைய தலைமுறையினர் பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது, நமது கடமை (ஆசிரியர்). அறிவுச் செல்வம் பெற்ற ஒருவன் அனுபவிக்கின்ற சுகம் யாற்றான் அனுபவிக்க இயலாது என்பது வெள்ளிடை மலை. யாரொருவன் படிக்காமல் இருக்கிறானோ (புத்தகங்கள்) அவன் வாழ்க்கை வெறிச்சோடிக் கிடக்கும். வறண்ட பாலை நிலத்துக்குச் சமமாகும். வறண்ட பாலை நிலத்துக்குச் செல்ல யாரும் துணியமாட்டார்கள். என்பது கண்கூடு. கசடு இல்லாத நாவல்கள் படிப்பதால் அவைகள் வேடிக்கையான

பொழுது போக்காகவும், மனச் சஞ்சலம் இல்லாமல் இருக்கவும் வழிவகைகள் செய்கிறது.

பல நூல்கள் படிப்பதால் கற்பனைத் திறன் வளர்கிறது. எண்ணக் குதிரை விரைந்தோடிக் கடல்கள், ஆறுகள், மலைகள் முதலியவற்றை எல்லாம தாண்டி விண்ணிலே பறந்து சென்று விண் மீன்களைத் தொடர்ந்து செல்கின்றன. இவ்வெறி ஓட்டத்தை நாம் மட்டும் ஓட்டாமல் சிறார்களின் எண்ணக் குதிரைகளைத் தட்டி விட அவர்களுக்கு நாம் (ஆசிரியர்) தூண்டுகோல் சாட்டைகளாக மாற வேண்டும்.

படித்தல், படித்தல், படித்தல் என்று கூறும் பொழுது அப்படித்தல் ஆழ்நத படிப்பு அகன்ற படிப்பு என இரு வகைகளாகக் கொள்ளலாம். ஆழ்ந்த படிப்பு என்பது கருத்தூன்றி படிப்பதாகும். நாம் ஒரு செய்யுளையோ அல்லது ஒரு கவிதையையோ அல்லது உரை நடைப் பகுதியையோ படிக்கும் பொழுது அவை-களின் சொல்நயம், பொருள் நயம், இலக்கண நயங்கள் முதலியவற்றைத் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் ஆழ்ந்த படிப்பாகும். ஆழ்கடலில் சென்று விலை மதிக்க முடியாத முத்தைப் பெறுவது போல் ஆழ்ந்த படிப்பை மேற்கொண்டால் அம்முத்தைப் பெறலாம். ஒருவன் ஆழ்ந்த படிப்பை மேற்கொள்ளுவானேயானால் அவன் நூல்களோடு ஐக்கியமாகிவிடுவான். மெய் வருத்தம் பார்க்கமாட்டான். கண் துஞ்ச மாட்டான். பசி நோக்க மாட்டான். இன்பக்கடலில் மிதந்து கொண்டு செல்வான் இன்பக் கடலின் கரையைக் காண துடிப்பான்.

அகன்ற படிப்பு என்பது மெலெழுந்த வாரியாக, மேலோட்டமாக எளிய முறையில் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுதல் அகன்ற படிப்பாகும். இம்முறை-யில் சிறு சிறு நாவல்கள், எளிய நடைக் கவிதைகள் முதலியவைகளைப் படிப்பதைக் கூறலாம். படித்தல் என்ற சொல்லில் "த்" என்ற எழுத்தை நாம் நீக்கிவிட்டு ஆராய்ந்தோமேயானால் படிதல் என்பது கிடைக்கும். உயர்ந்த நூல்கள் எவற்றைக் கூறுகின்றதோ எக் கருத்துக்களைக் கூறுகின்றதோ, எவ்வுண்மைகளை வலியுறுத்-துகின்றனவோ அவைகளை நாம் படித்து உணர்ந்து, சிந்தித்து, படிதல் என்ற பண்புக்கு ஆளாகி, அவைகளின் கீழ்ப்படிந்து நாம் செயலாற்ற வேண்டும்.

புத்தகமும், படித்தலும் என்ற தலைப்பினை ஆராய்ந்து பார்த்ததில் பல அரிய கருத்துகள் கிடைக்கப் பெற்றன. அக்கருத்துக்களைச் செயலாற்ற செய்யவும் அவைகளின் இன்பங்ளை அனுபவிக்கச் செய்யவும் நாம் (ஆசிரியர்கள்) குழந்-களை ஊக்குவிக்க வேண்டும்.

மத நூல்கள், சமய நூல்கள், அறவழி காட்டும் நூல்கள், உயர்வழி காட்டும் நூல்கள் போன்ற உயர்ந்த கருத்துக்களை வழங்கக் கூடிய நூல்கள் எல்லாவற்-றையும் படித்து அதன்படி நடந்து உயர்ந்த நெறியாளனாக நம்மை மாற்றிக்-கொள்ள வேண்டும் என்பது கருத்து. நாம் மாறுவதோடு நம்மிடம் ஒப்படைக்கும் சிறார்களையும் மாற்ற வேண்டும்.

வாழ்க நூல்கள். வளர்க படித்தல் முறை.

# நெற்பயிர்

பெரும்புலவர் காசி தனக்கோடி, எம். ஏ.,
முன்னாள் முதல்வர், சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்

" No Man was ever yet a great poet with out being at the same time a profound philosopher என்று கூறினர் மேலை நாட்டு அறிஞர் ஒருவர். புலவர்களை எண்ணிப் பார்க்குங்கால் ஒரு, வகையில் அவர்கள் ஞானியர்களாகவும் விளங்குகின்றார்கள். புலமையில்லாத ஞானியைக் கண்டாலும் காணலாம், ஞானம் இல்லாத புலவரைக் காண்டல் இயலாது. அவ்வாறு இருப்பின் அவர் புலவர் அல்லர். புலவர்கள் ஞானியரே யாவர் என்பது திருவள்ளுவருக்கும் உடன்பாடாகும். (கு. 234) எனவே, தத்துவஞானம் ஓரளவாவது இல்லாத ஒருவர் எவ்வளவு பேராற்றல் படைத்த கவிஞராயினும் சான்றோர் அவரைப் புலவராக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இத்தகைய சீர்மைமிக்க புலவர்கள் சாதாரணமான பொருள்களில் கூட, ஓர் அரிய உண்மையைக் கண்டு உலகுக்கு உணர்த்துவார்கள். காலையில் கீழ்க்கடலில் இளமைச் செல்வி யுடையதாய்த் தோன்றும் கதிரவன், விரைந்து மேற்சென்று பகலெல்லாம் ஒளிதந்து மாலையில் தன் ஒளி குன்றி முதுமை எய்தி மேற்றிசையில் மறைகின்ற காட்சி, நாம் நாள்தோறும் காண்கின்ற ஒன்றாகும். ஆனல் தத்துவ ஞானியாகிய திருமூலர் இதன் மூலம் ஓர் அரிய உண்மையை மன்பதைகளுக்கு, உணர்த்துகின்றார். "ஏ மானிடரே, நம் வாழ்க்கையும் இப்படித்தான் காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலர்ந்து மறுநாள் உதிர்ந்து போகின்றது. ஆகையால், நிலையாயிவ்வுடல் நிலையினபொழுதே நிலையான வீடு பேற்றுக்குரிய சாதனங்களில் ஈடுபடுங்கள்" என்று உணர்த்துகின்றார்.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்,
குழக்கன்று முத்தெரு தாய்ச்சில நாளில் விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே.

(திருமந்திரம். 177)

நாட் காலையிலே நாம் எழுந்து காலைக் கடன்களை முடிப்பதற்குக் கொல்லைப் புறத்திற்குச் செல்கின்றோம். அங்குப் புற்பயிரானது பச்சைப் பசேலென்று பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று எங்கும் பரவிக் கிடக்கின்றது. அஃது ஒவ்வொன்றும் தன் நுனியில் ஒரு சிறிய முத்தனைய நீர்த்துளியைத் தாங்கிக் கொண்டிருக்கின்றது. இக்காட்சியைக் கபிலர் ஒருநாள் கண்டார். அருகில் சென்று அதனைக் கூர்ந்து கவனித்தார். ஓர் அரிய உண்மை புலப்பட்டது அவ்வுண்மையால் உந்தப்பட்ட உள்ளுணர்வு ஒரு கவிதை வடிவில் மலர்ந்தது. அந்தப் புல் நுனி மேல் உள்ள நீர்த்துளி, அருகில் இருந்த ஓர் உயர்ந்த பனைமரத்தின் வடிவை அப்படியே படம் பிடித்துக் காட்டியது. அக்காட்சி தாம் முன்னாள் படித்த திருக்குறளை நினைவூட்டியது. இத்திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாவும், மிகவும் அரிய பெரிய உண்மையை யல்லவா படம் பிடித்துக் காட்டுகின்றது.

"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி!!

(தி. மா. 5)

இதனுல் தான் போலும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்

" கல்லின் கதைகள்எல்லாம்
காதுகுளிரக் கேட்பேன்
புல்லின் கதையினையே
புராணமாக விரிப்பேன் "

என்று உள்ளக் களிப்பினுல் துள்ளிக் கவிபாடியுள்ளார்.

இனி, ஒரே இயற்கைப் பொருள் ஒவ்வொரு புலவர்க்கு, அவரவர் மனே நிலைக்கேற்ப ஒவ்வொரு விதமான உணர்வினை ஊட்டியதை நெற்பயிர் விளைவு பற்றிப் புலவர் மூவர், தம் கற்பனை வளம் தோன்றக் கூறியிருப்பதை இப்போது நோக்குவோம்.

' நிலத்துக் கனியென்ப நெல்லும் கரும்பும்' என்ருர் நான் மணிக் கடிகையாசிரியர். அத்தகை நெல்லை பயிர் செய்கின்ற 'உழவனே உழுவான் உலகுக்குயிர்' என்று போற்றினுர் புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர், இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த உழவுத்-தொழிலின் பயனுக விளையும் நெற்பயிர் வளர்ச்சியைப் புலவர்கள் கண்டு, அதன் மூலம் தாம் காணும் உண்மைகளைக் காவியங்களில் அமைத்து அமரத்தன்மை உடையதாக்கி விடுகின்ருர்கள்.

வயலில் நெற்பயிர் வளர்கின்றது. அது கருக்கொள்கின்றது. அதனைப் பால் பிடிக்கின்றது என்று சொல்வார்கள் உழவர்கள். அப்படி பால் பிடிக்கும்போது, அது நிமிர்ந்து நிற்கின்ற காட்சி, சூழ் கொண்ட பச்சைப் பாம்பின் தோற்றம் போல் உள்ளது. பின்னர் அது முதிர்கின்ற நிலையில், 'முந்திரி மேற்காணி மிகுவகேல் கீழ் தன்னை இந்திரனு எண்ணிவிடும்' என்னும் முதுமொழிக்கேற்பத் திடீரென்று செல்வம் பெற்ற கீழ்மக்கள் இறுமாந்து நிற்பது போல் நிமிர்ந்து நிற்கின்றது. கதிர்கள் நன்கு முற்றிய பிறகு தலைசாய்த்து நிற்கும் காட்சி சிறந்த நூல்களை ஆராய்ந்து கற்று அதன்படி ஒழுகும் நன்மக்கள் தலைவணங்கி நிற்பதைப் போலத் தலை சாய்ந்து நிற்கின்றது.

" சொல்அரும் சூல் பசும்பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறீஇத் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே "

என்று படம் பிடித்துக் காட்டுகின்ருர் சீவகசிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்க தேவர்.

இனித் தெய்வச் சேக்கிழார் பெருமானுக்கு இந்த நெற்பயிர் எத்தகைய உணர்வினை எழுப்பின என்று நோக்குவோம். பெருமான், அடியார் பெருமையினையும், அவர்தம் இயல்பு களையும், தொண்டு நெறியினையும் கூறவந்தவர் அல்லரோ? ஆதலால் இந்த நெற்பயிரும், 'கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின்'ராகிய சிவனடியார்களைப் போலவே காட்சி தருகின்றன. பக்தியின் பாலராகிப் பரமனுக்குக் காளாம் அன்பர் ஒருவரை யொருவர் சந்தித்தால் எவ்வாறு தலைதாழ்த்தி வணங்கித் தம் ஆன்ம நேயத்தைப் புலப்படுத்து வார்களோ, அதைப்போல நன்ருகக் கதிர் முற்றிய நெற்பயிர் ஒன்றுக்கொன்று தலைதாழ்த்தி வணங்கி நிற்கின்றன என்று,

"பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிற் கூடி ஞர்கள் தலையினுல் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்"

என்று தம் திருத் தொண்டர் புராணத்துள் பாடுகின்ருர்.

இனிச் சேக்கிழார் பெருமானை அடியொற்றித் தம் இலக்கியத்தைப் படைத்த சிவஞான முனிவர், சிறந்த நெற்பயிர்க் காட்சியைக் கண்டு மக்களுக்கு அறிவுறுத்துகின்ற உண்மையை நோக்குவோம்.

நெற்பயிர் கதிர் முற்றாத காலத்தில் தலை நிமிர்ந்து நின்று, நன்கு முற்றிய பிறகு தலை தாழ்த்தி நிற்கின்ற காட்சி, நல்ல குடியில் பிறந்தவர்கள் செல்வம் குறைந்த வறுமைக் காலத்தே அவ்வறுமை புலப்படாதவாறு தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்றும், செல்வம் மிகுந்த வளமைக் காலத்தில் செல்வச் செருக்குத் தோன்றாதவாறு, தலைவணங்கி நடக்கவேண்டும் என்றும், பொய்யில் புலவராகிய திருவள்ளுவர்,

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு" (திருக்குறள் 963)

என்று கூறியதின் உண்மைப் பொருளை உணர்த்துகின்றதாகக் கூறியுள்ளார்.

"உருத்திட்ப முறாக்காலைத் தலைநிறீஇ யுற்றதன்பின்
தருக்கற்று நனிவணங்கிப் பழுத்தகதிர்த் தடஞ்சாலி
பெருக்கத்து வேண்டுமாற் பெரும்பணிவு மிகச்சிறிய
சுருக்கத்து வேண்டுமுயர்வு எனுமொழியின் சுவைதேற்றும்"

-காஞ்சிப் புராணம்

இவ்வாறாகத் தத்துவ ஞானிகளாக விளங்கும் நம் தமிழ்ப் புலவர்கள், எளிய பொருள்களிலும் அரிய உண்மைகளைக் கண்டு கூறுந் திறம் எண்ணி எண்ணி வியத்தற்பாலதாகும்.



## கலைச் சங்க வெள்ளிவிழா பற்றி கல்கி

சரஸ்வதி சங்கத்தின் சிறப்புக்களைப் பற்றியும், வெள்ளிவிழாவின் வைபவங்களைப் பற்றியும் எழுதுவதென்றால் ஒரு பெரிய கட்டுரை எழுத வேண்டும். சரஸ்வதி சங்கம் நீடூழி வாழ்ந்து பொன் விழாவும், வைர விழாவும் கொண்டாடட்டும் என வாழ்த்துகிறேன்.

-ரா. கிருஷ்ணமூர்த்தி
12—5—47

# ஆசிரியரும் மாணவரும்

சி. இராமன், உதவி ஆசிரியர், ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை.

முன்னுரை: ஆசிரியர்கள் இந்நாட்டின்எதிர்காலத்தை உருவாக்குபவர்கள், பயனுள்ள வழியில் பயனுள்ள செயல்களைச் செய்ய மாணவர்களைப் பக்குவப்படுத்தவேண்டும். மாணவர்களும் பண்புடன் கற்க வேண்டும் என்பதே நோக்கு.

ஆசிரியர் கடமை: மாணவர்களின் எதிர்காலத்தை நல்ல நிலையில் அமைப்பதற்கு நல்ல, பழக்க வழக்கங்களை உருவாக்கவேண்டும். மாணவர்களின் பயன் உணர்ந்து நல்வழிப்படுத்தி பொறுப்புள்ளவர்களாகவும் அறிந்து செயல்படத்தூண்டுதல், மாணவர்களின் மனநிலையை அலையவிடாது செம்மைப்படுத்துதல், பழக்கத்தின் பொருட்டு மனநிலையில் மாறுபாடு ஏற்படாமல், அசிரியரும்பெற்றோரின் ஒத்துழைப்புடன், நிவர்த்தி செய்தல். ஆசிரியர்கள் மாணவர்களின் மனநிலையையும், அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதால் தாய் தந்தைக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுகிறார். மாணவர்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதோடு, அவர்களைக்கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. குழந்தையாக நினைத்து குறை கண்ட விடத்தில் சுட்டிக்காட்டி திருத்தவேண்டும். தவறுகள் நேராது பார்த்துக் கொள்ள வேண்டும், மாணவர்களைப் பாதுகாப்பது ஆசிரியரின் பொறுப்பு. அறியாப் பருவத்தில் அறிவை ஊட்டி ஆன்மீகத்துறையில் மாணவர்களின் மனஎழுச்சியை நல்ல முறையில் பக்குவமாக வளரச்செய்ய வேண்டும். அறிவு, அடக்கம், அன்பு, அகிம்சை, ஆர்வம் ஆற்றல் போன்ற பலதுறைகளில் சிறந்து விளங்க மாணவர்களைத் தயார்செய்ய வேண்டும். ஆசிரியரின் பொறுமையே, அவருடைய பணியின் பெருமைக்கு எடுத்துக் காட்டு.

பெருந்தன்மை இல்லாதவரிடத்தில் பணமிருப்பதும், அறிவுணர்தல் இல்லாரிடத்தில் படிப்பிருப்பதும், ஏழைகள் துயரம் அறியாரிடத்தில் நிர்வாகமிருப்பதும், ஆராய்ச்சி ஒழுக்கமில்லாரிடத்தில் ஞானம் பேசுவதும், மனித நடமாட்டம் இல்லாவிடத்தில் ருசியுள்ள பழம் விளைந்து பயன்படாது போவதும் போல மாணவர்கள் நிலை மாறக் கூடாது. சமதர்ம நிர்வாகம் உயர்ந்து, அரசு விசுவாச மரியாதையிலும் உயர்ந்து, பசிப்பிணி ஒழித்து, பணத்துக்கு உள்ள மரியாதையையும் ஒழித்து, எந்நாட்டில் விளைந்த விளைவானாலும், அது எல்லா நாட்டிற்கும் பொதுவாய் நிர்வகிக்கும் நிர்வாகமுள்ள உலக சமாதானத்தை வளர்க்கும் பக்குவத்தை மாணவர்களிடம் உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பு.

மாணவர்கடமை: தக்க வயது வந்தவுடன் மாணவர்கள் தரமுடன் கற்கவேண்டும். ஆசிரியர் கூறும் வார்த்தைகளை மாணவர்கள்- அன்புடன் கேட்கவேண்டும். அவர்கள் அள்ளித்தரும் கல்விச் செல்வங்கள் அனைத்தையும் ஏற்க வேண்டும். ஆசிரியர் காப்பிற்கு இணங்கி மாணவர்கள் அன்புடன் நடக்கவேண்டும். ஆசிரியர்கள் மீது மாணவர்கள் கோபம் கொள்ளக் கூடாது. மாணவர்கள் தேனீயின் நிலை உணர்ந்து செயல்படுதல் வேண்டும். வாயாலும் கையாலும், பிறர் கொடுக்கும் செல்வத்திற்கு அளவும், நேரமும் உண்டு. ஆனால் ஆசிரியர் அள்ளித் தரும் செல்வமே, சகலமும் பெருந்திய மிக உயர்ந்த செல்வமாகும் என்பதை உணர்ந்து எப்பொழும் உண்மைக்கு மாறாய் நடக்கக்கூடாது. மாணவர்களின் நல்லொழுக்கம், நற்பண்பு. இவற்றால் ஆசிரியரின் உயர்வும், மேலான சிறப்பும் தெளிவாகும்.

அன்பு, அறிவு மாணவர்களின் வளர்ச்சிக்கு ஆதரவாகும். காட்டில் வசித்தாலும், களை எடுத்தாலும் கருத்துடையவனாக இருப்பது அவசியம். அறிவுக்குத் துணை அன்பும் பயிற்சியும். எனவே மாணவர்கள் ஆசிரியர்கள் கூறுவதைக் கேட்டு சிறப்புடன் கற்க வேண்டும்.

மாணவர்கள், ஆசிரியர்களிடம் பாகுபாடு தோன்ற செயல்படக் கூடாது. ஆசிரியரைத் தாழ்வாக மதிப்பிடுவதும் தவறு, அறியாமை அகல ஆழ்ந்து படி. ஆசிரியருக்கு அடிபணிந்து நட. அறிவைப் பெருக்க அளவிலா நூலைத் தேடு என்பது போல மாணவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். நாடு நலம்பெற நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், பலகலை பயின்றவர்களாகவும் திகழ வேண்டும்.

நண்பனை வைத்து நல்லவனை எடை போடலாம். அதுபோல ஒருவனுடைய திறமையை வைத்து கல்வி வளர்ச்சியை எடைபோட முடியும். எனவே மாணவர்கள் நன் முறையில் பயின்று நல்லதோர் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே மாணவர் கடமை.

முடிவுரை : உயிருக்குத் தாய், தந்தை, அறிவுக்கு அனுபவம் உள்ள ஆசிரியர், எனவே பெற்றவர், வளர்த்தவர்களைவிட அறிவை அறிவித்தவரே தாய் எனப் பாராட்டப்படுகிறார். குற்றமற்ற குணமும், குறைசொல்லா நெஞ்சமும் குருவையடைந்தவர்க்கே என்பதுபோல மாணவர்கள் ஆசிரியரிடம் அன்புடன் பழக வேண்டும். எனவே, ஆசிரியர் மாணவர் இணைப்பு குன்றின் மேலிட்ட விளக்கெனத் திகழவேண்டும்.



## கலைமகளின் அருட்கோயில்...

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்க அங்கத்தினர்-கலைத் தெய்வத்தின் ஊழியர்கள். அவர்கள் நடத்திவரும் ஸ்ரீசரஸ்வதி வித்தியாசாலை கலைமகளின் அருட்கோயில்களுள் ஒன்று.

அ. சீனிவாச ராகவன்
7—5—41

எனது அபிப்பிராயமும் அப்படியே.

ஆ. முத்துசிவன்
8—5—41

# பிறவிப் பெரும் பயன்

பேராசிரியர் சு. திருநாவுக்கரசு, எம். ஏ.,
சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

"இறந்திட்டுப் பெறவேகதி யாயினும்
இருந்திட்டுப் பெறவேமதி யாயினும்
இரண்டிற் றக்கதோருதியம் நீதர இசைவாயே"
—திருப்புகழ்

தோற்றுவாய்: உலகின்கண் தோன்றும் பொருள்களனைத்தும், இயற்கை வரைந்து வழங்கும் ஓவியங்களாகவே விளங்குகின்றன. அப்பொருள்களை உயிருள்ளவவை, உயிரற்றவை, என்றும், மன உணர்வு படைத்தவை, மன உணர்வு இல்லாதவை என்றும், இயங்குதிணைப் பொருள் நிலைத்திணைப் பொருள் என்றும் பல்வேறுவகைகளில் சான்றோர்கள் பகுத்துரைத்துள்ளனர். இயல்பாய் உள்ள பொருளை 'இயற்கை' என்ற சொல்லால் வழங்குகின்றனர். எவ்விதத் திரிபும் இல்லாமல், என்றும் அழியாது நின்று நிலவும் இயற்கைப் பொருளையே 'இறைவன்' என்றனர் ஆன்றோர். இயற்கையழகில் ஈடுபட்ட நக்கீரனார் திருமுருகாற்றுப்படையில் 'கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு' எனப் போற்றியுள்ளார்.

இறைமைத் தன்மை நிறைந்து விளங்கும் எல்லாப் பொருள்களிலும் மனிதப் பிறவி உயர்ந்ததும் சிறந்ததும் ஆகும். ஏனைய உயிர்ப் பிறவிகளில் உடல் வளர்ச்சி ஒன்றே போற்றும் பொது அறிவே மிக்கு விளங்குகின்றன. ஆனால் மனிதப் பிறவியில் இப்பொழுது அறிவு மட்டுமல்லாமல், மன வளர்ச்சிக்குரிய சிறப்பறிவே செறிந்து திகழ்கின்றது. இச்சிறப்பு நோக்கியே, ஔவைப் பெருமாட்டியார் 'அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது' என்று இம்மனிதப் பிறவியைப் போற்றினர். நன்மையும் தீமையும் நாடியறிந்து, அல்லவை நீக்கி நல்லவை நோக்கி, நல்வாழ்வு வாழ வழி செய்யும் சிறப்பறிவாகிய பகுத்தறிவு பெற்ற மனிதப் பிறவியை மதிக்க வேண்டும் என்று திருநாவுக்கரசர், "வாய்த்தது, நம் தமக்கு ஈது ஓர் பிறவி மதித்திடுமின்" என்று கனிந்துருகிக் கூறுகின்றார்.

குறிக்கோள்: மனித அறிவு எவ்வளவு மேம்பட்டதாயினும், செம்பிற் களிம்பு போல இயல்பாகவே ஆணவத்தோடு சேர்ந்திருத்தலின், இறையருளைத் தானே அறியும் ஆற்றலில்லாமல், இறைவன் அறிவிக்க அறியும் நிலையிலேயே உள்ளது. இவ்வாணவம் இறைவன் திருவருளாலேயே நீங்கும். மனித அறிவு எந்தப் பொருளுடன் சார்கின்றதோ, அப்பொருளின் வண்ணமாகவே ஆகும் என்பதை வான்மறை தந்த வள்ளுவனார்,

"நிலத்தியல் பால் நீர்திரிந் தற்ருகும்மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு" (திருக்குறள் 452)

எனவே மனித அறிவு, தம்மிலும் உயர்ந்த இறையருளுடன் கூடி உடம்பு, அகப்புறக் கருவிகள் முதலியன கொண்டு, உலகப் பொருள்களைத் துய்த்து, ஆணவமென்னும் அறியாமையைப் போக்கி, பிறவாப் பெருநிலை அடைவதையே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும்.

பிறவியின் பெரும் பயன் :

மனித உயிர் இறையருளைச் சாரச்சார 'யான் எனது' என்ற அகப்புறப் பற்றுக்களை விடுத்து, "நம் செயலால் யாதொன்றும் இல்லை; எல்லாம் அவன் செயல்" என்ற நிலையை மடுத்து, இறைவனால் ஈர்க்கப்பெற்று, ஆணவம் ஒடுங்கி, அறிவு ஒளி மிகும்போது 'கயிறு அற்ற ஊஞ்சலை தரை தாங்குமாறு போல' ஆசையென்னும் பாசத் தளை அற்ற உயிர்களை தன் அருளென்னும் தரையால் தாங்கிப் பேசாப் பெருநிலை தந்து முத்தி என்னும் பேரினபத்துள் ஆழ்த்தி மகிழ்விப்பன் என்பது அருளாளர் துணிபு. இந்நிலை பெறுவதே, எடுத்த பிறவியின் முடிந்த பயனாகும். இக்கருத்துக்களை அருணகிரிநாதர் தமது கந்தர் அந்தாதியில்,

"தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே" என்று பாடுகின்றார்.

திருவடி வழிபாடு :

இறையருள் பெறுவதற்கு, வழிபட முற்படும் மனிதர்க்குப் பல்வேறு சமயங்கள். பல்வேறு வடிவங்களையும் பெயர்களையும், நெறிமுறைகளையும் காட்டுகின்றன, குறிப்பிட்ட ஓர் இடத்தையடைய, பல்வேறு வழிகள் இருப்பது போலவே, எல்லாம் வல்ல ஒரு பரம்பொருளை அடைய பலவேறு சமய நெறிகள் விளங்குவதாகக் கொள்ளல் வேண்டும். கட்டிடங்கள் கட்டுவோர், கீழுள்ள ஒரு பெரிய பொருளை மேலே கொண்டு சேர்ப்பதற்கு, சாரம் என்ற ஓர் அமைப்பைப் பயன்படுத்துதல் போல, மனிதர்கள் அருவமாகிய பரம்பொருளையடைய உருவ வழிபாட்டை மேற்கொண்டனர். நாடு, மொழி, மதம், இனம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றல் வேறுபட்டு விளங்கும் உலக மக்கள் அறிவியல் வளர்ச்சியால் மனித குலமென்னும் ஒரே குலமாக வாழ நேர்கின்ற இக்காலத்தில், எல்லோரும் மேற்கொள்ளத்தக்க 'ஒன்றே தேவன்' என்னும் பொதுமை வழிபாட்டு நெறி மிகமிகத் தேவையாகும். அந்நெறியே திருவடி வழிபாட்டு நெறியாகும். திருவடிகள் உருவமாய் இருத்தலால் உருவமும், திருவடிகளையுடையாரின் முழு வடிவமும் காணப்பெருமையால் அருவமும் கொண்டு, உருவநிலை வழிப்பாட்டு வளர்ச்சியால் அருவநிலைப் பரம்பொருளையடைய இவ்வழிபாடு உதவுகிறது. மேலும் எச்சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக

விளங்கும் இத்திருவடி வழிபாடே மேன்மையானதும் பயன் சிறந்ததும் ஆகும். திருவடி வழிபாட்டின் மூலம் இறையருள் பெறவேண்டிய முறைகளைக் கீழ்க் குறிப்பிடப்பெறுகின்ற சான்றோர்கள், தத்தம் படைப்புக்கள் வழியாகத் தெளிய உரைத்துள்ளனர்.

திருவள்ளுவர் :

பிறவிப் பெருங்கடலைக் கடக்க, இறைவன் திருவடிகளையே புணையாகக் கொள்ள வேண்டுமென்பார் வள்ளுவனார். மேலும் பிறிதோரிடத்தில்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை - அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்பார்.

உலகப் பற்றுக்களை விடுவதற்கு, இயல்பாகவே பற்றற்றவனாக விளங்கும் இறைவனின் திருவடிகளைப் பற்றுக என்ற பொருளும், 'பற்றற்ற வழிபாடே திருவடி வழிபாடு' என்பதும் இத்திருக்குறளால் உணர முடிகிறது. மேலும் சங்க காலச் சான்றோர்கள் திருவடி வழிபாட்டினையே மேற்கொண்டனர் — மேற்கொள்ளத் தூண்டப்பெற்றனர் என்று கருதுவதை மெய்ப்பிக்கும் வகையில், திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் திருவடி வழிபாடே மிகவும் விதந்து சொல்லப் பெற்றுள்ளது.

நக்கீரர் :

பற்றுக்கோடாகக் கொள்ளும் இறைவன் திருவடி என்ன செய்ய வல்லது என்பதை நக்கீரர், திருமுருகாற்றுப்படையில் "உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்" என்கிறார். அஃதாவது: அருள் வடிவினனாகிய இறைவன், தன்னோடு உண்மை அன்பால் உறவு பூண்டொழுகும் அடியார்களின் படுதுயர்ப் போக்கித் தான் தாங்கிக்கொள்வதற்கு உறுதுணை ஆவனவும், அவர்களுடைய அறியாமையைத் தகர்த்தெறிவனவாகவும் விளங்குவன தன் வலிமை மிக்க தாள்களே' என்பது அத்தொடரின் பொருளாகும்.

திருமூலர் :

மேலும் திருவடிகளின் பெருமைகளைச் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாவதாகிய திருமந்திரம் கீழ்வருமாறு போற்றுகிறது.

"திருவடி யேசிவ மாவது தேரின்
திருவடி யேசிவ லோகம்சிந் திக்கின்
திருவடி யேசெல் கதியது செப்பின்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே".

"திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே".

**திருநாவுக்கரசர் :**

கடவுளைக் காண விழைந்த மனித குலம் எடுத்திருக்கும் கோயில்களும், வடித்திருக்கும் சிலைகளும், எழுதியிருக்கும் நூல்களும் முழுவதுமாயத் தொகுத்து நோக்கின், அவனையடைய முயன்ற மண்ணுயிரின் நன்முயற்சிகள் தெள்ளத் தெளியப் புலனாகின்றன. சைவ சமயக்குறவர் நால்வருள் ஞானசம்பந்தர் மகன்மை நெறியிலும், நாவுக்கரசர் தொண்டு நெறியிலும், சுந்தரர் தோழமை நெறியிலும் மணிவாசகர் காதன் நெறியிலும் கடவுளை அடைய வழிகாட்டினர். அன்னோர்தம் பாடல் களனைத்தும் கடவுளுணர்வை ஊட்டிக், காட்டவல்லவை. ஒருசில பாடல்களில் பாடுவோர் தங்களைத்தலைவியராகவும், இறைவனைத்தலைவனாகவும் பாடுதல் மரவு. சான்றாக. அப்பர்பெருமான் பாடல்.

"முன்னம் அவனுடை நாமம் கேட்டாள்.
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னும் அவனுடை ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவற்கே பிச்சி யானாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத் தாசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே".

மும்மலங் கலந்த உயிர்கள். ஓரறிவு உலகம் முதல் ஆறறிவு உலகம் வரை நீண்ட பயணம் செய்கின்றன. அவற்றில் ஆறாவதாகிய பகுத்தறிவு பெற்ற மனிதஉயிர்கள், ஓரளவு மலநீக்கம் உற்று, முதன் முதலாக இறைவனை நெஞ்சார நினைப்பதுவும், வாயார வாழ்த்துவதுவும் மேற்கொள்கின்றன என்பதையே முன்னம் அவனுடை நாயம் கேட்டாள் என்ற தொடர் உணர்த்துகிறது. தன்னையிழந்தால் தலைவனைக் காணலாம் என்பதுவே 'தன்னை மறந்தால் என்பதுமுதலாகத் தொடரு'ர் தொடரின் பொருளாகும். அவ்வாறாவது அறிவுலகப் பயணத்தில் இறைவன் தனது ஊர் பெயர், வடிவம் அறிந்து வழிபடும் உயிர்களை மலநீக்கம் அடையாச் செய்து எஞ்ஞான்றும் ஒளிப்பிழம்பாய் விளங்கும் இறைவன் தன்னுள் ஆட்கொள்ளுகிறான் என்பதே இப்பாடலுக்குக் கூறும் தத்துவ உரையாகும். மேலும் அப்பர் பெருமான் பாடிய திருவடித் திருத்தாண்டகமும் ஒழுங்க எண்ணத்தக்கன.

**அருணகிரிநாதர்:-**

யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களை இழந்து இறைவனை நாடுவோர்க்கு. இறைவன்தானே அவரை நாடிவந்து அருள்புரிவான் என்ற

தெளிவினையே வள்ளிச் சன்மார்க்கம் என அருணகிரிநாதர் குறிக்கின்றார். இத்தத்துவத்தைக் கீழ்வரும் கந்தர் அலங்காரப் பாடல் விளக்குகிறது.

"கின்னங் குறிச்சி அடியேன் செவி நியன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கிவிட்டது சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்று கல்யாண முயன்றவனே.

இத்திருப் பாடலுள், இறைவன் தானே சென்று வள்ளியை ஆட்கொண்ட அருள் திறத்தினைச் 'சென்று' என்ற சொல் ஆழமாக விளக்கி நிற்கிறது.

வள்ளலார்:

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த திருவள்ளுவர், திருமூலர் முதலானோர் முழக்கிய 'ஒருவனே தேவன்' என்ற பொதுமை வழிபாட்டுக் குரல், அண்மையில் வாழ்ந்த வள்ளலாரின் பாடல்களிலும் எதிரொலிக்கக் காண்கிறோம். 'ஒருவனே தேவன்' என்ற தெளிவைக் காட்டும் திருவடிப் புகழ்ச்சி என்னும் திருவருட்பாப் பகுதியை உருக்கத்துடன் பாடி, திருவடி வழிபாட்டில் ஈடுபாடு கொள்ள மனிதர்களை இனிமையாக அழைக்கிறார் வள்ளலார்.

குறிப்பிட்ட ஊருக்குப் புதுவழி படைத்துச் செல்வதென்பது கடினமும், காலச்செலவும் மிக்கதாகும். ஆனால் அவ்வூருக்குச் சென்ற முன்னோரின் பாதையில் சென்று சேர்வது எளிமையும் விரைவு முறையுமாகும். அதுபோல ஆன்றோர்கள் படைத்துத் தந்துள்ள இலக்கியங்கள் காட்டும் உயர்நெறியில் சென்று உயர்வுறுவது, தலைப்பட்ட உணர்வினர்க்கு இன்றியமையாததாகும்.

முடிப்புரை:

நாகரிகத்திலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய எத்தனையோ பேரரசுகள் இருந்த இடந்தெரியாமல் உருக்குலைந்து வீழ்ச்சியுற்றன. ஆனால் பக்தி, ஞானம், யோகம் ஆகியவைகளுக்கு இருப்பிடமாகிய இந்தியப் பெருநாடுமட்டும் அன்று தொட்டு இன்றுவரை வீழ்ச்சியின்றி மாட்சிமிக்குத் தலைநிமிர்ந்து நிற்கக்காரணம் இந்நாட்டில் வாழ்ந்த அருளாளர்களும், அவர்கள் தந்துள்ள ஆன்மிகச் செல்வங்களுமேயாகும். எனவேதான் இந்நாளில் நூற்றாண்டுவிழாக் காணும் அமரகவி பாரதியார், இந்திய நாட்டினைப் "பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு" என்று போற்றுகிறார்.

இதுகாறும் மேற்கண்ட சான்றோர்கள் காட்டும் வழிபாட்டு முறைகளைத் தெளிந்து, மனமெனும் தோணி பற்றி, மதியெனும் கோலையூன்றிச் சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும்போது, மதன் எனும் பாறை தாக்கி மறிவதற்கு முன், விறகில் தீயினாகவும், பாலில் நெய்யினாகவும், ஒன்றனுள் ஒன்றாக உள்ளுறைந்து விளங்கும் இறைவனை வழிபாட்டினால் உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடிப்பரவி, 'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று சொல்லுமாறு இறையருளில் திளைத்துப் பிறவிப் பெரும் பயன் பெறுவோமாக.

"காட்டிற் குறத்திப் பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுதல் மிக எளிதே".

—கந்தர் அலங்காரம்.

## சொல்லால் புகழும் சொ. முருகப்பா

உபாத்தியாயர்களுடைய உழைப்பினை மாணவர்களின் நடிப்புகள் மூலம் அறிய முடிந்தது. நிர்வாகத்தினர் ஊக்கம் மிகுந்த மகிழ்வு தருகிறது. ஆண்டுவிழா மூலம் பிள்ளைகளின் உள்ளத்தில் படிப்பும் நடிப்பும் சார்ந்திருப்பதை அறிந்தேன்.

சொ. முருகப்பா,
ஆசிரியர், 'குமரன்'
பார்த்திப, சித், 14

★

## ஏற்றம் பெற்றிலங்கும் பள்ளி
## எழிலார் பள்ளி பற்றி ஏ. சி. செட்டியார்

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை நல்ல முறையில் அமைக்கப்பெற்று நடந்துவருகிறது. இவ்வித்தியாசாலையில் ஜாதி மத பேதமின்றி மக்களெல்லாம் கல்வி பயில்தல் போற்றுதற்குரித்து. பாடங்களோடு இசைப் பாடல்களும் நடிப்பும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. எல்லா மாணவரும் ஊக்கத்தோடு படித்து வருதலைக் கண்டு மகிழ்ந்தேன்.

A. சிதம்பரநாதன் செட்டியார்,
11—5—40

# "சரசுவதி சங்கம் வாழ்க"

புலவர் தெ. முருகசாமி, எம். ஏ., பி. ஓ. எல்.,
முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி-1.

★

திருமகள் நிலைத்து வாழும்
திகழ்செட்டி நாட்டில் கலையாம்
ஒருமகள் தனக்கு நல்ல
உத்தம சங்கம் கண்டு
தரும்அருள் என்றே நாளும்
தமதாகப் போற்றி வாழும்
பெரும்புக ழாளர் மிக்க
புதுவயல் நகரம் வாழ்க!

சரசுவதி சங்கம் என்ற
சால்பான மேகம் சூழ்ந்து
முரசென முழங்கிக் கல்வி
இடியேறு என்றும் கேட்கப்
புதுவயல் என்ற பெயரைப்
புதுக்கிய நகரத் தார்கள்
மதுமலர்ச் சோலை போல
மலர்ச்சியாய் என்றும் வாழ்க!

எத்திக்கும் புகழு மாறு
இருக்கின்ற இந்த ஊரின்
முத்தப்பன் போன்ற நல்ல
முன்னோடி இளைஞ ரெல்லாம்
சத்துடன் காக்கும் இந்தச்
சரசுவதி சங்கந் தானும்
கொத்தான இன்பப் பொருளாய்க்
குவலயத் தென்றும் வாழ்க!

பொன்விழாக் காணும் இந்தப்
புதுவயல் சங்கம் மேலும்
பல்விழாக் கண்டு கண்டு
பல்லாண்டு வாழ்வும் கொண்டு
பொன்னொளி கல்வி தன்னைப்
புதுமையாய் நாளும் செய்து
தன்னொளி பரப்பி வாழி!
தருநகரத் தார்கள் வாழி!

என்வாழ்வு ஓங்கச் செய்த
எழில்தாயாம் சரசு வதியின்
தன்பெயர் கொண்டி லங்கும்
தமிழ்ச்சங்கக் கல்விக் கூடம்
மின்னொளி மேனி கொண்ட
மீனாட்சி அருளோ டென்றும்
பொன்னொளி சொக்கர் வாழும்
மதுரைபோல் வாழ்க! நன்றே!



## முத்தமிழ் பேணும் பள்ளி பற்றி
## மூதறிஞர் மு. வ.

கலைமகள் பெயர் தாங்கி நடைபெறும் இக் கல்விக் கழகத்தினைக் கண்டு, மாணவர் ஆடல் பாடல்களை அறிந்து, இன்புறும் பேறுபெற்றேன். இவ்வூர்ச் செல்வர் கல்வியை எத்துணை விழுமிய தொரு செல்வமாகப் போற்றி வருகின்றனர் என்பதை உணர்ந்து உவகை கொண்டேன்.

மு. வரதராசன்
11—5—40

# "உத்தமன் ஆகுக"

புலவர் வ. ஞானப்பிரகாசம், பி. லிட்.,
முருகேச நகர், கடலூர்-4.

கிரேக்க நாட்டிலே 2000 ஆண்டுகட்கு முன் டையோஜினிஸ் என்பவர் பட்டப்பகலிலே வெட்டவெளியிலே, கையில் தீப்பந்தத்தை வைத்துக்கொண்டு மனிதனைத் தேடினாராம். வள்ளற்பெருமான் காலத்தில் திருவொற்றியூர்த் தேரடித் தெருவில் ஒரு வீட்டுத் திண்ணையில் இருந்த ஒரு நிர்வாணத் துறவியார், தெருவில் போவோர் வருவோரையெல்லாம் ஒருவர் ஒருவராகச் சுட்டி 'மாடு போகிறது; கழுதை போகிறது; நாய் போகிறது; நரி போகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பாராம். அப்படியென்றால் இவ்வுலகில் வாழ்ந்தவர்கள் எல்லாம் மனிதர்கள் அல்லரா.

வடிவால் மனிதராகத் தோற்றமளிப்பவர் எல்லோரும் மனிதர் அல்லர். மனிதப் பண்பால் வாழ்பவர்களே மனிதர்கள்.

"உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" (குறள் 993)

என வள்ளுவர் பெருந்தகை மனித இலக்கணத்தை வரையறுத்தருளினர். எனவே உருவால் மனித வளர்ச்சியடைந்து பண்பால் மனித வளர்ச்சியடையாத பலரே இவ்வுலகில் வாழ்கின்றனர்.

"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும்
மனிதராய் வருவதுண்டு;
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார் முன்னோர்"

[சித்தர் ஞானக் கோவை - சிவானந்த போதம்] என்பது சித்தரின் வாக்கு.

வாலி தகாத நெறி நடந்ததால் நடையில் நின்றுயர் நாயகனாம் இராமபிரான், வாலியைக் கொல்வான் அம்பு தொடுத்தான். வாலியோ, தான் விலங்கு என்றும், எனவே தன்னிடம் உயர்ந்த நெறியை எதிர்பார்த்தல் ஏற்புடைத்தன்று என்றும், எதிர் வாதிடுகின்றான். அப்போது இராமபிரான்,

"நன்று தீது என்று இயல்தெரி நல்லறிவு
இன்றி வாழ்வது அன்றோ, விலங்கின் இயல்
நின்ற நல் நெறி நீ அறியா நெறி
ஒன்று இன்மை உன் வாய்மை உணர்த்துமால்"

"தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி
புக்கதேல், அவ்விலங்கும் புத்தேளிரே"

[கம்பர் - வாலி வதைப் படலம் 119, 120]

என விளக்கம் தரும் வாயிலாக மனித இலக்கணத்தையும் விளக்கிவிடுகின்றான். எனவே பண்பின் அடிப்படையிலேயே நாம் மனிதனைக் காணவேண்டும் என்பதை இதனாலும் அறிகிறோம்.

போவார் வருவோரையெல்லாம் 'கானமே உழல் விலங்கினும் கடையராக'க் கண்ட திருவொற்றியூர் நிர்வாணத் துறவியார் ஒரு நாள் அவ்வழி வந்த வள்ளற்பெருமானைக் கண்டதும், "இதோ ஒரு உத்தம மனிதன் போகிறான்" என்று கூறியவாறே தமது கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழீஇ ஒரு மனிதனின் முன் தன் நிர்வாண நிலைக்கு நாணம் கொண்டாராம். பண்பாலன்றி வடிவால் மட்டுமே மனிதராய் வாழ்ந்த இச்சமுதாயத்தில் வள்ளற்பெருமானோ ஒரு மனிதனாக, அதுவும் ஓர் உத்தம மனிதனாக வாழ்ந்திருக்கின்றார்.

உத்தம மனிதனின் உயர்நிலையை வியாக்கியானச் சக்கரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை அவர்களின் உரை விளக்கத்தின் மூலம் நாம் உணர்ந்துகொள்கின்றோம்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி"

என்ற திருப்பாவைப் பாசுரத்திற்கு உரை வகுக்க வந்தபோது அவர்கள்

"பிறரை இம்சித்துத் தன் வயிற்றை வளர்க்க
வேணு மென்றிருக்குமவன் அதமன்;
பிறரும் ஜீவிக்க வேணும், நாமும் ஜீவிக்க
வேணும் என்றிருக்க மவன்-மத்தியமன்
தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க
வேணும் என்னுமவன் உத்தமன்"

என்று விளக்கம் தருகின்றார்கள்.

அருட் பெருஞ் சோதியாம் ஆண்டவனின் தனிப்பெருங் கருணைத் திறத்தால் பேரானந்தப் பெருவாழ்வைத் தான் மட்டும் அடையாமல் உலகுயிர்க்குலம் அனைத்தும் பெறவேண்டும் என வாழ்ந்ததால்தான் வள்ளற் பெருமான் உத்தம மனிதராகத் துறவியார் முன் தோற்றமளித்திருக்கின்றார். வள்ளற் பெருமான் உத்தம மனிதராய் வாழ்வதற்கு, உத்தமர் களின் உறவையே என்றும் விழைந்து முருகனிடம் வேண்டுகின்றார்.

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்"

[தெய்வமணி மாலை-8]

என்பது அவர் வேண்டுகோள். இறைவன் திருவடியை நினைத்து வழிபடுவோர் அதற்குமுன் உயிர்க்கூட்டத்திற்குத் தொண்டு செய்வதாலேயே உத்தமர்களாகின்றார்கள்.

"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செய்வும்
அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்"

[பிள்ளைச் சிறு விண்ணப்பம்-18]

என்ற திருவருட்பாவோடு தொடர்புபடுத்திப் பார்க்கின்றபோது இதனை நன்கு விளங்கிக் கொள்ளலாம். மேலும் பெருமான் தன் உரைநடையில் சுப்ரமண்யம் என்பதற்கு விளக்கம் தரும்பொழுது, "இவ்வண்ணமாய், அனாதி தொட்டு இன்று வரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார், குமரகுருபரர், நக்கீரர் முதலிய மகான்கள் தொண்டு செய்து உத்தம ஞானிகளாய் நித்திய முக்தர்களாய் விளங்குகின்றார்கள்" என எழுதுவதிலிருந்தும் பெரிய ஞானிகளும் தொண்டு செய்தே உத்தம ஞானிகளாக விளங்குகின்றார்கள் என்பதை உணர்கிறோம்.

வள்ளற் பெருமான் திருவருட்பாவின் திருமுடியாக விளங்கும் அருட்பெருஞ் சோதி அகவலை முடிக்கின்றபோது அருட்பெருஞ் சோதி ஆண்டவன் தனக்குத் தந்த உபதேசத்தை, கட்டளையை மீண்டும் அவனிடத்தில் சொல்லும் முகமாக சொல்லி அகவலை முடிக்கின்றார்.

"உலகினில் உயிர்களுக்கு உறும்இடை யூறெலாம்
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க
சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் சோதி"

[அருட்பெருஞ் சோதி அகவல்-1588-94]

"உலக உயிர்களின் துன்பத்தையெல்லாம் நீயே வலிய சென்று போக்க வேண்டும். அவை துன்பம் நீங்கி இன்பம் துய்ப்பதைக் கண்டு நீ மகிழவேண்டும். அதுவே சுத்த சன்மார்க்கச் சுகநிலை. அங்ஙனம் தொண்டு செய்வதால் உத்தமன் ஆவாயாக. வாழ்வில் ஓங்குவாயாக" என்று இறைவன் கட்டளையிட்டாராம்.

அவ்வுபதேசத்தைப் பெற்று வையந் துயர்தீர, உத்தமராக வாழ்ந்தவர் வள்ளற் பெருமான். அவரடிப் பற்றும் நாமும் உயிர்க் கூட்டத்தின் துன்பம் தொலைத்து இன்பம் தந்து உத்தமராக வாழவேண்டும் என்பதற்காகவே அகவலின் முடிவில் நமக்கும் அவர் சொல்லிக் காட்டுகின்றார்.

எனவே உத்தமரோடு உறவாடி உத்தமராக வாழ்ந்த வள்ளற் பெருமானின் தொண்டர்களாகிய நாமும் உத்தமர்களாக முயல்வோமாக.

★

## சீரார் பள்ளி பற்றி சுவாமி சித்பவானந்தா

ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை சிறுவர்களையும், சிறுமிகளையும் நல்வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாகச் செய்து வருகிறது. உடல் உறுதியும் தொழில் வன்மையும், மனத் தெளிவும் ஈண்டு அவர்களுக்கு ஒருங்கே வழங்கப்பெறுகின்றன.

சித்பவானந்தா
6—5—42

# தூண்டு சுடர்

வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்

செட்டி மார்தம் நாட்டினிலே
    சிறக்கும் நகரம் புதுவயலாம்;
மட்டில் அறங்கள் வளர்க்கின்ற
    வணிகர் வாழும் திருநகரம்;
சுட்டும் புகழ்சேர் அந்நகரில்
    தூயர் பல்லோர் நிறுவஎன்றும்
தட்டில் தமிழைச் சரசுவதி
    சங்கம் வளர்த்தல் கண்டுவந்தேன்.



ஆண்டு தோறும் விழாவெடுத்தார்;
    அரிய புலவர் தமைஅழைத்தே
ஈண்டு சொல்லின் பெருக்கியற்ற
    இணைத்தார்; ஒருபள் ளிக்கூடம்
தூண்டு சுடர்போல் கல்விதரச்
    சுடர வைத்தார்; சிறுவரெலாம்;
பூண்ட அன்பிற் கல்விகற்றுப்
    பொலிகின் றார்நல் லறிவுற்றே.

இன்ன பணிகள் பலசெய்த
    இந்தச் சங்கம் இனும்ஓங்கித்
துன்னும் நல்ல பயன்தந்து
    துறைகள் பலவும் மிகவிரிய
மன்னும் தமிழைக் கடவுள்பால்
    மனம்வைத் தமைத்த பத்தியினைப்
பின்னும் வளர வைத்தினிது
    பெருகி வாழ வாழியவே.

## "கலைமகளின் கழகத்தைக் கவிபாடி வாழ்த்தும் கவிமணி"

பொன்னும் கலையும் பொதுநலமும்
பொங்கிப் பொலியும் புதுவயலில்
அன்னை தேவி சரஸ்வதிபேர்
அமைந்த சங்கம் அழகாக
வன்னத் தோகை மயில்மீது
வருமா முருகன் திருவருளால்
மன்னும் உலகில் நீடுழி
வாழ்க வாழ்க வாழ்கவே

தாலம் புகழ் வித்யா சாலை புதுவயலில்
சாலச் சிறந்து தழைக்குமே—சீலமிகு
தக்கார் பெரியார் சரஸ்வதி சங்கத்தார்
எக்காலும் போற்ற இனிது.

கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை.

★

## "சங்கம் போற்றும் கவியோகி"

தங்கத்தனல் போலச் சக்தியுடன் பொலியும்
சங்கர ரருளாற் சந்ததமும்—மங்கலம்
பொங்கும் புதுவயலிற் போந்த சரசுவதி
சங்கம் வளர்க தழைத்து.

சுத்தானந்த பாரதியார்

## தமிழ் வளர்க்கும் சங்கம்

டாக்டர் வை. இரத்தினசபாபதி
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

திருவளரும் புதுவயலிற் சிறந்த சங்கம்
தெளிதமிழாம் அமுதமதைச் சிறக்க வைக்கும்
ஒருபெரிய சரஸ்வதிநற் சங்கம் ஆகும்
உழைப்பதனால் வாழ்ந்துமிக வளர்த்து விட்ட
பெருநெறிய தமிழ்வளர்க்கும் பெருமைச் சங்கம்
பிணையறியா வகையினிலே வளர்ந்து வாழ்ந்து
பொருவரிய பெரும்பேற்றைப் பெற்று நின்று
பொன்விழாப்போல் வைரமதும் பெற்று வாழ்க.

★★

## ஒளிவீசும் கதிர்

பேராசிரியர் இரா. செல்வக்கணபதி
தருமபுரம்.



பெருங்கடல் அலையோயும் காலம் மட்டும்
பூவில்மணம் விடைபெற்றுக் கொள்ளும் மட்டும்
செங்கரும்பில் சுவைகுன்றிப் போகும் மட்டும்
சிறந்திடுக இச்சங்கம்; கால காலம்
தங்குதடை இல்லாத தமிழைப் போல
தழைத்திடுக; நூற்றாண்டு விழாக்கள் கண்டு
எங்கெங்கும் ஒளிவீசும் கதிரா கட்டும்!
எழிற்பணிகள் பொன்னேட்டில் நின்றா டட்டும்.

★★

## இவர் பெருமை இயம்பிடல் எளிதோ

பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியம், மயிலம்.

சங்மொன் றாக்கல் சங்கடம் அதனைச்
சரித்திரம் பெறஐம்பத் திரண்டு
மங்கல ஆண்டு வளர்த்திடல் அருமை
மாப்புகழ் பெறும்திருத் தொண்டு
சங்கையில் லாமல் நாடொறும் நினைத்துச்
சலிப்பிலாச் செயல்திறத் தொண்டர்
இங்கிவர் பெருமை இயம்பிடல் எளிதோ
இவர்என ஏனையோர் வாழ்க.

# வேற்றுமை – வளர்ச்சி வரலாறு

டாக்டர் இரா. கு. நாகு, எம். ஏ., பி. எச். டி.,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்ச் சொற்றொடரில் பயின்று வரும் சொற்கள் நான்கு வகைப்படும்; அவை பெயர் வினை, இடை, உரி என்பன. காலத்திற்கேற்ற பொருள் திறத்தினை, தமிழ்ச் சொற்றொடர்கள் அந்நால்வகைச் சொற்களின் துணைகொண்டு புலப்படுத்தி வருகின்றன. பெயர் வினை இயைபு தமிழ்ச் சொற்றொடரின் உயிர் நாடியாகும். 1

சொற்றொடரில் பயின்று வரும் பெயர்ச் சொற்களின் செயற்பாட்டைக் கண்டறிந்த இலக்கணிகள், பெயர்ச்சொல் என்பது வேற்றுமை உருபு ஏற்கும் என்றும்; காலங்காட்டாது என்றும் வரையறை செய்தனர். பெயர்ச்சொல் என்பது எழுவாய் வேற்றுமையில் பயனிலை கொள்ளும் சொல் என்றனர்.

பெயர்ச்சொல் தொடர்நிலையில் பொருளால் வேறுபட்டு நிற்குந் திறத்தினையே வேற்றுமை என்கிறோம். பொருளால் வேறுபட்டுக் காட்ட, அச்சொற்கள் சொற்றொடர்களில் தம்மோடு உருபுகளை இணைத்துக் கொள்வதுமுண்டு; உருபுகள் இணையாமல் தொடர் ஆற்றலால் பொருள் வேறுபாட்டினைப் புலப்படுத்துவதுமுண்டு. உருபுகள் பெயர்ச்சொற்களின் இறுதியில் சேரும். 2 உருபுகளின் துணையின்றிப் பெயர்ச்சொற்கள் வேற்றுமைப் பொருளை உணர்த்தியது மொழியின் தொடக்கநிலையும் தாய்மை நிலையுமாகும் என்பது என் கருத்து. 3 பிறமொழிக் கலப்பும் சொற்பொருள் பெருக்கும் மலிந்த நிலையில் பொருள் தெளிவுக்காக உருபுகள் இணைந்தது அடுத்த நிலை.4 ஒரு வேற்றுமைஉருபு நின்று உணர்த்த வேண்டிய பொருளை, அதற்கான உருபின்றி வேறு ஓர் உருபு வந்து உணர்த்தும் நிலை மொழிவளர்ச்சியின் அடுத்தகட்ட நிலையாகும். 5 மொழி வரலாற்றில் உருபுகள் சாரியைகளாகிச் செயலற்றுப் போனநிலையும் மொழி வளர்ச்சி நிலையைக் காட்டுவனவாகும். 6 மனித வாழ்வில் எற்பட்ட மறுமலர்ச்சிகளே, மொழியில் மேற்குறித்த வளர்ச்சி நிலைகளுக்குக் காரணம் எனலாம்.

பெயர்ச்சொற்கள் தொடர்களில் பொருள் வேற்றுமைப்படக் காரணமாக இருக்கும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்றனர். வேற்றுமை உருபுகள் இடைச் சொற்கள்தாம். 7 அவ்வுருபுகள் எழுத்துருபுகள் என்றும் சொல்லுருபுகள் என்றும் வழங்கப்பெறும். அவ்வுருபுகளால் அமையும் வேற்றுமை எட்டென்பர். 8 தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பு வேற்றுமை ஏழென்று கூறப்பெற்றது. 9 ஆனால் தொல்காப்பியனார் காலத்தில் வேற்றுமை எட்டு என்ற கருத்து வலுப்பெற்றுவிட்டது. 10 தொல்காப்பியனருக்குப் பின்வந்த இலக்கணிகள் வேற்றுமை எட்டு என்றே எழுதினர். மொழிஇயல் அறிவு வளர வளர வேற்றுமை எட்டு என்று கூறியதில் ஆராய்ச்சி புகுந்தது. அவ்வாராய்ச்சி இன்றும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது.

வேற்றுமையை எட்டு என்று கூறிய மொழி அறிஞர்கள், உருபு அடிப்படையில் எட்டென்றனரா? பொருள் அடிப்படையில் எட்டென்றனரா?உருபு அடிப்படையில் கூறியிருக்க இயலாது. ஏனென்றால், எட்டுக்கு மேற்பட்ட உருபுகள் இருப்பது ஒரு காரணம். ஒரு வேற்றுமைப் பொருளை உணர்த்த, தொடர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உருபுகள் இடம் பெறுவது மற்றொரு காரணம். சில தொடர்

களில் உருபு வெளிப்படாமலும் வேற்றுமைப் பொருள் தோற்றுவது மேலும் ஒரு காரணமாகும். மேலும், ஒரு வேற்றுமைப் பொருளை வேறு ஒரு வேற்றுமை உருபு மயங்கி நின்றும் உணர்த்தும். இக்காரணங்களால் உருபு அடிப்படையால் எட்டென்றனர் என்று கருத இடமில்லை.

வேற்றுமை எட்டு என்பது, பொருள் நோக்கில் கூறியதாக இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. பண்டைத் தமிழர் பொருள் அடிப்படையில் சிந்திக்கும் பண்பினர் என்பது அவர்கள் படைத்தளித்த இலக்கண இலக்கியங்களால் அறியவரும்; சொல் வடிவத்திற்கு மதிப்பளிக்காமல் சொல் பொருள் நோக்கியதாக இருக்கவேண்டும் என்ற கருத்துடையவர்கள்; பிறமொழியாளர் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் செய்தவர்கள். ஆனால் தமிழர் அவற்றோடு அமையாது பொருளுக்கும் இலக்கணம் செய்தவர்கள். எழுத்தும் சொல்லும் பொருளுக்கே என்பது அவர்தம் நெறி. 11 இலக்கியப் படைப்பிலும் உரிப்பொருளுக்கே மதிப்பளித்தவர்கள். 12 தமிழரின் பண்பாடு பொருள் நோக்கியதாகையால் வெறும் சொல் வடிவான உருபு வழியில் சிந்தித்திருக்க மாட்டார்கள்; உருபால் பெறப்படும் பொருளையே சிந்தித்திருக்கக்கூடும். தொல்காப்பியனார் கூறும்,

"யாத னுருபிற் கூறிற் றுயினும்
பொருள்சொல் மருங்கின் வேற்றுமை சாரும்" 13

என்னும் நூற்பா இதனை அரண் செய்வதாகும். பொருள்வழியில் சிந்தித்து, தலைமை பற்றி எட்டென்றும், பிற பொருள்களை அவ்வெட்டெனுள் அடக்கியும் கூறியிருப்பர். மனித வாழ்வு தான் இதற்குக் காரணம். மனிதனுக்கும் உலகிற்குமுள்ள தொடர்பு எட்டு வேற்றுமைப் பொருளாகக் கருதப்பட்டதில் ஆச்சரியமில்லை. மனிதன் இவ்வுலக வாழ்வின் கதாநாயகன், கருத்தா, வினைமுதல் ஆவன். அவன் கூடிவாழும் இயல்பினன். பிறரை அழைக்க விளித்தலைக் கொண்டான். வாழ்விற்கு வேண்டியதைப் பெற முனையும்போது செயப்படுபொருள் தோற்றும், செயப்படுபொருளை அடைய கருவி தேவை. அடைந்த பொருளை உடைமை யாக்கியும் பிறர்க்குக் கொடுத்தும் வாழ்வதே வாழ்க்கை. வாழ்வதற்குரிய இடம் அமைத்தலும் வாழ்வின் நீங்கலும் அவன் அறிந்தவை. இவ்வாறு வாழ்வோடு தொடர்புடையவற்றையே எட்டு வேற்றுமை எனப் பெயரிட்டிருக்கலாம். தலைமை பற்றி, வினைமுதற் பொருள், செயப்படு பொருள், கருவிப்பொருள், கொடைப் பொருள், நீங்கற் பொருள், உடைமைப் பொருள், இடப் பொருள், விளி எனப் பொருள்நோக்கில் வேற்றுமையை எட்டு என்று வழங்கியிருக்கலாம் இம்மரபினை உணர்ந்தே தொன்னூலாரும் நன்னூலாரும் வேற்றுமை எட்டு என்றனர்

முன்னோர் மொழிந்ததனை ஒட்டியே தொல்காப்பியனாரும் பவணந்தியாரும் வேற்றுமை எட்டென்றனர். அவர்கள் காலத்திய மொழியில் வேற்றுமைப் பொருள் மிகுந்திருப்பதை உணர்ந்திருந்தனர் என்பதை அவர்கள் செய்த வேற்றுமை மயங்கியல் நூற்பாக்களே காட்டும். இன்ன பொருளை உணர்த்துவதற்கு இன்ன உருபுதான் வரவேண்டும் என்ற நியதிகூடத் தொல்காப்பியனார் காலத்தில் அழிந்து விட்டதனை நாம் காண்கிறோம். 14 எனவே மரபு நோக்கிப் பொருள் அடிப்படையில் தலைமை பற்றி வேற்றுமை எட்டு என்று கூறினர் எனலாம். தற்கால மொழியில் எட்டிறந்த வேற்றுமைகள் உண்டு என்க. தொல்காப்பியனார் வேற்றுமை சார்பாகக் கண்டறிந்தவைகளையெல்லாம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் விளிமரபு என்னும் மூன்று இயல்களில் வெளிப்படுத்தியுள்ளார். தொன்னூலார் மூன்று இயல்களில் விரித்துக் கூறியதை நன்னூலார் தம் காலநிலைக்கேற்பத் தொகுத்துப் பெயரியலுக்குள் ஒரு பகுதியாக அமைத்துக்கூறியுள்ளார். பின்னர் வந்த இலக்கணக் கொத்து ஆசிரியரோ 25 நூற்பாக்களில் வேற்றுமைப் பொருளைக் கூறியுள்ளார். வரலாற்றுப் போக்கில் வேற்றுமைமை அறிய இவ்விலக்கணிகளின் நூற்பாக்களே சான்றுதாரங்கள் ஆகும்.

## முதல் வேற்றுமை

இதனை, எழுவாய் வேற்றுமை என்றும் வினைமுதல் வேற்றுமை என்றும் கருத்தா வேற்றுமை என்றும் வழங்குவர். பெயர் தோன்றும் நிலையே எழுவாய் வேற்றுமை என்பர். 15 திரிபில் பெயரே எழுவாய் என்பாரும் உண்டு. 16 பெயர்ச் சொல்லின் ஈறு திரியாது உருபேற்றல் எழுவாய் வேற்றுமையின் இலக்கணம் என்பாரும் உண்டு. 17 சொற்றொடரில் பயனிலை தோன்ற நிற்கும் பெயரே எழுவாயாகும். தொல்காப்பியனர் அறுவகைப் பயனிலை தோன்ற நிற்கும் பெயரை எழுவாய் வேற்றுமைக்குரிய விரியாக்கி ஓதுகிறார். 18 அவர் கருத்தையே பவணந்தியாரும் ஏற்று நூற்பா செய்துள்ளார். 19 எனவே, பெயர்ச்சொற்களெல்லாம் எழுவாய் ஆகா என்றும், சொற்றொடரில் பயனிலை கொள்ளவரும் பெயர்ச்சொற்களே எழுவாய் வேற்றுமைக்குரியன என்றும் அறியலாம்,

பட்டாசு வெடித்தது – 1
பட்டாசு வெடித்தான் – 2

சொற்றொடர் 1 – இல் உள்ள 'பட்டாசு' எழுவாய். பொற்றொடர் 2 – இல் உள்ள 'பட்டாசு எழுவாய்' அல்ல. ஆனல் தற்காலப் பேச்சு வழக்கில் சொற்றொடர் 1 – இல் உள்ள 'பட்டாசு' எழுவாய் அல்லாமல் 2 – இல், உள்ள 'பட்டாசு' போல் மயங்குவதும் உண்டு. அதாவது,

' அது பட்டாசு வெடித்தது '

என்று பொருள் கொள்ளுமாறு அமைந்து விடுவதே காரணம்.

எழுவாய் வேற்றுமைக்கு உருபு உண்டா? முதல் வேற்றுமைக்குரிய பொருள் யாது? உருபேற்று வாராத ஒன்றை வேற்றுமையென்று கூறலாமா? – இவ்வாறு பல வினக்கள் முதல் வேற்றுமை பற்றிச் சிந்திக்கும்போது எழுவாது இயற்கை. உருபு வெளிப்பட்டு வாராத தெல்லாம் வேற்றுமைப் பொருள் உணர்த்தாது என்று சொல்வதற்கில்லை. உருபு தொடர்களில் வெளிப்பட்டுப் பொருள் உணர்த்தும்; வெளிப்படாதும் பொருள் உணர்த்தும். ஆகவே உருபு வெளிப்படாததால் வேற்றுமை இல்லை என்று சொல்ல முடியாது. எழுவாய் வேற்றுமை தொகைநிலைத் தொடர் எனலாம்.

கண்ணன் வந்தான்

இதில் கண்ணன் எழுவாய்; வினைமுதல் பொருளை உணர்த்துகிறது. மேலும் அத்தொடரில் வரும் கண்ணன் என்றசொல் செய்ப்படுபொருள் முதலானவற்றினின்றும் வேறுபடுத்தித்தான் கருத்தாப் பொருளாக அமைந்திருப்பதையும் காட்டுகிறது, எனவே முதல் வேற்றுமைக்குரியது கருத்தாப் பொருள். கீழ்வரும் சொற்றொடர்களைக் காண்போம்.

கண்ணன் ஆனவன் வந்தான்
இராமன் ஆனவன் பேசினன்

மேற்குறித்த தொடர்களில் 'ஆனவன்' என்ற சொல் வெளிப்பட்டுள்ளது கருத்தாப் பொருளைத் தெளிவு செய்யவே 'ஆனவன்' வருகிறது. இவ்வாறு கருத்தாப்பொருளைத் தெளிவு செய்யப் பல தொடர்களில் 'ஆனவன்' 'ஆகின்றவன்' 'ஆவான்' 'என்றவன்' 'என்பான்' முதலான சொற்கள் வெளிப்படுகின்றன. இவ்வாறு பெயரை ஒட்டி வெளிப்படும் இவற்றை எழுவாய் வேற்றுமைச் சொல்லுருபுகள் என்பர் 20 எனவே எழுவாய் வேற்றுமைக்கும் 'சொல்லுருபு' உண்டு எனலாம். தொகைநிலைத்தொடராக எழுவாய் வேற்றுமை விளங்கிய காலம் மாறி தொகாநிலையில் விரிந்து பொருள் விளக்கும் காலம் வந்து விட்டது போலும்.

## இரண்டாம் வேற்றுமை

இதனைச் செயப்படுபொருள்வேற்றுமை என்போம். வினைமுதல் தொழிற் பயன் உறுவதே செயப்படுபொருளாகும். எனவே, தெரிநிலை வினையையும் குறிப்பு வினையையும் காரணமாகக் கொண்டு செயப்படுபொருளைத் தொடர்களில் தோற்றுவிக்கலாம்

எ-டு கரிகாலன் கல்லணை கட்டினன்

இத்தொடரில்: வினைமுதல் — கரிகாலன்
தொழில் — கட்டுதல்
தொழிற்பயன் — கட்டப்படுவது (அணை)
உறுவது — அணை (செயப்படுபொருள்)

கட்டுதலின் பயனை அடைவது அணை ஆதலின், அணை செயப்படுபொருள்.

செயப்படுபொருள் தோற்றுவதற்குக் காரணமாய் அமையும் வினை வாய்பாடுகள் இருபத்து எட்டினைத் தொல்காப்பியர் குறுப்பிடுகிறார் அவைபோன்ற பிறவினைகளின் காரணமாகத் தொழிற்பயன் உறுவதும் செயப்படுபொருளாகும் என்பது அவர் கருத்து. 21 தொல்காப்பியர் காட்டும் இருபத்தெட்டு வினைகளை நோக்கும் பொழுது, பழந்தமிழில் தெளிவாகத் தெரிந்த வினைகளே அவ்விருபத்தெட்டு வாய்பாடுகளுள் அடங்கக் கூடியனவே, என்று கருத இடமளிக்கிறது. இவ்வினைகாளல் தோற்றும் செயப்படுபொருளை

பவணந்தியார்
"ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும்" 22

எனத் தொகுத்துக் காட்டுகிறார். ஆனால் சேனாவரையர் செயப்படுபொருளை மூன்று வகைக்குள் அடக்கிக் காட்டுவார். அவை. இயற்றப்படுபொருள், எய்தப்படுபொருள் வேறுபடுக்கப் படுபொருள் என்பன,

கோயில் கட்டினன் — இயற்றப்படுபொருள்
மகனைப் பெற்றான் — எய்தப்படு பொருள்
நாட்டைச் சிதைத்தால் — வேறுபடுக்கப்படுபொருள்.

இவ்விரண்டம் வேற்றுமைக்கான செயப்படுபொருளை வெளிப்படுத்த, தொடர்களில் பெயர்ச்சொற்களோடு ஒட்டும் உருபு 'ஐ' என்றனர். 23 ஆனால் தொடர்களை ஆராய்ந்து பார்த்தால், ஐ' வெளிப்பட்டு வெளிப்படாமலும் செயப்படுபொருள் தருவது ஒருநிலை; 'ஐ' தவிர்த்த பிற வேற்றுமை உருபுகளான ஒடு, ஆல், கு, இன், அது, கண், முதலிய உருபுகள் வெளிப்பட்டும் செயப்படுபொருளைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு வருவதனை வேற்றுமை மயங்கியல் என்பர்.

சொற்றொடர்களை ஆராய்ந்ததில் செயப்படுபொருள் எல்லா வேற்றுமை உருபுகளாலும் வெளிப்படுத்தப்படும் என்னும் உண்மையை அறியலாம்:

எ—டு

1. திருக்குறள் கற்றான் — ('ஐ' மறைந்து)
செய்யுளைப் படித்தான் — (ஐ வெளிப்பட்டு)
2. சாத்தனொடுவெகுண்டான் (சாத்தனை வெகுண்டான்)
வானல் நோக்கிவாழும் (வானைநோக்கி வாழும்)
பழிக்குஅஞ்சும் (பழியை அஞ்சும்):
நோயின் நீங்கினன் (நோயை நீங்கினன்);
பாட்டது பாடினன் (பாட்டைப் பாடினன்)
அரசர்கண் சார்ந்தான் (அரசரைச் சார்ந்தான்)

சில தொடர்களில் 'ஐ'உருபு 'அ' கர 'எ' கரமாகத் திரிந்தும் இரண்டன் பொருளை உணர்ந்தும்.

எ—டு: காவலோனக் களிறஞ்சும்மே . . . (ஐ அ)
நான் உன்ன நினைத்தேன் . . . (ஐ அ-பேச்சுத்தமிழ்)
அவனெப் பார்த்தேன் . . . (ஐ எ. ,, ,,

தமிழ்த் தொடர்களில் பலவிடங்களில் இரண்டன் வேற்றுமைப் பொருள் தொகை நிலையிலேயே உணர்த்தப்போகின்றது. பொருள் மயக்கம் தவிர்ப்பதற்காகச் சிலவிடங்களில் உருபு வெளிப்பட்டு நிற்கும். உயர்திணையாயின் உருபு வெளிப்பட்டு நிற்கும்.

எ—டு: கண்ணனை அடித்தான்.

உயர்திணையில உருபு வெளிப்படாது போனல் செயப்படுபொருள் கிடைக்காது. சொற்றொடர்களை ஆராய்ந்தால் எழுவாய்த் தொடர்களைப் போல் இரண்டாம் வேற்றுமைப்பொருள் உணர்த்தும் தொடர்களும் பெரிதும் தொகைநிலைத் தொடர்களே என்பது தெரியவருகின்றது,

## மூன்றும் வேற்றுமை

இதனைக் கருவி வேற்றுமை என்பர். ஆனல் இவ்வேற்றுமைப் பொருளாகத் தொல்காப்பியனுர் குறிப்பிடுவன வினைமுதலும் கருவியுமாகும். இந்த வேற்றுமையும் வினை முதல் பொருளைத் தருகிறது. ஏற்கனவே குறித்த எழுவாயும் வினைமுதல் பொருளைத் தருகிறது. இவ்விரண்டிற்கும் சில வேறுபாடுகள் உண்டு.

1 முதல் வேற்றுமைக் கருத்தா செய்வினைப் பயனிலை கொண்டு முடியும்.
எ—டு: இளங்கோ சிலம்பை யாத்தார்.

2 மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்பாட்டு விணவிப் பயனிலை கொண்டு முடியும்
எ—டு: இளங்கோவாவால் சிலம்பு யாக்கப்பெற்றது.

3 கருத்தா முதல் வேற்றுமையாய் இருக்கும்போது செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையாய் வரும்.

4 கருத்தா மூன்றும் வேற்றுமையாய் இருக்கும்போது செயப்படுபொருள் முதல் வேற்றுமையாய் வரும்.

இவ்வேற்றுமையின் பொருளாகக் கருவிகர்த்தா என்றுர் தொல்காப்பியனுர். ஆனல் பவணந்தியார் உடனிகழ்வுப் பொருளையும் சேர்த்துள்ளார். தொல்காப்பியனுர் கூறுத ஒன்றை பவணந்தியார் புதிதாகக் கூறியுள்ளாரா? தொல்காப்பியனுர் கருவிப் பொருளுக்கும் உடனிகழ்வுப் பொருளுக்குமுள்ள நெருக்கத்தினை உணர்ந்தே தனியாகக் குறிப்பிடவில்லை. கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் இதை உணர்த்தும்:

வாளால் சண்டை செய்தான் — (கருவி)
வாளொடு சண்டை செய்தான் — (உடனிகழ்வு)
மனத்தால் வாய்மை மொழியின் — (கருவி)
மனத்தொடு வாய்மை மொழியின் — (உடனிகழ்வு)

இவ்வெடுத்துக்காட்டுகளால் கருவியும் உடனிகழ்வும் நெருங்கிய உறவுடையன என அறிகிறோம். கருவிப் பொருளையும் உடனிகழ்ச்சிப் பொருளையும் 'ஒடு' என்னும் உருபே அன்று உணர்த்தியது. 'வாளொடு சண்டை செய்தான்' என்றாலும் வாளால் சண்டை செய்தான் என்றாலும் ஒன்றுதான். ஆனால் தற்காலத்தில் கருவிப் பொருளையும் கருத்தாப் பொருளையும் பெரும்பாலும் பெரும்பாலும் 'ஆன்' உருபே வெளிப்படுத்துகிறது. 'ஒடு' உருபு உடனிகழ்ச்சிப் பொருள் அளவில் நின்றுவிட்டது. பேச்சுத் தமிழிலும் தற்கால மொழியிலும் 'உடன்' என்ற சொல்லுருபு புகுந்த 'ஒடு'வுக்குரிய இடத்தைப் பிடித்துக்கொண்டது. 'ஒடு' செல்வாக்கு இழந்து நிற்கிறது. பழந்தமிழில் ஒருவினை கொண்டு முடியும் இரு சொற்கள் தொடரும்பொழுது 'ஒடு' உருபு உயர்பொருளை உணர்த்தும் பெயர்ச்சொல்லிடத்தேதான் வரும். 24 ஆனால் தற்காலத்தில் இந்த நெறியும் போற்றப்படவில்லை. எல்லோரும் சமம் என்று எண்ணுகிற காலத்தில் அது போற்றப்படாமல் போனதில் வியப்பில்லை அல்லவா?

எ—டு: ஆசிரியனொடு மாணக்கர் வந்தார்—பழந்தமிழ்
மாணக்கனொடு ஆசிரியர் வந்தார்—புதுத்தமிழ்.

உடனிகழ்வுப் பொருளைத் தனியாக ஒரு வேற்றுமையாக்கலாம் எனக் கருதுபவர்களும் உண்டு. திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்த கால்டுவெல் அவர்கள், உடனிகழ்வுப் பொருள் தமிழில் இன்றியமையாச் சிறப்பு வாய்ந்தது என்கிறார். திராவிட மொழிகளில் தனி ஒரு வேற்றுமையாகக் கொள்ளத்தக்க சிறப்பு உடனிகழ்வுப் பொருளுக்கு உண்டென்றும் ஆனால் கருவிப்பொருள் உணர்த்தும் மூன்றும் வேற்றுமையோடு ஒருங்கு வைத்து எண்ணி விட்டனர் என்றும் தன் வருத்தத்தைப் புலப்படுத்துகிறார். சமஸ்கிருதம் உடனிகழ்வுப் பொருளை அறியாத மொழி என்றும் அதனை அடியொற்றி வேற்றுமை இலக்கணம் வகுத்ததால் திராவிட மொழியாளர்கள் கருவி பொருளோடு சேர்த்து விட்டனர் என்பது அவர் முடிவு. 25 உடனிகழ்வுப் பொருள் கருவியோடு இயைபுடையதாக நம்மவர் கண்டுதான் தனிவேற்றுமையாகக் குறிப்பிடவில்லை. பொருள்களுக்கெல்லாம் வேற்றுமை வகுக்கும் போக்கு இன்றைய நிலை. இன்றைய கண்கொண்டு அதனை நோக்கல் பிழையாகும். தற்போதுள்ள மொழிப் போக்குக்கு இலக்கணம் வகுக்கும் போது உடனிகழ்வுப் பொருளைத் தனிமைப் படுத்திக் காட்டலாம் என்பதே என் கருத்து. தமிழில் உள்ள 'ஒடு' கருவியையும் உடனிகழ்வையும் குறிப்பது போல் ஆங்கிலத்தில் 'With' என்ற சொல்லும் குறிக்கிறது என்பதை நோக்குக.

எட்டு: Sita went WITH Rama - (ஒடு)
Rama cut it WITH his sword - (ஆல்)

மூன்றும் வேற்றுமைப் பொருள்கள் தொடர்களில் அமைந்து வரும் அழகினை ஒரு நூற்பாவில் ஆராய்ந்து விளக்கியுள்ளார். அது வருமாறு:-

அதனி னியறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனி னாதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னா னேது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனர். 26

இவ்வேற்றுமைப் பொருளைத்தரத் துணைநிற்கும் உருபுகள் பல. தொன்னூலார் ஒடு, ஆண் இரண்டைக் குறிப்பிடுகிறார். நன்னூலார் ஆல், ஆன். ஒடு, ஓடு, என்கிறார். தமிழ்த் தொடர்களில் உடன், கொண்டு, பொருட்டு, கூட முதலான சொல்லுருபுகளும் இவ்வேற்றுமைப் பொருளைத் தருகின்றன. 'இன்' வந்து கருவிப் பொருள் உணர்த்துவதும் உண்டு. செய்யுளில் 'ஆன' வந்தும் கருவிப் பொருள் தரும்.

| | | | |
|---|---|---|---|
| எ – டு: | செல்வத்தின் பெற்ற சிறப்பு | – | (இன் – கருவி) |
| | புரைதீர் கேள்விப் புலவ ரான | – | (ஆன – கருவி) |

**நான்காம் வேற்றுமை:**

இதனைக் கொடைப் பொருள் வேற்றுமை என்பர். சொற்றொடர்களில் ஆராய்ந்தால் இவ்வேற்றுமைக்குரிய 'கு' உருபு நின்று பிற வேற்றுமைப் பொருளைத் தாராளமாக வழங்குகின்றது. இந்த உண்மையைக் கண்டறிந்த தொல்காப்பியனார்.

"கு எனப்பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயிலுங் கொள்ளும் அதுவே"

என்றார்; 27 வேற்றுமை மயங்கியலில் நான்கனுருபால் தோன்றும் பிற வேற்றுமைப் பொருட்களைத் தெளிவாக விளக்கியுள்ளார், 28 நான்கனருபால் பெரும் பிற வேற்றுமைப் பொருள்கள் வருமாறு :

1. மயிலைக்குத் தெற்கு மதுரை – ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருள்.
2. செங்குட்டுவதுக்குத் தம்பி இளங்கோ – ஆறும் வேற்றுமை முறைப்பொருள்.
3. இவட்குக் கொள்ளும் இவ்வணி – (இவளைக் கொள்ளும் இவ்வணி)
   இரண்டாம் வேற்றுமைப் பொருள்.
4. புரட்சிக்கு விளைவது புதுமை – (புரட்சியால் விளைவது புதுமை) மூன்றன் பொருள்
5. மலைக்குச் சென்றான் – (மலைக்கண் சென்றான்) ஏழாம் வேற்றுமைப் பொருள்.

இவ்வாறு பிற வேற்றுமைப் பொருள்களைக் 'கு' உருபு நின்று ளிப்படுத்துவதைத் தொடர்களில் காணலாம். இந்த வேற்றுமைக்குரிய பொருள்களாகப் பவணந்தியார், கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல் பொருட்டு, முறை முதலியன என்கிறார்; நான்காம் வேற்றுமைப் பொருளைத்தரும் தொடர்கள் "இதற்கு இது" என்னும் வாய்பாட்டில் அமையும் என்கிறார். 29

| | | | |
|---|---|---|---|
| எ – டு: | இரப்பார்க் கொன்று ஈவதே ஈகை | — | கொடை. |
| | பசிக்கு உணவு | — | பகை. |
| | ஔவைக்கு நண்பன் அதியன் | — | நட்பு (நேர்ச்சி) |
| | அலுவலர்க்கு உரியது இவ்வாடை | — | தகுதி |
| | உணவுக்கு அரிசி | — | அதுவாதல் |
| | உழைப்புக்கு ஊதியம் | — | பொருட்டு |
| | பாரிக்கு மகள் இவள் | — | முறை |
| | திருமலைக்குக் கிழக்கு திருத்தணி | — | எல்லை. |

நான்காம் வேற்றுமைக்குரிய 'கு' உருபு, சில தொடர்களில் அகரத்தோடு பொருந்தி வருகின்றது. அதுவும் உயர்திணைச் சொற்களோடுதான் வரும், அஃறிணையில் வருவதில்லை. இதன் சொல்லுருபுகளாப் பொருட்டு, நிமித்தம், ஆக என்பன வருகின்றன:

| | | |
|---|---|---|
| எ - டு: | கடிநிலை யின்றே ஆசிரியற்க — | (கு க) |
| | உயர்வின் பொருட்டு உழைத்தான் — | (பொருட்டு) |
| | கூலியின் நிமித்தம் வேலை செய்தான் — | (நிமித்தம்) |
| | கூலிக்காக உழைத்தான் — | (ஆக). |

**ஐந்தாம் வேற்றுமை**

ஐந்தாம் வேற்றுமையின் உருபு 'இன்' ஆகும்; 'இதனின் இற்று இது' என்னும் வாய்பாட்டால் பொருள் உணர்த்தும். 30 இவ்வேற்றுமையின் பொருள்களாக நன்னூல் ஆசிரியர் குறிப்பன, நீங்கல் ஒப்பு, ஏது, எல்லைப் பொருள்களாம். 31 தொல்காப்பியனர் 'இதனின் இற்று இது' என்னும் வாய்பாட்டில் வந்து ஐந்தன் பொருளை உணர்த்துவன இருபத்தெட்டிற்கு மேல் மொழியில் உள்ளன என்கிருர். 32 அவர் விரித்துக் கூறியிருக்கும் பொருள்களுள் பெரும்பான்மையும் 'ஒப்பு' என்ற தலைப்பில் அடக்கிவிடலாம். சேனவரையர், தொல்காப்பியனர் குறிப்பிட்ட இருபத்தெட்டுள் இருபத்துநான்கு பொருஉப் பொருள் சார்ந்தன என்றும் "பலவாய்பாட்டோடு வழக்கின் கட்பயின்று வருதலுடைமையாற் பொருஉப் பொருள் இதற்குச் சிறப்புடைத்தாகலின், பெரும்பான்மையும் அதனையே விரித்தார்" 33 என்றும் அமைதி கூறினர். தொல்காப்பியனர் கருத்துப்படி மிகுதி பற்றிக் கூறுவதாயின் இதனை ஒப்புப் பொருள் வேற்றுமை என்றே வழங்கியிருக்க வேண்டும். ஆனல் பிற்காலத்தில் ஐந்தாம் வேற்றுமையென்ருல் நீக்கப்பொருள் வேற்றுமையென்று கூறும் வழக்கினைப் பெற்றுவிட்டது. ஐந்தாம் வேற்றுமையின் நீக்கப் பொருளை ஆராய்ந்த கால்டுவெல்லார், ஏழாம் வேற்றுமை இடப்பொருளுக்கும் இதற்கும் உள்ள உறவினை ஆராய்ந்தார். இடவேற்றுமை உருபிற்கும் ஐந்தன் வேற்றுமை 'இன்'னிற்கும் இடையே உண்மையான வேறுபாடு இல்லை என்று கருதினர் நீக்கப்படு பொருளைத் தொடர்களில் உண்டாக்க வேண்டுமானல், ஓர் இடப்பெயரோடு இடவேற்றுமையுருபு ஒன்றை இணைத்து, அவ்வுருபையடுத்து புடையென வினைச்சொல் சேர்த்தால் போதுமானது என்கிருர்.

எ-டு: ஊரின் நீங்கினன்.

இடத்திலிருப்பது ஏழாம் வேற்றுமை; இடத்திலிருந்து நீங்குதல் ஐந்தாம் வேற்றுமை என்பது அவர் முடிபாகும். 34 ஏழாம் வேற்றுமை உருபுகளோடு நீங்கற்பொருள் தரும் வினைச்-சொற்களைச் சேர்த்து ஐந்தாம் வேற்றுமையாக்கலாம்; எனவே இட வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் பொருளால் ஒன்றே எனச் சிந்திக்கவைத்துள்ளார். ஆனல் நம் இலக்கணிகள் கருத்துப்படி ஐந்தாம் வேற்றுமையென்பது நீங்கல் பொருள் மட்டும் குறிக்க வந்ததல்ல; அது நீங்கலோடு எல்லை. ஏது, ஒப்புப்பொருளையும் குறிக்கவந்தது என்பதாகும். எனவே ஐந்தாம் வேற்றுமை என்பது தனியொரு வேற்றுமையே ஆகும். இடவேற்றுமையொடு சேர்க்க எண்ணுவது தவருகும்.

| | | |
|---|---|---|
| எ-டு: | மலரினும் மெல்லிது காமம் — | (ஒப்பு) |
| | நெல்லையின் வடக்கு தில்லை — | (எல்லை) |
| | ஊரின் நீங்கினன் — | (நீங்கல்) |
| | வாணிகத்தின் ஆயினன் — | (ஏது) |

**ஆரும் வேற்றுமை :**

சொற்ருெடர்களில் பெயருக்கும் வினைக்கும் உள்ள இலக்கண உறவைக்காட்டுவதுதான் பொதுவாக, வேற்றுமை என்போம். ஆனல் தமிழ் மொழியிலுள்ள சொற்ருெடர்களை ஆராய்ந்தால் ஆரும் வேற்றுமை இதற்கு விதிவிலக்காக உள்ளது. பெயருக்கும் பெயருக்கும் உள்ள இலக்கண உறவையே ஆரும் வேற்றுமை காட்டுகிறது. இது வேற்றுமைக்குரிய தனி இயல்பாகும். ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருளும் ஆரும் வேற்றுமை போன்றதே.

| | | | |
|---|---|---|---|
| எ-டு: கத்தியை வீசினன் | — 2ஆம் வேற்றுமை | — | பெயர் x வினை. |
| கத்தியால் வெட்டினன் | — 3ஆம் ,, | — | பெயர் x வினை. |
| கண்ணன் கழல் | — 6ஆம் ,, | — | பெயர் x பெயர். |
| சென்னையின் தெற்கு செங்கை நகர் | — 5ஆம் ,, | — | பெயர் x பெயர். |

சொற்றொடர்களில் ஆறும் வேற்றுமைக்குரிய கிழமைப் பொருள் தொகை நிலையிலேயே பெரிதும் வெளிப்படுகின்றன. உடைமையாகும் பொருள் உயர்திணை ஆயின் ஆறும் வேற்றுமை உருபு தோன்றாது மறைந்து நிற்கும்; உருபு வெளிப்பட்டுப் புணரும் நிலை அங்கு ஏற்படுமாயின் 'அது' உருபு வராமல் 'உடைய' என்ற சொல்லுருபு வரும்; 35 சிலவிடங்களில் 'கு' உருபு நின்று ஆறும் வேற்றுமைப் பொருளை உணர்த்தும். 36 மொழியின் இயல்பை உணர்ந்த தொல்காப்பியனர்,

"அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே"

என விதி வகுத்தார். 37 'அது' என்னும் உருபு ஒன்றன்பால் விகுதியிலிருந்து வந்தது. அஃறிணை ஒருமை உயர்திணையொடு பொருந்தி வருவதைத் தமிழத் தொடரியல் அனுமதிக்காது எனவே பழந்தமிழில் வருவது இல்லை. வந்தால் வழு. ஆனல் தற்காலத் தமிழில் அவ்வரம்பு மீறப்பட்டுள்ளது. 38

ஆறும் வேற்றுமைக் கிழமைப் பொருள் உணர்த்தும் தொடர்கள் மொழியில் அமைந்திருக்கும் திறத்தினைக் கீழ்வரும் விளக்கங்களால் உணரலாம்:

1. உயிர் குறுகிய மூவிடப் பெயர்கள் உருபின்றியே கிழமைப் பொருளை உணர்த்தவல்லன.

   எ-டு. என் வீடு
   உன் மகன்
   தன் கை.

2. 'இன்' சாரியை வேற்றுமையுருபு எதுவும் தொடரப் பெருமல் தனித்து வந்தால், அந்நிலையில், அது கிழமைப் பொருள் தரும்.

   எ-டு: நாயின் கால்.

3. அத்து, இன்–இவ்விரு சாரியைகள் இணைந்து நின்று வேற்றுமையுருபு தொடரப் பெறுமல் தனித்து நிற்கும் நிலையில் ஆறும் வேற்றுமைப் பொருள் கிடைக்கும்.

   எ-டு: மரம் (அத்து + இன்) கொம்பு = மரத்தின் கொம்பு.

4. அஃறிணைச் சாரியைகள் ஆறும் வேற்றுமைப் பொருள் தரும்.

   எ-டு: குளத்து மீன் — (குளத்திலுடைய மீன்).

5. அஃறிணை ஒருமைச் சுட்டு உடைமைப் பொருள் உணர்த்தும்.

   எ-டு: என் + அது = எனது.

6. அகரச் சாரியை ஆறும் வேற்றுமைப் பொருள் தரும்.

   எ-டு: நின்ன கண்ணி.

7. அவன், அவள், அவர் முதலிய சுட்டுப் பெயர்களும் தொகையாக நின்று ஆறும் வேற்றுமைப் பொருளைத் தருகின்றன:

எ-டு: அவன் வீடு
அவள் கை
அவர் சொத்து.

கிழமைப் பொருள் உணர்த்தும் உருபுகள் அது, அ என்பன. இவற்றைப் பார்த்து ஒருமைக்கு ஒரு வகையான உருபும் பன்மைக்கு ஒரு வகையான உருபும் தமிழில் வேற்றுமையின் இருப்பதாக எண்ண வேண்டியதில்லை. ஆறும் வேற்றுமையின் மட்டும் நிறுத்த சொல்லுக்கும் குறித்து வருகிளவிக்குமுள்ள இலக்கண உறவை நிலைநாட்ட 'அது'வும் 'அ'வும் வருகின்றன. பிற வேற்றுமைகளில் இல்லை.

எ-டு: எனது கை.
என் கைகள்.

'அது', 'அ' என்னும் உருபுகளால் வெளிப்படும் பொருளினைக் கிழமைப் பொருள் என்றோம். அவ்வுருபுகள் 'இதனது இது' என்னும் வாய்பாட்டில் அமைந்த தொடர்களில்தான் மறைந்தும் வெளிப்பட்டும் உடைமைப் பொருள் உணர்த்தும் என்பது தொல்காப்பியனர் கருத்து. 39 அவ்வாறு வாய்பாட்டில் வரும் பொருள்கள் பதினேழு வகைப்படும் என்கிறர். 40 சில தொடர்களில் முதலுஞ்சினையுந் தொடர்ந்து வந்தால் முதற்சொல் முன் ஆறும் வேற்றுமை வரின் சினை முன் இரண்டாம் வேற்றுமை வரும். 41 இதே போல் பிண்டப் பொருள்முன் ஆறுவது வரின் அதன் சினை முன் இரண்டாவது வரும் 42 இவையெல்லாம் தொல்காப்பியனர் ஆய்ந்து கூறிய முடிபுகள்.

**ஏழாம் வேற்றுமை**

இடப்பொருள் உணர்த்துவது ஏழாம் வேற்றுமை. இடம், வினைசெய் இடம், நிலமாகிய இடம், காலமாகிய இடம் என மூவகைப்படும். கண் முதலான உருபுகளால் இடப்பொருள் புலப்படும்.

| | | |
|---|---|---|
| எ-டு: பாடம் படித்தற்கண் வந்தான் | — | வினைசெய் இடம். |
| வீட்டின்கண் இருந்தான் | — | நிலமாகிய இடம். |
| வேனிற்கண் | — | காலமாகிய இடம். |

ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் சொற்களாக மொழியில் அமைந்திருப்பனவற்றையெல்லாம் தொகுத்துத் தொல்காப்பியனர்.

கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை யெனுஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனுஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனர். 43

என்று கூறியுள்ளார். பவணந்தியாரும் 'கண்' முதலான சொல்லுருபுகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். 44 தற்கால மொழியில் பக்கல், பாங்கர், முகத்து, மாட்டும், பால் முதலான சொல்லுருபுகள் வந்து இடப்பொருள் தருகின்றன. 45 சில தொடர்களில் 'கு' உருபு இடப்பொருள் தரும். 46

எட்டாம் வேற்றுமை

இதனை விளிவேற்றுமை என்பர். இவ்வேற்றுமைக்கெனத் தனி உருபுகள் இல்லை. திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறுதியே விளிவேற்றுமையாகும். ஈறு திரிதலாலும், ஈற்றயல் நீடலாலும், பிறிது வந்தடைதலாலும், ஈறு கெடுதலாலும் விளித்தன்மை பெயருக்கு அமைகிறது; பெயர் விளக்கப்படும்பொழுது, படர்க்கை இடம் முன்னிலையிடமாகிறது; இவ்விடமாற்றமே இவ்விளிவேற்றுமைக்குரிய பொருள். 47

தமிழ் மொழியில் தன்மை முன்னிலைப் பெயர்கள் விளியுருபு ஏலா; உயர்திணையில் தமர் தமன் முதலான சொற்களும் உருபு ஏலா.

'ஓ' என்னுமுருபு சில சொற்களில் இணைந்து விளிப்பொருள் தரும். 48

எழுவாய் வேற்றுமைக்கும் இவ்வேற்றுமைக்கும் உள்ள வேறுபாடு:

> ஈறு திரியாது உருபேற்றல் எழுவாய்; ஈறு திரிந்து
> உருபேற்றல் விளிவேற்றுமையது 49.

என்பர்.

இவையே வேற்றுமை பற்றிய தகவல்கள். ஆராய ஆராய வேற்றுமை வரலாறு இன்னும் புதிய உண்மைகளைத் தரும்.

இதுகாறும் தெரிவித்தவைகளிலிருந்து அறிய வருவன:

1. இலக்கணிகள் வேற்றுமை எட்டென்றது உருபு அடிப்படையில் அல்ல; பொருள் நோக்கில், தலைமைபற்றி வேற்றுமை எட்டு என்றனர்.
2. மனித வாழ்வில் மலர்ந்ததே வேற்றுமை பற்றிய சிந்தனை. வேற்றுமைப் பொருளுக்கும் மனிதனின் தொடக்ககால வாழ்வுக்கும் சம்பந்தமுண்டு.
3. பெயர்ச்சொற்கள் எல்லாம் எழுவாய் ஆகா; பயனிலை கொள்ளவரும் பெயர்ச் சொற்களே எழுவாய் வேற்றுமைக்குரியன.
4. எழுவாய் வேற்றுமைக் தொடர்கள் தொகைநிலையில் வருவன. விரி நிலையில் வரும்போது 'ஆனவன்' முதலான செலலுருபுகள் ஏற்பதும் உண்டு.
5. செயப்படுபொருள் பெரிதும் தொகைநிலையில் வெளிப்படுவது தமிழ்ச்சொற்றொடர் இயல்பாகும். எல்லா வேற்றுமை உருபுகளாலும் செயப்படுபொருள் தோற்றும்.
6. பழந்தமிழில் கருவிப்பொருளும் உடனிகழ்வுப் பொருளும் பெரிதும் ஒற்றுமை யுடையன. 'ஒடு' உருபே இரண்டையும் வெளிப்படுத்தும்.
7. ஐந்தாம் வேற்மையை ஒப்புப்பொருள் வேற்றுமையாகக் கண்டதே பழந்தமிழ்; நீக்கப் பொருள் வேற்றுமை என்பது பிற்கால வழக்கே.
8. ஐந்தாம் வேற்றுமையை ஏழாம் வேற்றுமையோடு சேர்த்துக் கூறுவது என்பது பொருந்தாது. ஐந்து தனியொரு வேற்றுமையே.

9. வேற்றுமைகளுள் ஆறும் வேற்றுமை ஒன்றே பெயருக்கும் பெயருக்குமுள்ள இலக்கண உறவைக்காட்டுவது. ஏனையவேற்றுமைகள் பெயருக்கும் வினைக்குமுள்ள இலக்கண உறவைக்காட்டுவன.

## அடிக்குறிப்புகள்

1. வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே. — தொல். சொல். 11.

2. கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப — தொல். சொல். 69.

3. கண்ணடி பட்டான் —(தொகை).

4. கண்ணால் அடிபட்டான் — (விரி).

5. மணற்கு ஈன்ற முளை. (மணலின் கண்).

6. கையினால் — ('இன்' சாரியை; 'ஆல்' உருபு).

7. வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும் — தொல். சொல். 250.

8. ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கு மீறாய் அப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை — நன். 291.

9. வேற்றுமை தாமே ஏழென மொழிப — தொல். சொல். 62.

10. விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே — தொல். சொல். 63.

11. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே — தொல். சொல். 152.

12. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே — தொல். அகத். 15.

13. தொல். சொல். 106; நன். 317.

14. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும் — தொல். சொல். 106.

கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே — தொல். சொல். 117.

15. எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றுநிலையே — தொல். சொல். 65.

16. எழுவா யுருபு திரியில் பெயரே — நன். 295.

17. தொல். சொல். 66. இளம். பக். 38.

18. தொல். சொல். 67.

| | |
|---|---|
| பொருண்மை சுட்டல் | — ஆ உண்டு |
| வியங்கொள வருதல் | — ஆ செல்க |
| வினைநிலை உரைத்தல் | — ஆ கிடந்தது |
| வினாவிற் கேற்றல் | — ஆ எவன்? |
| பண்பு கொள வருதல் | — ஆ கரிது. |
| பெயர்கொள வருதல் (என்) | — ஆ பல |
| அன்றி யனைத்தும் பெயர்ப்பயனிலையே | — தொல். சொல். 67. |

19. நன். 295.

20. நன். 295. வை. மு. கோ. உரை, பக். 220.

21. காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்ற
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்று
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள
கன்ன கிளவியும் அதன்பால என்மனர். — தொல். சொல். 72.

22. நன். 291.

23. இரண்டாகுவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி — தொல். சொல். 71.
இரண்டாவதன் உருபு ஐயே — நன். 291,

24. ஒருவினை யொடுச்சொல் உயர்பின் வழித்தே — தொல். சொல். 91.

25. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். (தமிழ் வடிவம்), பக். 299–300.

26. தொல். சொல். 74.

27. தொல். சொல். 75.

28. இதனது இதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக் கொண்டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னாக்கமும்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே. — தொல். சொல். 110.

29. நான்காவதற்கு உருபாகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி நகவு அதுவாதல்
பொருட்டு முறை யாதியின இதற்குஇது எனல் பொருளே. - நன். 298.

30. இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது வென்று மதுவே. — தொல். சொல். 77.

31. நன். 299.

32. தொல். சொல். 78.

33. தொல். சொல். 78. சேனு. பக். 67.

34. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - (தமிழ் வடிவம்). பக். 306. 307.

35. நம்பி மகன் - தொகை
நம்பியினுடைய மகன் - விரி (உடைய).

36. நம்பிக்கு மகன் - (கு. தோன்றல்).

37. தொல். சொல். 94.

38. இராமனது கையில் உள்ள வில்.

39. தொல். சொல். 79.

40. தொல். சொல். 80.

41. யானையது கோட்டைக் குறைத்தான்.

42. குப்பையது தலையைச் சிதறினன்.

43. தொல். சொல். 82.

44. நன். 302.

45. சாத்தன் பக்கல்; காட்டுப் பாங்கர்; போர் முகத்து; யாவர் மாட்டும்; அவன் பால்.

46. கிழங்கு மணற்கு ஈன்றமுளை.

47. எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முகமாகத் தானழைப் பதுவே. — நன். 303.

அத்தை — அத்தா;
அன்னை — அன்னய்;
ஊரன் — ஊர;
நம்பி — நம்பீ;
குரிசில் — குரிசீல்.

48. அண்ணு + ஓ = அண்ணுவோ (விளி).

49. இளம்பூரணர்: தொல். சொல். 66, பக். 38.

## இக்கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்கள்


1. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – சேனவரையர் உரை.
2. ,, ,, இளம்பூரணர் உரை.
3. நன்னூல் – விருத்தியுரை – தண்டபாணி தேசிகர் பதிப்பு.
4. ,, காண்டிகையுரை – வை. மு. கோ. பதிப்பு.
5. இலக்கணக்கொத்து – 'ஆறுமுக நாவலர் பரிசோதித்தது'.
6. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் – தமிழில்: கா. கோவிந்தன், தா. சிங்காரவேலு.
7. தொல்காப்பியமும் நன்னூலும் – டாக்டர். ரா. சீனிவாசன்.
8. மொழிநூல் – டாக்டர். மு. வரதராசன்.
9. Studies in Arts Science - A felicitation Volume to Prof. N. Subbu Reddiar.
10. Dravidian Nouns - S. V. Shanmugam.

## சங்கம் பற்றி சிலம்புச் செல்வர்

சாஸ்வதி சங்கத்தின் வெள்ளி விழாவில் கலந்துகொள்ளும் பேற்றைத்தந்த சங்கத்தார்க்கு மனமார்ந்த நன்றி. விஞ்ஞானியான டாக்டர். K. S. கிருஷ்ணன் தலைமை வகிப்பது சங்கத்தார் வருங்காலத்தில் பகுத்தறிவுப்பாதையில் செல்லத் துணிவு கொண்டமையை உணர்த்துகிறது. வாழ்க! சரஸ்வதி சங்கம்.

ம. பொ. சிவஞானம், 12—5—47.

## அருட்கோயில் பற்றி ஔவை துரைசாமி பிள்ளை

கண்டனூர் வையைக் கரையில் நடந்த சைவசிந்தாந்த மகாசமாஜக் கோடை வகுப்புக்கு வந்திருந்த யான் இன்று இப்பள்ளியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு செட்டிநாட்டு இளைஞர் பலரைக்கண்டு அளவளாவி இன்புற்றேன். வாழ்க பள்ளி!

ஔவைதுரைசாமி. 26-5-57.

## தமிழ்க் கழகம் பற்றி தமிழண்ணல்

சரசுவதி சங்கம் ஒரு தமிழ் விளையும் நிலம் பண்பட்டது. பாராட்டுக்குரியது. சிறந்த பேச்சாளர்களையும், நாடகக் கலைஞர்களையும், அறிஞர்களையும், கவிஞர்களையும் தொடக்கப்பள்ளி முதல் உருவாக்கிவரும் இச்சங்கம் மிக வளர்ந்து நிலைத்துத் தொண்டாற்ற மனமார விரும்புகிறேன்.

தமிழண்ணல். 7-5-1956.

# 'குயிலும் அழகும்'

டாக்டர் தா. வே வீராசாமி, எம். ஏ., பிஎச். டி.,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,

குயில்பாட்டு பாரதியின் மூன்று சிறந்த படைப்புகளில் ஒன்று. 'கண்ணன் என்ற கருந் தெய்வ'த்தின் அழகையும் சிறப்பையும் அருளையும் பாடுதற்கு முன்னால் குயில் பாட்டு 1912இல் வெளிவந்தது. தெய்வ அழகைப்பற்றிபாடும் மூன் குரலாகக் குயில் அமைந்ததுபோல் 'பெண்மைதான் தெய்வீகமாம் காட்சியடா' (715)[a] எனக் காட்சி அழகின் வியப்பைக் குயிலின் இறுதிப் பகுதியிலே காண முடிகிறது. பாரதியின் மற்றொரு கற்பனைப் படைப்பாம் 'பாஞ்சாலி சபதம்' பாரதத்தின் ஒரு கூறாக வெளிவந்து பெண்மையின் ஆற்றலைப் புலப்படுத்தும் வகை-யில் உருப்பெறினும், குயிலின் தனித்தன்மையில் எழுந்த படைப்புக் கற்பனையின் அழகை விடக் குறைவு என்று கூறுதற்கு இடமுண்டு. எனவே பாரதியின் கவி ஆற்றல் வெளிப்பட்டு அழகின் வழிபாட்டிற்குத் துணைசெய்யும் பாங்கில் குயில் பாட்டு உள்ளது.

புதுமை என்ற இடத்தில் கதைக் கனவு தொடங்கும்போது வானத்தையும் கடலையும் இணைத்து மண்ணின் அழகை எழுதாக்கிளவியின் ஒலி இன்பத்தையும் காட்டும்போது ஐம்பூதச்சேர்க்கையைச் சுட்டும் வகையில் இளம்பரிதி (நெருப்பு), கடல் (நீர்), வேதப்பொருள் பாடதலினால் வெளிப்படும் காற்று, புதுவை (மண்), பரிதி தோன்றும் இடமென வெளிப்படாது வெளிப்படும் வானம் என்பன குயில் பாட்டின் அழகுவாயிலாக அணி செய்து நிற்கின்றன.

பருமை உலகக் காட்சியிலிருந்து கவிஞன் கையில் நுண்மை அழகுப் புலப்படுமாறு குயிலின் தீம்பாடல் இசையைப் பரப்பும் செவிப்புலக் காட்சியாக மாறும்போது விந்தைத்திரை விழ்கிறது. மூன்னிக்கவிதை வெறி மூண்டே நனவழியப் பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவின் நிகழ்ச்சியாகிறது. (22—24)

புலனழகைச் சுவைக்க உலகினர்க்குக் கண்ணும் காதும் முதற் கருவிகளாகப் பயன் படுகின்றன. கவிஞன் என்ற மனிதனுக்கு அவை அவ்வாறே பயன்பட்டாலும் அவை அவற்-றின் அழகு, புதிய படைப்பாக்கக் கற்பனையில் மிதக்கச் செய்து, நனவு நிலையிலிருந்து மற்றோர் உயர்நிலைக்குக் கொண்டு செல்கிறது. அப்போது அழகின் ஆற்றலைச் சொல்லில் வடிக்க வேண்டும் என்ற படைப்புணர்வு செறிவு பெற்று இறகும் போது கவிதை வெறி பிறிடுகிறது. உலகில் அன்றாட நடப்பு நிகழ்ச்சிகளில் ஊறித் திளைத்த கவிஞனின் நனவு நிலை கரைகிறது. இரவிலே தூங்கும்போது மற்றவர்கள் காணும் கனவினை நனவழிந்த நிலையிலே பட்டப்பகலிலே நெட்டைக் கனவாகக் காணும் கற்பனைப்படைப்பு உருவெடுக்கிறது.

அக்கற்பனைக் கனவில் கவிஞனின் உள்ளம் கதை மாந்தனின் உள்ளமாய் மாறு-கிறது. கேட்ட குயிலோசையில் புதிய மாற்றுருவம் கொள்ளும் நோக்கில் 'மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ?' என ஏங்குகிறது. ஒன்று மற்றொன்றாக உயர்வது தான் படைப்பு வளர்ச்சியின்போக்கு, ஆயின் அழகுக்கலையில் அமிழும்போது மனிதன் என்பது உயர்நிலை என்றும் குயில் - என்பது கீழ்ச்சாதிப் பறவையின் இழிநிலை என்றும் எண்ணுகின்ற பகுப்பாய்வு.

¤ பாரதியார் கவிதைகள் குயில் மெர்க்குரிப் புத்தகக் கம்பெனி, . கோயமுத்தூர் 1969, எண்கள் குயில்பாட்டு வரிகளைக் குறிக்கும்.
ச. குணு.¤

மனம் பட்டுப்போகிறது. அழகு இசை அமுதாகப்பாயும் வடிவிலே தானும் மாற வேண்டும் என்ற மாற்ற நிலையையே மனம் நாடும். நாடியது கிடைப்பின் நனவு நிலையின் கூறாகக் கருதற்கு வாய்ப்புண்டு.

இசை அழகில் மனித மனத்தில் எழும் உயர்ந்த பண்பின் தூய வடிவமாம் அருள், இன்பம், புகழ் என்பவற்றை க் காட்டுவது ஒரு நிலை. ஒரு பொருள் மற்றொரு பொருளின் கூட்டுறவின் ஒத்திசைவால் எழும் விளைவுகளைக் காட்டும் நெறியில் நாதம், தாளம், பண் போன்றவற்றை உணர்த்துவது மற்றொருநிலை. ஒரு பொருளின் அகத்தே அமைந்த உள்ளுறுப்புகளின் ஒன்றிய கூட்டுநிலையில் ஏற்படுவது 'உறுதி' என்ற கண்ணிற்குப் புலப்படா நிலை மற்றொன்று. புற அமைப்பில் வேண்டும் அழகெல்லாம் அமைய வேண்டிய முறையில் அமைந்திருப்பின் புற வடிவ அழகு பொருந்தி நிற்கும் நிலையைக் குழல் வடிவிலே கூறுவது ஒரு நிலை. செம்மைகோ வகையில் வளர்ந்து முதிர்ந்த இரு வேறுபட்ட தனித்தனிப் பொருள் அழகால் ஈர்க்கப்பட்டு இணைந்து அதன்பயனைத் துய்க்கும் நிலை கூடல் நிலையாகக் காட்டும் குயில்.

இவ்வாறு கண்ட அழகடிப்படையைப் பின் வரும் பகுப்பு நிலையால் காணலாகும்.

| | | |
|---|---|---|
| உடல் | கூட்டு நிலை அழகு—அகவடல் /7/¤<br>தோற்றநிலை அழகு—புறவுடல் /9/¤ | ஒருமை |
| உயிர் | உயர்வ் பண்பழகு—உள்ளம் /1,2,6/¤ | |
| கூட்டுறவு | அழகு—உயிர் உடல் /3, 4, 5/¤ | |
| இணை நிலை | அழகு—உடல், உள்ளம், உயிர் /8/¤ | இருமை |

¤ (காதல் காதல் என்ற குயிலின் பாட்டில் காணும் எண்கள் இவை)

இவ்வழகுப்பாங்கின் – முழு வெளிப்பாட்டினைக் குயிலின் முழு வடிவையும் காணும் போது புலப்படும் செவிப்புல அழகு இதன் நுண்மை வெளிப்பாடு. அதன் புறத்தோற்றம் – உடல்-பருமைக் காட்சி கண்ணுக்கு அழகற்ற காட்சியாகக் கண்ணில் படும் இசை அழகாகச் செவிப்புலத்தை ஈர்ந்து வேற்றுமையின் வேராம் பிறப்புயர்வு தாழ்வை மறக்கச்செய்து உயிர்களிடையே ஒருமைப்பாட்டை உண்டாக்குவது அழகின் ஆற்றல் எனக் 'குயி' லால் அறிகிறோம்.

குயில் பற்றிக் கவிஞனின் முதற் குறிப்புப் பேடைக்குயில் (12) என்பதுதான். அதன் குரலால் கேட்பவர் உள்ளத்தில் அனல் பெருகியது எனக் கூறுவதுடன் இன்னமுதாகவும் 'மின்னல் சுவை தான், மெலிலாய் மிக இனிதாய் வந்து பரவுதல் போல்' (18 - 19) தீம்பாடல் இசைத்ததையும் சேர்த்திணைப்பார். செவிப்புல இன்ப மூட்டும் அழகில் கட்புலக்கவர்ச்சியாக விளங்கும் அனலையும் மின்னலையும் சேர்த்தபின், நாவின் சுவையாக அமுதத்தையும் கூட்டுவார். மின்னலின் கட்புலத்தின் கவர்ச்சியை மிகுதியாகக் காட்டும்போது இயற்கையில் காணாத இயல்பைப் புலப்படுத்துகிறார். பல்வகைப்பாடல்களில் காணும் 'மழை'யில் 'வெட்டி யடிக்குது மின்னல்' என்பார் கவிஞர். (வசன கவிதையில் 'புகழ்' என்ற தலைப்பில் 13-ஆம் பிரிவில் மின்னல் பற்றிய செய்திகளை இங்கு கருதுதல் நலம்). ஆனால் 'குயிலில் காணும் மின்னலோ பரவும் பான்மையில் மெலிது, மிக இனிது. இயற்கையுடன் முரண்பட்ட இத்தகைய பண்புகளை மின்னலுடன் சேர்க்கும்போது அழகின் பாங்கிலே 'ஒளி' தனித்த மெல்லிய இனிய இடத்தைப் பெறுகிறது.

இந்நிலையில் செவிப்புலத்திற்குரிய அழகு கட்புல அழகாக இயற்கையில் காணக்கிடைக்காத இயல்புடன் புதுவடிவம் கொள்கிறது. அவ்வழகு கவிஞனிடையே சில மாற்றங்களை ஏற்படுத்தவே, 'ஏழுலகு மின்பத் தீ ஏற்றும் திறனுடையாய்' எனக்குயிலைப் புகழுதற்குரிய வகையில் 'மனந்தீயுற' நிற்கிறான். ஒளி அழகின் தொடர்ச்சியாக இங்கு 'இன்பத் தீ'யையும் 'மனந்தீயு'ற்ற நிலையையும் காணும் போது ஒளியும் வெப்பமும், சுடரும், செம்மையும் பெற்ற தீ, அழகுப் பொருளாகக் குயிலில் அமைந்து முன்னொளி காட்டிச் செல்வதைக் காணலாம். (வசனக் கவிதையால் 'ஞாயிறு' பல்வகைப் பாடல்களில் 'அக்கினிக் குஞ்சு' வேதாந்தப் பாடல்களில் 'ஒளியும் இருளும்', தோத்திரப் பாடல்களில் 'அக்நிஹோமம் - தீ,, 'அக்னிபகவான்' போன்றவற்றை இங்குக் கருதலாம், 'வானத்து மோகினியாள்' (19) 'மோகனப்பாட்டு' (67) என்று கவிஞன் குயிலை ஒட்டிக் கூறுவதால் கட்புலனுக்கெட்டாத மனத்தை காட்சிக்குட்படுத்தித் தீப்பற்றுவதாகக் கூறும்போது அதன் 'மோகன' 'நிலையின்' மாயக் கவர்ச்சியை உணர முடிகிறது.

உலகிலே, அறிவும் வடிவும் குறுகிக் குயில் சிறியதொரு பறவையாகப் பிறந்தது எதனால் என எண்ணிப் பார்க்க இடம் தந்து தேவர் கருணையா சினமா என்று முடிவுசெய்ய முடியாமல் மயங்குகிறது. இயற்கையிலே இன்பக் குரல் படைத்த குயில், உலகின் இயற்கைப் பொருள்களால் எழும் ஒலிகளில் (கானப்பறவை ஒலி, மரங்களிடை நுழையும் காற்றொலி, ஆற்று நீரோசை அருவி ஒலி, கடலின் ஓலம்-93-97) நெஞ்சைப் பறி கொடுப்பது, இயற்கையுடன் இயற்கை ஒன்றும் இயல்பாகும். ஆனால் மானிடவர் செயற்கை நிகழ்ச்சிகளில் (பெண்களின் காதற்பாட்டு, ஏற்ற நீர்ப்பாட்டு, நெல்லடிப்பார் பாட்டு, சுண்ணமிபடிப்பார் பாட்டு, பண்ணைப்பாட்டு, கும்மிப்பாட்டு, மானிடர் இயக்கும் பல இசைக்கருவிகளில் எழும் ஒலி,) மனம் பறிகொடுத்த நிலை, எதிர் இயல் பூண்டதாகும். இங்ஙனம் செவிப்புல அழகின்பம் இயற்கை செயற்கை ஆகிய இருநிலைகளில் குயிலைக்கவர்ந்ததாகக் காட்டும்போது அழகின் களங்கள் இயற்கை மட்டுமன்று செயற்கையிலும் எழலாம் என்ற எண்ண விதையைக் 'குயில்' விதைக்கிறது.

மாயக்குயிலாக இசைமயக்கம் செய்த வடிவில் சிறுமை (சின்னக்குயிலி - 117, 141) இளமை (பிள்ளைக் குயில் - 120) வண்ணம் (நிலக்குயில் - 128) ஆகியவற்றைக் கட்புல அழகாகக் காணும்போது கவிஞன் உள்ளத்தில் - சிறுமை என்ற உண்மைப்பண்பும் வடிவும் கருமை (நீலம்) என்ற வண்ணமும் (இலக்கியத்தில் கருமை நீலம், பசுமை ஆகிய நிறங்கள் ஒரு நிலையில் வைத்துக் கருதப்பெறும்). இளமை என்ற உண்மைப்பண்பும் காட்சி அழகின் அடிப்படையாக அமைவது இங்கு வெளிப்படுகிறது. சிறுமையும் கருமையும் அழகின் தன்மையாக அமையுமா என்ற கேள்வி எழின், பெருமையும் செம்மையும் அழகின் அடிப்படையாகப்

போற்றப் பெறும் போக்குக்கு எதிராகவே அமையும். செவிப்புல அழகை மாற்றிக்கட்புல அழகாகக் காட்டிய மாற்ற நிலை இங்குக்காண புரியாது. அதனால் புறவுடல் தோற்ற நிலை அழகில் எல்லைக்கு அப்பால் செல்ல வேண்டியுள்ளது.

குயில் காதல் மொழி கூறி மறைந்தபின் கவிஞனுக்குக் கனவு நனவறியா நிலை வருகிறது; எண்ணமற்ற நிலை எய்துகிறது. 'இருபது பேய்கொண்ட வெறிநிலை வெளிப்படு-கிறது (142-3). இவை எல்லாம் கவிஞனின் உடல் உள்ள மாற்றங்களாம். கண்ணும் முகமும் களியேறி உடலில் புறநிலை மாற்றம் உண்டாகிறது. காமதேவனின் அம்புநுனிகள் அகத்தே அமிழ்ந்ததால் உள்ளத்தில் அகநிலை மாற்றம் ஏற்படுகிறது. குயிலின் சொற்கள் (130–139) தந்த மாற்றம் இது. இந்நிலையில் மாயம் நிழல், இந்திர சாலம் என்பவை எப்படிப் பொய்ம் மையின் பொய்த்தேரோ அதுபோல் கவிஞனின் உண்மை இருப்பு நிலையில் புத்தி, மனம், திடசித்தம் புலனொன்றறியாமல் கயிறாடு பாவையாய் ஆட்டுவிக்கும் நிலையில் அகப்பட்டுத் தவிக்கிறது. (154 – 158) அறிவு முற்றிலும் அழிய உண்மை மறைய நிழல் அடியெடுத்து வைக்கிறது.

அழகு என்பது எது என்று அறிய முயலும்போது மனித மனம் உலகிற் காணும் பொருளில் அமைந்து கிடக்கும். உண்மை அழகு எது என்று அறிய முற்படும் போது பொரு ளின் ஒவ்வொரு பகுதியும் அழகாகத் தோன்ற இடமுண்டு. சிற்சில சமயங்களில் சில பகுதிகள் அழகாகவும் சில பகுதிகள் அழகற்றனவயாகவும் – படும். ஒரோர் சமயங்களில் அழகே – புலப்படா மயக்க நிலையும் அமையும். இந்நிலையைக் கண்ணன் என் காதலன் (2) என்ற பாட்டின் தொடக்கத்திலே 'ஆசை முகம் மறந்து' போன நிலையில் அறிய முடிகிறது. காதலர் பிரிவின் விளைவு இது. இதே நிலையின் பெரு வடிவமாகக் குயிலைப் பிரிந்த கவிஞனின் மயக்க நிலை அமைகிறது. அம்மய/க்கத்தில் 'நானும் என–துயிரும்' எனத் துக்கத்தில் தன்னை யே பிரித்துப்பார்க்கும் இருமை உணர்வு ஏற்படுகிறது. இத்தகைய இருமை உணர்வு தவிர்ந்த பின்னரே அழகுணர்வில் புதிய பார்வை உண்டாகும் என்பதைக் 'குயி'லின் வளர்ச்சி கூறும். பிரிவால் வாடிய கவிஞன் அடுத்த நாளே, குயில் குறித்த நான்காம் நாள் வரை காத்திராமல், சென்றபோது வழியில் நின்ற பொருள் எல்லாம்கண்ட நினைவில்லை. ஆனால் 'செஞ்ஞாயிற்று ஒண்கதிரால் பச்சைமரமெல்லாம் பளபள வென்றிருந்த காட்சி மட்டும் தெரிகிறது. ஞாயிற்றின் சிவப்பும், மரத்தின் பச்சையும் வண்ணங்களின் காட்சிப்புல அழகைப் புலப்படுத்தின. செம் மையில் ஒண்மையும், பசுமையில் பளபளப்பும், அவற்றின் உயிரியக்க நிலையையும், நிறப். பேற்றின் வளத்தையும், கவர்ச்சியையும் காட்டவே கட்புல அழகுக்குத் தனிவழி தெரிகிறது. நாடிச் செல்லும் பொருளின் நாட்டத்தின் செறிவால் அப்பொருளோடு தொடர்பில்லாதன வெல்லாம் காண்பார் கண்ணுக்குப் புலப்படாமல் செல்ல, நாடுதற்குரிய பொருளின் பின்புல மாக விளங்குவன எல்லாம் கண் முன் புலப்பட்டுத் தத்தம் பண்பும், பாங்கும், பொலிவும் வெளிப்படப் புத்தழகு காணுமாறு வழிசெய்கின்றன. மாறாக நாடுவோன் மனத்தின் வேகத் தால் நாட்டமுறு பொருளை ஒட்டி அமைபவற்றிலும் அழகைக்காணும் நாட்டம் அரும்புகிறது எனலாம்.

உலகிலுள்ள பொருள்களில் சிலவற்றைப் பொது நிலையில் அழகுடையன என்றும் சிலவற்றை அழகற்றன எனவும் ஏற்பது இயல்பு. காளையைக் காண்பவர் 'மனத்தைப் பிடித்தி ழுக்கும் காந்த' மாகவும் (313) அதன் 'பீடுநடை' போற்றத்தக்கதாவும் ஏற்றுள்ளனர். ஆயி னும் குரங்கை அழகுடைப் பொருளாக ஏற்காததுமட்டுமன்றி அழகற்றவரைப் பழிப்பதற்குப் பயன்படுவதாகவும் அன்றாட வாழ்வில் அமைந்துள்ளது. இந்நிலைக்கு மாறுபட்ட போக்கினைக் 'குயி'லில் காண்கிறோம். குரங்கைக் கண்டு 'ஈடறியா மேன்மையழகு ஏய்ந்த வரே' (190) என்று விளிப்பதைக் கேட்கிறோம். அழகிற் சிறந்த உயிராம் மானிடரை அதனுடன் ஒப்பிட்டு மேனியழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும் கூறியிருக்கும்

கொலு நேர்த்தி தன்னிலுமே வானரார் தஞ் சாதிக்கு மாந்தர் நிகராவாரோ? என்று கேட்டுப் பட்டு மயிர்முடிய குரங்கின் உடலழகு, ஆடிக்குதிக்கும் அழகு வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே தெய்வம் கொடுத்திருவாலின் அழகு பற்றி நெருப்புச் சுவைக் குரலில் ஆசை ததும்ப அமுதூறக் குயில் கூறும்போது அழகற்ற குரங்கும் குயிலின் வாயிலாக அழகுப் பொருளாக மாறுகிறது.

எனவே அழகு என்பது காணும் காட்சிப்பொருளில் அமைந்து கிடக்கும் தண்பன்று. காணுகின்ற உயிர், தன்னால் காணப்படுகின்ற பொருளில் அமைந்து கிடக்கும் பண்பாகக் கருதுவது அழகு என அறிய முடிகிறது.

அழகற்ற குரங்கும் கருமைக் குயிலும் ஒன்று சேர்வதைத் தடுக்க நினைத்தான் மயங்கிய மானிடன். வாளை வீசும் போது எல்லாம் மறைகின்ற காட்சிக்குக் காரணம் கனவா நனவா என்ற கேள்வியுடன் தெய்வவலியா என்ற புதிய ஒன்றையும் இணைக்கிறார் கவிஞர். கனவுக்கும் நனவுக்கும் அப்பாற்பட்ட 'தெய்வ நிலை' என்ற ஒன்று புதிய வலிமையுடன் இடையில் எழுகிறது. இவ்வெழுச்சியை ஒட்டிப் புதிய நிகழ்ச்சி ஒன்று தொடர்கிறது. வானில் மாட்சியுற ஞாயிறு மோன ஒளி சூழ்ந்திட மொய்ம்பிற் கொலுவிருந்த காட்சி (252–3) வருகிறது. ஞாயிற்றின் ஒளி பட்டவுடன் ஒளியும் உற்சாகமும் உயிர்ப்பும் பெறுவது உலக இயற்கை. ஆயின் அழகற்ற பொருளின் பெறுவது கூட்டுறவைத் தடுக்க எண்ணித் தோல்வியுற்றதின் விளைவாக அழகின் கருவூலமாம் ஞாயிற்றின் ஒளியும், தோல்வியுற்ற மானிடத்தின் சோர்வையும், மயக்கத்தையும், பதைபதைப்பையும் நாணத்தையும் துயரத்தையும் போக்க இயலவில்லை.

அழகு, இன்பம் தரும் ஊற்று, அழகற்றது துன்பத்தை தரும் கொடுவாள். ஆயினும் பொய்ம்மையை உண்மை எனக் கருதும் போது கதிரவனாம் அழகுப் பொருளுட்டும் உணர்வும் உற்சாகமும் செயலற்று விழும் நிலையைக் காட்டும்போது அது தான் உண்மையா என்ற கேள்வி எழும்.

> தங்கமுருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
> எங்கும் பரப்பும் இங்கித' மாகவும்
> 'வான்வெளியைச் சோதி கவர்ந்த சுடர்மயமாம் விந்தை' யாகவும்

'கண்ணுக்குக் கண்ணாகி விண்ணையளக்குமொளி தேம்படும் இன்ப' மாகவும் ஒளியைக் கண்டு கட்புல இன்பமாக மயங்குகிற நிலையினை எதிர்த்து அறிவு 'நெறியில் அவ்வொளி தரும் பயனை எண்ணுகிறது. அதனால், புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து, விண்ணை வெளியாக்கும் விந்தை' புரிகிறது. இதனால் இன்பக்களியில் இயங்கும் புவிகண்டு மகிழ்கிறது. அழகின் சிரிப்பு அளிக்கும் பயன் எது என நன்கு தெரிகிறது. ஒளியை விட்டு நீங்காத பிணைப்பு மேலும் இறுகுகிறது.

குயிலுடன் குரங்கைக் கண்டதற்கு அடுத்த நாளும் சொந்தவுணர்வில்லாமல் குயிலைத் தேடும் முயற்சி தொடர்கிறது. முன்பு அழகற்ற குரங்கை அழகற்ற நிலையில் வெறுப்புடன் கண்டது. ஆனால் இன்று அழகுக் காளையை ஓர் அழகுள்ள பொருளாகக் காணச் சொந்த உணர்வற்ற நிலை விடவில்லை. மாறாகக் 'கிழக்காளை மாடு' என அதனை வெறுக்கிறது. இங்கு, காளை என்ற விரும்பத்தக்க பொருள் வெறுக்கத்தக்கதாக மாறுதற்குக் காரணம், தான் விரும்பும் பொருள் தன்னை விட்டுவிட்டு மாற்றோர் பொருளை விரும்பிச் செல்லுவதைக் கண்ட 'இழப்பு நோக்' கில் வெளிப்படும் வெறுப்பு ஆகும். அதனால் உண்மையில் அழகுள்ள பொருளின் உறுப்புகளான நீள முகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும் பஞ்சுப் பொதிபோல்

படர்ந்த திருவடிவம் மிஞ்சபுறச் சுமையும் வீரத்திருவாளும் (319-321) அழகுப் பொருள்களாகத் தெரியாமல் 'தொழுமா' ட்டின் இழிவு மட்டும் தோன்றுகிறது.

ஆயினும் குயிலின் மொழியில் சேற்றிலே தாமரையும் 'மீன்' வயிற்றில் முத்தும் பிறக்கும் செய்தியைக் கூறுவதால் அழகில்லா இடத்திலே அழகு பிறக்க வழியுண்டு என்பது காட்டாமல் சுட்டப்பெறுகிறது.

'பழையபடி குயிலின் பாடல் பொங்கி வரவே'
'பொன்னை நிகர்த்த குரல் பொங்கிவரு மின்பம் ஒன்றே' (374) காணும் நிலை படிகிறது. அழகின்மை, வெறுப்பு, துன்பம், பொறாமை என்ற இருளெல்லாம் குயில் பாடும் பாட்டின் அழகின்பத்திலே மறைந்து விடுகின்றது. இதைத் தொடர்ந்து.

உலகப்படைப்புப்பற்றிய எண்ணம் எழுகிறது. ஐம்பூதங்கள் ஐம்பூதங்களைப் படைத்து அதன்பின் 'கொள்ளைப் பெரியவுருக்கொண்ட பலகோடி அண்டங்களை ஒட்டும் நிலை வருகிறது. காலம், திசை, பல ஞாலம் எனப் பல சாலம்' அமைகிறது. இவை எல்லாம் அதிசயம்தான். கண்காணும் இவ்வதிசயங்களை விடக் காதால் கேட்டு மகிழும் இசை இன்பம் மிகவும் விந்தையாக உள்ளது எனக் கவியுள்ளம் உணர்கிறது. ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமாகப்படுகிறது. (399).

முன்னர்த் தெய்விக வலிமையை உணர்த்தியதின் வளர்ச்சிக் கருத்தாகக் குயிலின் பாட்டு-தெய்விகத் தீம்பாட்டாக ஒலிக்கிறது. பாடல் முடிந்ததும் பழையபடி அறிவு தலை எடுக்கிறது. தனக்குக் கிட்டாப் பொருள் மற்றொரு பொருளுக்குக் கிடைக்கிறதே என்ற பொறாமை படர்கிறது. பகையும் கொடுமையும் பற்றி எரிக்கப் பித்துப் பிடித்த நிலை பெருகும்போது அழிவு எண்ணமே தலை எடுக்கிறது.

ஆக்கத்திலே அழகு வெளிப்படும். அழகை நாடும்போது ஆக்க நெறியில் செல்லாமல் அழிவு, நெறியில் செல்வதும் உண்டு. அவ்வாறு செல்லும்போது அழகு மறைய மனிதன் பைத்தியமாக மாறும் கொடுமை விளைகிறது. இதனைக் 'குயில்' எடுத்துக் காட்டத் தவற-வில்லை. அழகுண்மையை மறுக்கும்போது ஏற்படும் முடிவு என்பதை ஐயந்திரிபற உணர்த்துகிறது.

குயில் குறிப்பிட்ட நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அழகின் தேடலை ஆழமாகக் காட்டும். மெய்ம்மை அறிவு இழந்த நிலையில் சித்தம் திகைப்புறச் செய்கை அறியாமல் துயரும்போது வாடும் கவிஞன் கண்ணிற்குக் குயில் வடிவம் போல் ஒருருவம் தெரிகிறது. நன்கு வடிவம் துலங்கா நிலையில் அழகின் துளிர் துளிர்க்கிறது. அது எது என நாடிப் பின் தொடரும்-போது அது நின்று நின்று அவனை ஈர்த்த வண்ணம் அகல்கிறது. 'சோதிக் கடலின் கரும்-புள்ளியாக' அது தெரிகிறது. இங்குதான் ஒளியும் இருளும் அமைந்த காட்சி உருவெடுக்-கிறது. ஒளியா? இருளா?— அழகா அழகின்மையா? என்ற இருமை நிலை மாறி இருமையற்ற நிலையில் இரண்டும் ஒரே நிலையில் வெளிப்படுகிறது. இதன் விளக்கம் போல மெள்ள மெள்ளக் கவிஞனை அழைத்து வழிநடத்திச் சென்று 'சோதி வெள்ளம் அலையுமொரு கொம்பரின் மேல் சின்னக் கருங்குயில் செவ்வனே வீற்றிருந்த (449-450) இருப்பு வெளிப்-படுகிறது. சோதி வெள்ளத்தில் சின்னக் கருங்குயில் என்ற வடிவில் ஒளி, பெருக்கம்-சிறுமை இருள் ஆகியவை ஒன்றுடன் ஒன்று முறையே முரண்பட்ட நிலையிலும் ஒன்றாகக் கூடி நிற்பது தெரிகிறது. மெய்ம்மை என எண்ணியதில் பொய்ம்மை தெரிவதால், நிலைபேறு என்று ஒன்றை நம்பும்போது அது நிலையற்று இடிந்து விழ்வதால், ஒரு பொருளை உயர்ந்தது என்று மதித்தபோது அப்பொருள் இழிந்த பொருளாக வெளிப்படுவதால் சினம் பெருகுகிறது. இச்சினம் பொங்கிய நிலையில் முன்னர் எய்திய கனவு நனவற்ற காட்சி புலப்படுவது இல்லை.


ஏன் தெய்வ வலியும் தோன்றவில்லை. பித்தம் பிடித்த பெரிய கொடுமையும் வுளையவில்லை. சினத்தால் கொன்று விடும் கொள்கை எழுகிறது. அவ்வெண்ணத்தை எதிர்த்து நெஞ்சம் இளகும். மாற்றம் ஏற்படுகிறது. செயல்புரிய எழுந்த எழுச்சியும் செயலவிய வீழ்ந்த வீழ்ச்சியும் ஒரே இடத்தில் நிகழ்கின்றன. சோதிக் கடலில் கரும்புள்ளி (437) போல் நேர்முனையும் எதிர்-முனையும் ஒன்றாகக் கூடுகின்றன.

அதன்பின் பண்டைக் களவொழுக்க அடிப்படையில் விரிந்து இயற்கை இறந்த நிகழ்ச்-சிகளைப் புராணக்கதைகள் போல் மெய்ம்மையை அறிதற்கெனப் புதிய திருப்பங்கள் உண்டாக்கி முன்னர் அமைத்த தீமையால் குயிலுருவம் பெற்ற பெண் மறுபடியும் கவிஞனின் கையில் விழக்கதை உருவாகிறது. அவ்வாறு வீழ்ந்த குயிலை முண்டுவிடும் இன்பவெறி கொண்டு முத்தமிட்ட வேளையில் குயிலைக் காணாக் காட்சி எழுகிறது. இதுவரை பாடிப்-பறந்துவந்த குயிலின் சின்ன உருவம், பொய்த்தோற்றம், கருமை வண்ணம் காணாமல் போகின்றன. புதிய அழகு வடிவம் காட்சி அளிக்கிறது. விந்தை, அற்புதம், தெய்விகக் காட்-சியாக மாறுகிறது. இவளழகை எற்றே தமிழில் இசைத்திடுவேன். (718-719) என்று கவிஞன் தான் கண்ட அழகின் அதிசய காட்சியை மொழியால் வெளிப்படுத்த முடியாத தன்மையை புலப்படுத்துகிறான்,

அழகினைக் கட்புலம் கொண்டு காணப்புதிய அழகுச் சிற்பத்தை வடிக்கிறான். அது,

'கவிதைக் கனிபிழிந்த சாற்றினிலே பண் கூத்தெனும் மிவற்றின் சாரமெலாம் ஏற்றி, அதனோடே இன்னமுதைத் தான் கலந்து காதல் வெயிலிலே காய வைத்த கட்டி 'யாக (729-732) விளங்குகிறது. காட்சிப்புலனாகக் காட்டும் அழகின் வடிவம் உயிர், உள்ளம், உடல் என்ற முன்றின் துய்ப்புப் பொருளாக அமைக்கப் பெறுகிறது.

அழகை அறிய- அறிபவன், அழகுப் பொருள் என்ற இருமைப் பாங்கு இருக்கும் வரை அழகு, அழகற்றது என்ற இரு பிரிவுகள் இருக்கும். காணும் பொருள் வேறு காண்பவன் வேறு எனவும் தான் ஒரு பொருளைக் காணுகிறேன் என்ற உணர்வு உள்ளவரை இருமை நிலை இருக்கும். இந்த இருமையற்ற ஒருமை நிலை அமையும் போது அழகே தானாய், தானே அழகாய்-குயிலே கவிஞனாய் கவிஞனே குயிலாய் மாறுகின்ற-மாறுபாடு அற்ற ஒற்றுமை எழும். 'வேதாந்தமாக விரித்து பொருள் உரை' க்கும் போது (748) இருமை மறைகிறது. இருமையற்ற ஒருமை எழுகிறது. இந்த வேதாந்த முடிவில் அழகே தானாக அறியும் அறிவில் புதிய அழகு பொலிகிறது. வேதாந்தம் இவ்வாறு பொலியும் அழகாகப் புரிகிறது. 'காக்கைச் சிறகினில் நந்தலாலா' வைக் காணுவது போன்று அழகின்மையில் தெய்விக அழகு வெளிப்பட அதன் விளைவாகக் குயில் கூவுகிறது.



# கலைஞானத் தோகை.

சைவப்புலவர் அமுதலிங்கம்,
தமிழாசிரியர்,
சென்னை.

செந்தமிழ் மணி நாட்டினில் உள்ளோர் மெய்யுணர்வு நலம் சான்றவர். தெய்வம் தெளிந்தவர். இம்மை வாழ்வினை இனிதுறச் செய்து மறுமை வாழ்வினையும் மதித்துப் போற்றியவர். இம்மை நலங்களை இழக்காமலும் மறுமை நலங்களை மறக்காமலும் வாழ்-வாங்கு வாழ வழிகாட்டிய காரணத்தினாலேதான் 'உலகியல் கூறிப் பொருள் இது என்ற' பெரிமைக்குரியவர் ஆகின்றார் திருவள்ளுவர்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

எனவும்,

"இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை ஆளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே" (அப்பர்)

எனவும் இருமை நலங்களையும் இறைவழிபாட்டின் பயனாகக் கொள்வதே, செந்தமிழ்ச் சிவநெறி!

'இசைபயில் சடாட்சரம் அதனாலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே"

என்பார் அருணகிரி நாதரும்.

இத்தகைய நல்வாழ்வுக்குப் பற்றுக் கோடாகிய பரம்பொருளை 'வாழ்முதற் பொருள்' என்று போற்றினர். முழுமுதற் கடவுளின் திருவருட் சக்தியாகிய அங்கயற்கண் அம்மையைப் புகழுமிடத்து,

திருமகள் வலக்கண் வாக்கின்
　　சேயிழை இடக்கண் ஞானப்
பெருமகள் நுதற்கண் ஆகப்
　　பெற்று வான்செல்வம் கல்வி
அருமைவீ டளிப்பாள்" ✲

என்று போற்றுகின்றார் பரஞ்சோதி முனிவர்.

---

✲ திருவிளையாடற் புராணம்

காத்தற் கடவுளின் சக்தியாகிய திருமகளையும் படைத்தற் கடவுளின் சக்தியாகிய கலைமகளையும் மூவர்கள் முதல்வனாகிய பரம்பொருளின் திருவருட் சக்தியின் திருவிழிகளாக உருவகம் செய்த நுட்பம் நினைக்கும் தொறும் வியப்பினை விளைப்பது. உலகம் இனிது நடைபெறக் கல்வியும் செல்வமும் கண்போல்வன என்ற கருத்தும் இந்த உருவகத்தால் பெறப்படுகின்றது.

திருமகளையும் கலைமகளையும் தாமரையாளாகப் போற்றுவதும் மரபாக உள்ளது.

"கண்கள் எனும் கருங்காலம்
கரங்கள் எனும் பசுங்கமலம் கவினப் பூத்து
வெண்கமலத் திருந்தாளை
செங்கமலத் திருந்தாளை வேண்டல் செய்வோம்"

என்று போற்றுகின்றார் திரிகூடராசப்பக் கவிராயர். எனினும் திருமகளையே மலர்மகளாகக் கொள்வது சங்கநாள் மரபு, கலைமகள் நாவின் கிழத்தி என்றுதான் குறிக்கப் பெறுகின்றாள்.

"சிந்தாமணியே! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்"

என்பது மணிமேகலை சிந்தாமணி ஆசிரியர் சீவகன் கலைபயின்ற பாங்கினைக் கூறும் பகுதிக்கு 'நாமகள் இலம்பகம்' என்றே பெயரிட்டுள்ளார்.

படைப்புக் கடவுள் தாமரை மலரில் வீற்றிருப்பவன். ஆதலின் கலைமகளும் வெண்-தாமரை மலரில் வீற்றிருப்பவள் ஆயினாள். பொருட் செல்வத்துக்குரியவள் செந்தாமரையாள், ஆதலின் கலைச் செல்வத்துக்குரியவள் வெண்தாமரையாள் ஆயினள் போலும். 'அறியாமை என்னும் காரிருள் அறிவு மலர்வதன் அடையாளமே வெண்தாமரை' என்பார் இரசிகமணி. அறிவின் நிறம் வெண்மை ஆதலின் அறிவினைத் தரும் அன்னையின் நிறமும் உடையும் அணியும் பிறவும் எல்லாம் தூய வெண்ணிறம் ஆயின. இங்ஙனம் வெண்மை நிறத்தினைப் பெரிதும்விரும்புவதற்கேற்ப என் வெள்ளை மதியினையும் விரும்பி ஏற்றனளே என வியந்து போற்றுகின்றார் மீனாட்சி சுந்தரனார்.

"என்னை உடையாள் கலைமடந்தை எவ்வுயிர்க்கும்
அன்னை உடைய அடிமலர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே தங்கும் என உரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து"

என்பது தண்டியலங்கார மேற்கோள். இக்கருத்தினையே

---

திருக்குற்றாலத் தல புராணம்
நாலடியார் 256
கலைமகள்-தொகுதி—1
திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ்-காப்பு.

"வெண்தா மரைக்கன்றி நின்பதங் தாங்களன் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க அழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் களிக்கும் கரும்பே சகலகலா வல்லியே"

என்று சுவை ததும்பச் சொல்லுகின்றார் சிற்றிலக்கிய உலகத்துச் செழுஞ்சுடராகிய குமரகுருபரர்.

கலைமகளை அமர்ந்த கோலத்தில் வழிபடுவது மரபாக உள்ளது. கல்விச் செல்வம் ஏனைப் பொருட்செல்வம் போல நிலையாமை உடையதன்று என்பதன் குறிப்பே அது. சங்க நாளிலேயே சொல்லேருழவர் வில்லேருழவரினும் மேம்பட்டு விளங்கினர். கலைமகள் தன் அருள் பெற்றவரை அரியாசனத்து வேந்தரொடு சரியாசனம் வைப்பவள். அரசன் அரியா-சனத்தில் அமர்ந்திருப்பக் குமரகுருபரர் அரிமாவின் மீதே அமர்ந்து வந்தார் என்று கூறுவர்.

கல்வியா? செல்வமா? வீரமா? என்ற வினாவுக்கு விடையளிப்பார் போல.

பூமாதும் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப மிகஉயரத் திருப்பல் என்று
நாமாதும் கலைமாதும் என்னச் சென்னி
நாவகத்துள் இருப்பாளைக் கருதுவோமே"

என்று கலைமகளின் உயர்வைக் கற்பனை நலம் கூட்டி உரைக்கின்றார் செயங்கொண்டார். கம்பநாடர் கலைமகளே திருமகளும் சய மகளுமாகித் தன் நெஞ்சில் இருந்தருள்வாள் என்று கூறுவதும் ஒப்பு நோக்கத் தக்கது.

"விரிகதிர் மதியில் கதிர்விரி பொருட்டுத்
தாதுகு படுத்த மேதகு வெண்மணல்......
தீதற இருந்த ஆதி நாயகி
கலைமகள் கழலிணை கருத
நிலைமை நீடுதல் தலைமையோ அன்றே"

எனவரும் ஞானாமிருதச் செய்யுள் கலைமகள் அருள் பெற்றார் பெருமை பெறுதல் இயல்பே என இயம்புகின்றது.

கலைமகளின் பேரருள் பெற்ற புலமையாளருள் ஒட்டக்கூத்தரும் ஒருவர். அவர் சோழநாட்டு அரிசிலாற்றங்கரையில் கலைமகளுக்குத் திருக்கோயில் ஒன்றினை எடுத்துள்ளார் அவர்தம் தக்கயாகப் பரணியில்

" ஆக்கம் பெருகும் மடந்தை வாழியே!
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே! "

---

சரசுவதி அந்தாதி—30
அவ்வூர் இன்றும் ஒட்டக்கூத்தர் பெயரால் கூத்தனூர் என வழங்குகிறது. கலைமகளின் கோயிலும் உள்ளது.

என்று தான் எடுத்த திருக்கோயிலையும் நினைந்து வாழ்த்தியிருப்பது கருதத்தக்கது.

கற்றவர் நாவினில் களிநடம் புரியும் கலைமகளைக் கைவருந்தி உழைப்பவர் தெய்வ-மாகவும் காட்டினார் பாரதியார். நாடிப் புலங்கள் உழுவார் கரமும், நயவுரைகள் தேடிக்-கொழிக்கும் கவிவாணர் நாவும், செழுங்கருணை ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் கலைமகள் நடமாடிக் களிப்பாள் என்று கூறும் கவிமணி கலைமகள் மனம், மொழி, மெய்-களிலும் விளங்கும் மாட்சியினை இனிது விளக்குகிறார்.

அறிவும் கலையும் வளரும்போது அருமைத் தமிழும் உடன் வளருமன்றோ! எனவே வள்ளற் பெருமான் கலைமகளைத் தமிழ் மகளாகவே போற்றுகின்றார். சங்கம் வளர்ந்திட வளர்ந்த தமிழ்க்கொடி, துங்கமுறக் கலைபயிற்றி உணர்வளிக்கும் கலை ஞானத்தோகை, கலைபயின்ற ஊத்தினிக்கும் கரும்பு என்றெல்லாம் அருள் மணக்கும் செந்தமிழால் உளம் உருகப் பாடிப் பரவுகின்றார்.

குளிர்வெண் திங்களின் கலைபோல கல்வியும் கலையும் நாளும் வளர்வன. இதனை விளக்கவே.

"கற்றது கைமண்ணளவு கல்லாது உலகளவு என்று
உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்" என்றனர்.

இறைவி ஏடங்கை நங்கையாக எழுந்தருளியிருப்பது அவளே இன்னும் ஓதுகின்றாள் என்ற குறிப்புத்தானோ?

ஆண்டுக்கொருமுறை அன்னை வழிபாடு செய்து அடுத்தநாள் மீண்டும் பரணில் எழுந்-தருளச் செய்து பல்லாண்டு பாடியது தமிழகத்தின் ஒளியிழந்த காலம். விடு தோறும் கலையின் விளக்கம், விதி தோறும் இரண்டொரு பள்ளி, இதுவே அன்னையின் கேண்மை கொள்ளவழி என்றார் பாரதியார். இது பாரதி நூற்றாண்டு, பாரதி காட்டிய பாதையில் நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள், நகர்கள் எங்கும் பலப்பல பள்ளிகள் உள்ளத்தில் கல்வியும் வாக்கினில் உண்மையும் ஒளி விசுகின்ற நேரத்தில் கல்வி என்றால் என்ன என்பதனைச் சற்றே எண்ணிப் பார்ப்பதும் வேண்டத் தக்கதே.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்

என்பது முன்னோர் கண்ட முடிவு. 'மனம் முகிழ்த்த அருள் நீக்கி மலர்விக்கும் கலை' என்பது சேக்கிழார் பெருமான் கலைக்குத்தருகின்ற விளக்கம். தடை தவிர்த்துக் கரை உடைத்துப் பெருகி எழும் பேராறு போலப் பொங்கி வரும் கலை வெள்ளம் நம் உள்ளத்துக்கு ஒளி தருவதாகுக!

வாழி கலைத் தெய்வம்!

வளர்க கலைச் செல்வம்!!

---

திருமந்திரம்

# பாரதி பாடிய பாரதி

'அறிவன்' மா. சற்குணம், எம். ஏ.,
பேராசிரியர், மயிலம்.

உலகில் வழங்கும் உயர்தனிச் செம்மொழிகள் பலவற்றுள் தமிழ் தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகிறது. உலக மொழிகளில் ஆங்கிலத்தை வணிகமொழியென்றும், பிரெஞ்சினைத் தூதின் மொழி என்றும் இத்தாலியத்தைக் காதலின் மொழி என்றும் செர்மானியத்தைத் தத்துவமொழி என்றும் கூறுவர் மொழிகளின் நீர்மையுணர்ந்தோர். இவ்வகையில் தமிழைப் பக்தி மொழி எனப் பகர்வதில் தவறில்லை. தமிழர் வாழ்வியலில் பக்தியுணர்ச்சி பிரிக்கமுடியாத ஓர் கூறுக இருந்து வந்துள்ளது. பல கடவுளர்களை வணங்கும் ஒழுக்கத்தை நம்மவர்களில் மிகப் பலர் பரவலாக ஏற்று வாழ்ந்து வருகின்றனர். தமிழரின் வணக்கத்துக்குரிய தெய்வங்களில் பெண்பாற் தெய்வங்களும் இணையான இடத்தைப் பெற்றுள்ளனர். கலைமகள் வழிபாடு நம்மவர் போற்றி மேற்கொண்ட ஓர் ஒழுக்கமாகும். கலைமகள் கலைகளுக்குரிய தெய்வமாகவும் குறிப்பாக கல்விக்குரிய தெய்வமாகவும் போற்றப்படுவதை நாம் அறிவோம். கவி பாரதியின் பாடல்களால் அறியலாகும் கலைமகள் பற்றிய செய்திகளைக் கண்டு இன்புறுவதே ஈண்டு நமது நோக்கமாகும்.

" ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென்னுள்ளத் திலுள்ளே
இருப்ப ளிங்குவாரா திடர் " —என்ற பழம் பாடலில்

சுட்டப்பட்ட அறுபத்து நான்கு கலைகட்கும் மூல காரணமான தெய்வத்தைக் 'கலைக்கூட்டப்பிணை' என உருவகஞ் செய்வர் பெரியோர். அறிவுக்கு நிறம் வெண்மை எனக் கொண்டதால் அறிவுத் தெய்வமான நாமகளுக்கு இருப்பிடம் வெள்ளை நிறத் தாமரைப்பூ எனவும், இவள் வெள்ளைப்பணி பூண்டிருப்பாள் எனவும், வெண்ணிறமுடையாள் எனவும் நூல்கள் கூறும்.

பிரமன் துணைவியாதலால் இவளைப் 'பிராமி' என்றும் இவளே அனைத்தையும் தாங்குவதாக நம்புவதால் 'பாரதி' என்றும், வாக்குத் தெய்வமாக விளங்குவதால் இவளை 'வாணி' என்றும் வெவ்வேறு பெயர்களால் அழைத்து மகிழ்ந்தனர்.

புராணங்கள், கலைமகளைப் பிரமன் நாவிலே இருப்பவள் எனவும், நான்கு கைகளிலும் செபமாலை, புத்தகம், வீணை எழுத்தாணி ஆகியவற்றை ஏந்தியுள்ளாளெனவும் கூறுகின்றன. எழுத்தாணியை நீக்கி இருகைகளிலும் வீணையை ஏந்தியுள்ளாள் எனவும் கூறுவதுண்டு.

சங்ககாலக் கவிஞர்களின் படைப்புக்களை ஆராய்ந்தால் கலைமகள் வணக்கம் அக்காலத்தில் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனல் சங்கம் மருவிய காலத்து இலக்கியமாகக் கருதப்படும் மணிமேகலையில் 'மன்னுேர் முதல்வி' எனக்கலைமகளும், 'கலைநியமம்' எனக்கலைமகள் கோயிலும் குறிக்கப்பட்டுள்ளதாகக் கூறுவர். எனவே கி. பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றுண்டளவில் இவ்வணக்கம் தமிழகத்தில் தோன்றியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இவ்வணக்கம் தோன்றி வளர்ந்த வரலாறு தனித்து ஆராயப்பட வேண்டியதாகும்.

நாம் கலைமகளின் தேவதையாகக் கலைமகளை நம்புவதைப் போன்று மேலை நாடுகளில் உள்ளோரும் சில நம்பிக்கைகளை கொண்டுள்ளனர். அவர்கள் (Muse) என்ற பெண் தெய்வத்தினை கவிதைக்குரிய அதிபதியாகக் கருதுவர், கலைகளுக்குரிய தெய்வமாகக் கிரேக்கர்கள் 'அதினே' என்ற தெய்வத்தையும், உரோமானியர்கள் 'மினர்வா' வையும் போற்றிவருகின்றனர். எனவே இந்நம்பிக்கை உலகெலாமுரியதோர் பொதுமைப் பண்பினதே என்று அறிகிறோம்.

தமிழ்க்கவிதையுலகில் தனிச் சிறப்புற்ற கம்பர் 'சரஸ்வதி அந்தாதி' என்ற பெயரில் ஒரு நூல் செய்ததாக நம்பப்படுகிறது. ஆசிரியர், கலைமகளை 'ஸரஸ்வதி' என்பர். சரஸ் ஏரி போல் ரகங்களின் (சுவைகளின்) இருப்பிடமாக இருப்பதாலும், ஆறுபோல் பெருகுவதாலும், சரஸ்வதி என்றழைக்கப் பட்டாள்என்பர். கி. பி. 17–ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த ஸ்ரீ குமரகுருபரரும் கலைமகளைப் பற்றி 'சகலகலா வல்லிமாலை' என்ற பெயரில் ஓர் நூல் செய்தருளினர். அவர் தில்லியில் இருந்தபோது, மன்னனிடம் பேச இந்துஸ்தானி மொழியறிவைத் தமக்கு அருளுமாறு கலைமகளை வேண்டி இந்நூல் செய்தார் என்ப. இது பத்து கட்டளைக் கலித்துறைகளால் இயன்ற சிறியதோர் நூலேயாயினும் சிறப்புடன் பலராலும் போற்றப்படுகிறது. இதற்கு 'சரஸ்வதி தோத்திரம்' என்ற வேறோர் பெயரும் உண்டு.

சிற்றிலக்கிய ஆசிரியர்கள் பலர், தாம் நூல் செய்யுமுன் இறைவணக்கச் செய்யுட்களாகப் பாடிய கலைமகள் பற்றிய கவிதைகள் பல உள. இத்தகு பாடல்கள் அனைத்தையும் தொகுத்துக் காண்பது சுவைபயக்கும் ஓர் முயற்சியாய் அமையும்.

இந்நூற்றுண்டின் இணையற்ற கவியாகப் பெரும் புகழ் படைத்துச் சென்ற நூற்றுண்டு விழாக்காணும் பாரதியின் பெயரே கலைமகள் பெயராகும். அவர் கலைமகளைப் போற்றிய பாடல்கள் பல உள. சுமார் 25 பாடல்கள் காணப்படுகின்றன. 'கலைமகளை வேண்டுதல்' என்ற தலைப்பில் ஐந்து பாடல்களும், 'வெள்ளைத் தாமரை' என்ற தலைப்பில் பத்து பாடல்களும், பாடியுள்ளார். இவை தவிர நவராத்திரிப் பாட்டு என்ற தலைப்பிலும், 'மூன்று காதல்' என்ற தலைப்பிலும், சில பாடல்கள் பாடியுள்ளார். பாஞ்சாலி சபதத்தில் வாணியை வேண்டுவதாக அமைந்துள்ள துதிப்பாடல்களும் இவண் கருதத் தக்கன.

'தெளிக்கும் பானுவிற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு களிக்கும் கலாபமயில்' என்றும் 'நாற்பெருங்கடலுள் நுண் பொருள் தெரித்து நாற்பயன் கொள்ளும் நாமகள்' என்றும் போற்றப்படும் கலைமகளை மகாகவி பாரதியும் பலவாருகப் போற்றியுள்ளார்.

இயற்கையில் இடையீடின்றி அணுக்களும், கதிர்களும் இயங்குவதாக அறிவியலாளர் கூறுவதுபோல் தமதுளமும் இயங்க வேண்டுமென விழைந்த பாரதி, அது நிறைவேற கலைமகள் அருளை வேண்டுகிருர்.

இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
 இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்களலாஞ் சுழலுமென
 வானூலார் இயம்பு கின்றுர்
இடையின்றித் தொழில் புரிதல் உலகினிடைப்
 பொருட்கெல்லாம் இயற்கை யாயின்
இடையின்றிக் கலைமகளே! நினதருளில்
 எனதுள்ளம் இயங்கொ ணுதோ?" என விழையும்

அவருடைய அறிவியற் பார்வை பாராட்டத் தக்கதாகும்.

பாரதி வாழ்ந்த ஆண்டுகள் முப்பத்து எட்டேயாகும். அக்குறுகிய கால வாழ்வில் அவர் போற்றிய தெய்வங்கள் பலவாகும். பலர் அவரைக் காளி பக்தராக விளங்கினர் என்பர் வேறு சிலர் அவர் கண்ணனைத்தான் போற்றினர் என்பர். ஆனல் கலைமகள் பக்தராக விளங்கினர் என்பதற்கும் சான்றுகள் உள. அவர் வாழ்வின் பாதி காலத்திற்கு மேல் இருபத்திரண்டு ஆண்டுகள் வரை-அவர் கலைமகள் காதலில் தோய்ந்திருந்தார் என அறிகிறோம். இதை அவரே 'சரஸ்வதி காதல்' மூலம் உணர்த்தியுள்ளார்,

"சித்தந் தளர்ந்த துண்டோ?—கலைத்
 தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்தது போல்—பகற்
 பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லால்—பிற
 வாஞ்சையுண்டோ?—வயதங்ஙனமேயிரு
பத்திரண்டா மளவும்—வெள்ளைப்
 பண்மகள் காதலைப் பற்றிநின்றேனம்மா!"

— என்கிறர்.

இதனேடு மட்டும் அமையாது அவரே பின் ஓரிடத்தில் கலைமகளிடம் சபதமேயிடுகிறர்

" மாயையில் அறிவிழந்தே—உம்மை
 மதிப்பது மறந்தனன்; பிழைகளெல்லாம்
தாயென உமைப்பணிந்தேன்—பொறை
 சார்த்திநல் லருள்செய வேண்டுகின்றேன்,
வாயினிற் சபத மிட்டேன்;—இனி
 மறக்கிலேன், எனை மறக்கலீர்! "

என்ற வரிகளில் கலைமகள் அருளை வேண்டியிருப்பின் அவர் தம் உள உறுதிப் பாட்டையும் புலப்படுத்தியுள்ளார்.

'தெய்வம் யாவினும் உணர்ந்திடும் தெய்வம்' என்றும் 'கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்' என்றும் பாரதியால் போற்றப் பெறும் கலைமகள் இருக்குமிடங்களையும் அவரே சுட்டுகிறர், அவற்றுள்,

" கொள்ளை யின்பம் குலவு கவிதை
 கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்; "

என்ற வரிகள் அவருளத்திலும்-பாரதியாம் அப் பாமகள் குடிகொண்டிருத்தலை அறிவிக்-கிறது. அவளை வழிபடும் முறை குறித்தும் பாரதி மொழிந்துள்ளார். உலகோர் செய்யும் உதவிப் பூசனையை வெறுத்துரைக்கின்றர்.

" மந்திரத்தை முனுமுனுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம்இவள் பூசனை யன்றும் "

என உரைக்கும் அவர். பின் எவ்வாறு கலைகமளை வணங்குவது என்பதையும் தெளிவுறுத்து-கிறார்.

" வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி;
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி "

என்ற வகையில் வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் அமைய விழைந்தார். இதுவே முறையாகக் கலைமகளை வணங்கும் வழியாகும். எனவே, அத்தகு பணிகளில் ஒன்றைச் செயல்படுத்தும் வேளையில் இக் கட்டுரையை வெளியிட்டு மகிழ்வல்.



# சங்கமே வாழி!

அமுத. இளவழகன். பி. லிட்.,
குருகுலம்.

அன்றுநம் பாண்டி நாட்டில்
அமைந்தமுச் சங்கம் ஒப்ப
இன்றுமோர் சங்கம் இங்கே
எழுந்தது மூவ ராலே.
ஒன்றிய சிந்தை யாளர்
உழைப்பிலே வளர்ந்த சங்கம்
கண்டது மணிவிழாவை;
கவினெலாம் சேரக் கண்டோம்.



அருந்தமிழ் வளர்க்கும் சங்கம்
ஐம்பது ஆண்டின் முன்னே
விரும்பியே கண்ட நல்ல
வித்தியா சாலை இந்நாள்
அரும்பெரும் முயற்சி யாலே
அடைந்துள வளர்ச்சி கண்டோம்.
பொருந்துநல் அன்பி னாலே
போற்றுதல் செய்வோம் வாரீர்!

மங்கையர் மாட்சி வேட்ட
மாக்கவி பார திக்கு
எங்குமே விழா எடுக்கும்
ஏற்புடை இந்த ஆண்டில்
இங்குமோர் பெண்கள் பள்ளி
ஏற்றமாய் ஓங்கச் செய்த
சங்கமே வாழி! என்று
சந்ததம் வாழ்த்து வோமே!

# கலைமகள் வழிபாடு - 108 போற்றி

நான்முக னுவின் மேவி நான்மறை வடிவா யின்னந்
தானரும் பொருள்க டேரத் தடக்கையின் முறையுந் தாங்கித்
தேனலர் கமலப் போதிற் செழித்துவீற் றிருக்கும் அம்மை
கான்மலர் போற்றி நாளுங் கருத்துற வணக்கஞ் செய்வாம்.

—*சிவரகசியம்.*

அறிவினுக் கறிவாய் ஆனாய் போற்றி
செறிஉயிர் நாத்தொறும் திகழ்வோய் ,,
ஆட்சிகொள் அரசரும் அறியாய் ,,
காட்சிசேர் புலவர்பால் கனிவோய் ,,

5 இல்லக விளக்காம் இறைவி போற்றி
நல்லக மாந்தரை நயப்பாய் ,,
ஈரமார் நெஞ்சினர் இடத்தோய் ,,
ஆரமார் தொடையல் அணிவோய் ,,
உலகியல் நடத்தும் ஒருத்தி ,,

10 அலகில் உயிர்க்கறிவு அளிப்போய் போற்றி
ஊனமில் வெள்ளை உருவினாய் ,,
கானக் குயில் மொழிக் கன்னியே ,,
எண்ணிலாப் புகழுடை எந்தாய் ,,
பண்ணியல் தமிழின் பாவாய் ,,

15 ஏழுல குந்தொழும் இறைவி போற்றி
சூழுநல் அன்பரின் துணைத்தாய் ,,
ஐதுசேர் வெண்கலை ஆடையாய் ,,
மைநீர் முத்து மாலையாய் ,,
ஒட்டக் கூத்தர்க் குதவினோய் ,,

20 வட்டவெண் தாமரை வாழ்வோய் ,,
ஓதுவார் அகத்துறை ஒளியே ,,
போதுசேர் அருட்கண் பொற்கொடி ,,
ஔவை முதாட்டியாய் ஆனாய் ,,
கோளவையே இல்லாக் கலைமகள் ,,

25 கல்விக் கரசே கலைக்கடல் போற்றி
நல்விற் புருவ நங்காய் ,,
செங்கையில் புத்தகம் சேர்த்தோய ,,
அங்கையில் படிகம் அடக்கியோய் ,,
சமைகுண் டிகைக்கைத் தாயே ,,

30 அமைவுகொள் ஞான அருட்கையாய் போற்றி
அஞ்சலென் றருள்தரும் அன்னே ,,
செஞ்சொற் கிழத்தியாம் தேவி ,,
மடமறு நான்முகன் வாழ்வே ,,
திடமுறு செந்தமிழ்த் தெளிவே ,,

35 கண்கண்ட தெய்வக் கண்மணி போற்றி
பண்கண்ட பாவிற் படர்ந்தனை ,,
தந்தையும் தாயுமாய்த் தழைப்போய் ,,
மைந்தரோ டொக்கலாய் வளர்வோய் ,,
நல்லோர் சொற்படி நடப்போய் ,,

40 பல்லோர் பரவும் பனுவலோய் ,,
மன்னரும் வணங்க வைப்போய் ,,
உன்னரும் பெருமை உடையாய் ,,
யாவாக்கும் இசைந்த யாயே ,,
மாவும் பொருளுமாய்ப் படர்வோய் ,,

45 பூரப் பரிவரு பொற்கொடி போற்றி
வார நெஞ்சினர் வழித்துணை ,,
சிலம்பொலிச் சிற்றடித் திருவருள் ,,
நல உமை இடக்கணும் நாயகி ,,
வள்ளைக் கொடிச்செவி மானே ,,

50 பிள்ளை மொழித்தமிழ்ப் பிராட்டி போற்றி
அழகின் உருவே அணங்கே ,,
பழகு தமிழின் பண்ணே ,,
இளமை குன்று ஏந்திழாய் ,,
வளமை குளிர்மை மன்னினாய் ,,
55 அறனும் பொருளும் அருள்வோய் போற்றி

வறனறு இன்பம் மலிந்தோய் ,,
சொன்ன கலைகளின் தொடர்பே ,,
மன்னிய மூத்தின் வயங்குவாய் ,,
கம்பர்க் கருளிய கருத்தே ,,

60 நம்பினோர்க் கின்பருள் நல்லோய் ,,
காண்டரும் எண்ணெண் கலையாய் ,,
வேண்டா வெண்மையை விலக்குவோய் ,,

கட்டற்கரிய கிளிமொழி ,,
வெட்ட வெளியாம் விமலே ,,

கீர்த்தியார் வாணியாம் கோகிலாய் போற்றி
ஆர்த்தியார் அன்பரின் அகத்தாய் ,,
குமர குருபரர்க் குதவினோய் ,,
அமரரும் வணங்கும் அபயே ,,
கூர்மையும் சீர்மையும் கொண்டோய் ,,

ஆர்வலர் ஏத்த அருள்வோய் போற்றி
கெடலரும் பாவின் கிழத்தி ,,
விடலரும் அறிவின் வித்தே ,,
கேள்வி கல்விக் கிழமையோய் ,,
ஆள்வினை அருளும் அமிழ்தே ,,

கையைக் கழநீர்க் கலைமகள் போற்றி
பொய்தீர் அருங்கலைப் பொருளே ,,
கொண்டற் கூந்தற் கொம்பே ,,
வண்டமிழ் வடமொழி வளனே ,,
கோதில் பலமொழிக் குருந்தே ,,

போதில் உறையும் பொன்னே போற்றி
சங்கொத் தொளிர் நிறத் தாயே ,,
அங்கண அருள் நிறை அம்மா ,,
சாதலும் பிறத்தலும் தவிர்ந்தோய் ,,
போதலும் இருத்தலும் போககினோய் ,,

தினமும் செற்றமும் தீர்ந்தோய் போற்றி
மனமும் கடந்த மறைபொருள் ,,
சீரார் சிந்தா தேவியே ,,
ஏரார் செழுங்கலை இன்பே ,,
சுடரே விளக்கே தாயாய் ,,

இடரே களையும் இயல்பினோய் ,,
சூழும் தொண்டரின் தொடர்பே ,,
ஏழுறும் இசையின் இசைவே ,,
செவ்விய முத்தமிழ்த் திறனே ,,
ஒளியாய் அறுக்கும் அரசி ,,

சேவடிச் செல்வம் அளிப்போய் போற்றி
பாவடிப் பயனே படைத்தருள் ,,
சைவம் தாங்கும் தனிக்கொடி ,,
மையெலாம் போக்கும் மருந்தே ,,
சொல்லொடு பொருளின் சுவையருள் ,,

அல்லொடு பகலுன் அடைக்கலம் ,,
சோர்விலா அறிவின் தொடர்பே ,,
தீர்விலா நுண்கலைத் திறனே ,,
தமிழ்க்கலை தமிழ்ச்சுவை தந்தருள் ,,
தமிழ்மந் திரமொழித் தண்பயன் ,,

தாயே நின்னருள் தந்தாள் போற்றி
தாயநின் திருவடி தொழுதனம் ,,
திருவுடன் கல்வித் திறனருள் ,,
இருநிலத் தின்பம் எமக்கருள் போற்றியே.


WITH THE BEST COMPLIMENTS FROM :

Grams : BRUSH HOUSE Phone : 24701

**CHITHRA COMBINES**

123, Linghi Cheety Street

MADRAS - 600001.

Mfgrs. of. Electronie Digital Clock, Emergency Lights, Burglar Alarms.

Stockists : Tarpaulins, Hitco Drills.

# கலைமகள் வழிபாடு - 108 போற்றி

நான்முக னவின் மேவி நான்மறை வடிவா யின்னந்
தானரும் பொருள்க டேரத் தடக்கையின் முறையுந் தாங்கித்
தேனலர் கமலப் போதிற் செழித்துவீற் றிருக்கும் அம்மை
கான்மலர் போற்றி நாளுங் கருத்துற வணக்கஞ் செய்வாம்.

*—சிவரகசியம்.*

அறிவினுக் கறிவாய் ஆனாய் போற்றி
செறிஉயிர் நாத்தொறும் திகழ்வோய் ,,
ஆட்சிகொள் அரசரும் அறியாய் ,,
காட்சிசேர் புலவர்பால் கனிவோய் ,,

இல்லக விளக்காம் இறைவி போற்றி
நல்லக மாந்தரை நயப்பாய் ,,
ஈரமார் நெஞ்சினர் இடத்தோய் ,,
ஆரமார் தொடையல் அணிவோய் ,,
உலகியல் நடத்தும் ஒருத்தி ,,

அலகில் உயிர்க்கறிவு அளிப்போய் போற்றி
ஊனமில் வெள்ளை உருவினாய் ,,
கானக் குயில் மொழிக் கன்னியே ,,
எண்ணிலாப் புகழுடை எந்தாய் ,,
பண்ணியல் தமிழின் பாவாய் ,,

ஏழுல குந்தொழும் இறைவி போற்றி
சூழுநல் அன்பரின் துணைத்தாய் ,,
ஐதுசேர் வெண்கலை ஆடையாய் ,,
மைதீர் முத்து மாலையாய் ,,
ஒட்டக் கூத்தர்க் குதவினாய் ,,

வட்டவெண் தாமரை வாழ்வோய் ,,
ஓதுவார் அகத்துறை ஒளியே ,,
போதுசேர் அருட்கண் பொற்கொடி ,,
ஔவை முதாட்டியாய் ஆனாய் ,,
கௌவையே இல்லாக் கலைமகள் ,,

கல்விக் கரசே கலைக்கடல் போற்றி
நல்விற் புருவ நங்காய் ,,
செங்கையில் புத்தகம் சேர்த்தோய ,,
அங்கையில் படிகம் அடக்கியோய் ,,
சமைகுண் டிகைக்கைத் தாயே ,,

அமைவுகொள் ஞான அருட்கையாய் போற்றி
அஞ்சலென் றருள்தரும் அன்னே ,,
செஞ்சொற் கிழத்தியாம் தேவி ,,
மடமறு நான்முகன் வாழ்வே ,,
திடமுறு செந்தமிழ்த் தெளிவே ,,

கண்கண்ட தெய்வக் கண்மணி போற்றி
பண்கண்ட பாவிற் படர்ந்தனை ,,
தந்தையும் தாயுமாய்த் தழைப்போய் ,,
மைந்தரோ டொக்கலாய் வளர்வோய் ,,
நல்லோர் சொற்படி நடப்போய் ,,

பல்லோர் பரவும் பனுவலோய் ,,
மன்னரும் வணங்க வைப்போய் ,,
உன்னரும் பெருமை உடையாய் ,,
யாவர்க்கும் இசைந்த யாயே ,,
மாவும் பொருளுமாய்ப் படர்வோய் ,,

பூரப் பரிவரு பொற்கொடி போற்றி
வார நெஞ்சினர் வழித்துணை ,,
சிலம்பொலிச் சிற்றடித் திருவருள் ,,
நல உமை இடக்கணும் நாயகி ,,
வள்ளைக் கொடிச்செவி மானே ,,

பிள்ளை மொழித்தமிழ்ப் பிராட்டி போற்றி
அழகின் உருவே அணங்கே ,,
பழகு தமிழின் பண்ணே ,,
இளமை குன்றா எந்திழாய் ,,
வளமை குளிர்மை மன்னினாய் ,,
அறனும் பொருளும் அருள்வோய் போற்றி

வறனறு இன்பம் மலிந்தோய் ,,
சொன்ன கலைகளின் தொடர்பே ,,
மன்னிய முத்தின் வயங்குவாய் ,,
கம்பர்க் கருளிய கருத்தே ,,

நம்பினோர்க் கின்பருள் நல்லோய் ,,
காண்டரும் எண்ணெண் கலையாய் ,,
வேண்டா வெண்மையை விலக்குவோய் ,,

[illegible] ,,
வெட்ட வெளியாம் விமலே ,,

கீர்த்தியார் வாணியாம் தேடிலாய் போற்றி
ஆத்தியார் அன்பரின் அகத்தாய் ,,
குமர குருபரர்க் குதவினோய் ,,
அமரரும் வணங்கும் அம்மே ,,
கூர்மையும் சீர்மையும் கொண்டோய் ,,

ஆர்வலர் ஏத்த அருள்வோய் போற்றி
கெடலரும் பாவின் கிழத்தி ,,
விடலரும் அறிவின் வித்தே ,,
கேள்வி கல்விக் கிழமையோய் ,,
ஆள்வினை அருளும் அமிழ்தே ,,

கையைக் கழுநீர்க் கலைமகள் போற்றி
பொய்தீர் அருங்கலைப் பொருளே ,,
கொண்டற் கடந்தற் கொம்பே ,,
வண்டமிழ் வடமொழி வளனே ,,
கோதில் பலமொழிக் குருந்தே ,,

போதில் உறையும் பொன்னே போற்றி
சங்கொத் தொளிர் நிறத் தாளே ,,
அங்கண் அருள் நிறை அம்மா ,,
சாதலும் பிறத்தலும் தவிர்ந்தோய் ,,
போதலும் இருத்தலும் போககினோய் ,,

தினமும் செற்றமும் தீர்ந்தோய் போற்றி
மனமும் கடந்த மறைபொருள் ,;
சீரார் சிந்தா தேவியே ,,
ஏரார் செழுங்கலை இன்பே ,,
சுடரே விளக்கே தூயாய் ,,

இடரே களையும் இயல்பினாய் ,,
ஆழும் தொண்டரின் தொடர்பே ,,
ஏழறும் இசையின் இசைவே ,,
செவ்விய முத்தமிழ்த் திறனே ,,
ஔவியம் அறுக்கும் அரசி ,,

சேவடிச் செல்வம் அளிப்போய் போற்றி
பாவடி பயனே படைத்தருள் ,,
சைவம் தாங்கும் தனிக்கொடி ,,
மையெலாம் போக்கும் மருந்தே ,,
சொல்லொடு பொருளின் சுவையருள் ,,

அல்லொடு பகலுன் அடைக்கலம் ,,
சோர்விலா அறிவின் தொடர்பே ,,
தீர்விலா நுண்கலைத் திறனே ,,
தமிழ்க்கலை தமிழ்ச்சுவை தந்தருள் ,,
தமிழ்மந் திரமொழித் தண்பயன் ,,

தாயே நின்னருள் தந்தாள் போற்றி
தாயநின் திருவடி தொழுதனம் ,,
திருவுடன் கல்வித் திறனருள் ,,
இருநிலத் தின்பம் எமக்கருள் போற்றியே.

WITH THE BEST COMPLIMENTS FROM :

Grams : BRUSH HOUSE Phone : 24701

CHITHRA COMBINES

123, Linghi Cheety Street

MADRAS - 600001.

Mfgrs. of. Electronic Digital Clock, Emergency Lights, Burglar Alarms.

Stockists : Tarpaulins, Hitco Drills.

# ஸ்ரீ சரசுவதி வித்தியாசலை

## பெண்கள் உயர்நிலைப் பள்ளி

### நன்கொடை தந்த விபரம்

| | | |
|---|---|---|
| 1. | பெ. மு. சொக்கலிங்கம் செட்டியார் | ரூ 10 000 |
| 2. | பெரி. சித. இராமசாமி செட்டியார் | ரூ 10 000 |
| 3. | மு. சு. இராசாமி செட்டியார் | ரூ 10 000 |
| 4. | ப. பெ. அரு. நாவ. நாவ பழ. ~~அ~~. அருணாசலம் செட்டியார் | ரூ 10 000 |
| 5. | பெ. ப. வி. அரு. ராம. முத்தப்பன் | ரூ 10 000 |
| 6 | உமையாள் ஆச்சி அருணாசலம் டிரஸ்ட் (விஞ்ஞானப் பொருள்கள்) | ரூ 8 000 |
| 7. | பெ. மு. விசுவநாதன் செட்டியார் நினைவு பெ. மு. வி. உமையாள் ஆச்சி | ரூ 5 000 |
| 8. | பெ. மு. பெரியணன் செட்டியார் | ரூ 5 000 |
| 9. | சித. வயி. குடும்பத்தார் | ரூ 3 000 |
| 10. | டாக்டர். VR. ராமநாதன் M. SC | ரூ 1 000 |
| 11. | E. PR. VR. VR. சோலையப்பன் B. SC | ரூ 1 000 |
| 12. | பெ. ப. வி. ப. சிதம்பரம் | ,, 1 000 |
| 13. | மு. அ. பழ. அ. சொர்ணவல்லி ஆச்சி | ,, 1 000 |
| 14. | பாண்டியராஜாமில்ஸ் A. செல்லப்பன் | ,, 1 000 |

## முப்பெருவிழா நன்கொடை வரவு

| | |
|---|---|
| லெ. ராம. லெட்சுமணன் குடும்பத்தார் | ரூ 500 |
| பெரி. சித. ராமசாமிச் செட்டியார் குடும்பத்தார் | 301 |
| ப. பெ. அரு. ராம. பழ. அரு. கண்ணன் | 201 |
| மு. க. இராமசாமிச் செட்டியார் | 119 |
| பழ. மு. பழ. வீர. முருகப்பச் செட்டியார் குடும்பத்தார் | 111 |
| யெ. மு. பெரியணன் செட்டியார் | 101 |
| VR. ராமசாமி | ,, |
| MS ஐான்ஸ்டீபன் குடும்பத்தார் | ,, |
| AL. நாகப்பன் | ,, |
| RM. விஸ்வநாதன் | ,, |
| ப. மு. நா. மு. பழனியப்பன் | ,, |
| சாத்தப்பா சுப்பிரமணியன் | ,, |
| பெரி. கரு. வீர. காசிச்செட்டியார் குடும்பத்தார் | ,, |
| RM. வினைதீர்த்தான் | ,, |
| சுப. சின்னக் கருப்பன் | ,, |
| பழ. ஏகப்பன் | ,, |
| சித. மெய்யப்பன் | ,, |
| SP. உண்ணாமலை, AR. நாகம்மை, PS. உமையாள் | ,, |
| O. A PRM. C. U. R. கண்ணபுரம் ஆச்சி, பள்ளத்தூர் | ,, |
| M. RM. PL. பார்வதி ஆச்சி, கல்லுப்பட்டி | ,, |
| RM. வீரப்பன் | ,, |
| வி பழனியப்பன் | ,, |
| இராம. சிதம்பரம் செட்டியார் குடும்பத்தார் | ,, |
| ஏ ர. அருணாசலம் செட்டியார் | ,, |
| முரு. அண. சிவகாமி ஆச்சி, பள்ளத்தூர் | ,, |
| பெ, ப. வி. ராம. சொக்கலிங்கம் | ,, |
| அ. நடராசன் | 100 |
| சட்டன்தாஸ் நந்தலால்& டிரஸ்ட் | 100 |
| KR. கணேசன் | 100 |
| V. பழனியப்பன் மூலமாக சென்னையில் வரவு | 90 |
| வீர. பழ வினைதீர்த்தான் செட்டியார் | 61 |
| PL. பழனியப்பன் | 51 |
| S. அண்ணாமலை | 51 |
| E. PR. VR. PL. ரெங்கநாதன் | 51 |
| SP. சண்முகம் | 51 |

| | |
|---|---|
| லெ. ராம. லெ. பழனியப்பச் செட்டியார் | 51 |
| லெ. ராம. லெ. லெ. லெட்சுமணன் | 51 |
| O. RM. P. RM முத்துக்கருப்பன் | 51 |
| அழ. குப. கும. ரெங்கநாதன் செட்டியார் | 51 |
| சித. கயி. ராம. மீனாட்சி ஆச்சி, காரைக்குடி | 51 |
| பழ. ப. ப. வீர. குடும்பத்தார் | 51 |
| VR. சிதம்பரம் | 50 |
| S. வசந்தா, தஞ்சை. | 50 |
| ஸ்ரீ லட்சுமி லஞ்சு ஹோம் | 35 |
| R. பெத்தாச்சி | 31 |
| சே. பழ. விசுவநாதன் | 31 |
| A. முத்தப்பன் | 25 |
| KP. RM. ராசு | 25 |
| RM. அடைக்கன் அம்பலம் | 25 |
| CT. திருநாவுக்கரசு | 25 |
| சி. வ. கா. விசாலாட்சி நாராயணன் | 25 |
| PM. நாராயணன் | 22 |
| நா. ராமகிருஷ்ணன் | 21 |
| ஏ. வீரப்பன் | 21 |
| மு. பெரி. சின்னக்கருப்பன் | 21 |
| S. பிச்சை முகைதீன் & S M பாருக் | 21 |
| VR. ராமையா | 21 |
| L. RM. சுப்பிரமணியன் | 21 |
| மு. வீரப்பன் | 21 |
| சு. அரு. ச. உமையாள் அருணாசலம், அரியக்குடி | 21 |
| N. SP. செல்லப்பன் | 21 |
| சி. ராம. அரு. சொ. மெய்யம்மை ஆச்சி, கண்டனூர் | 21 |
| V. சேதுராமன் | 21 |
| அழ. குப. சுப. வீர. சுப்பிரமணியன் | 21 |
| வீர. பழ. அ. பழ. முத்துப்பழனியப்பன் | 21 |
| பெரி. சுப்பிரமணியன் | 21 |
| RM. வினைதீர்த்தான் | 21 |
| நா. பழனியப்பன் | 21 |
| வீர. கதிரேசன் | 21 |
| PR. அழகப்பன் | 21 |
| ராம. சித. இராமசாமி செட்டியார் | 21 |
| பழ. கோவிந்தன் | 20 |

| | |
|---|---|
| VR. ராமசாமி | 20 |
| சித. நல்லபெருமாள் | 18 |
| அ. அருணாசலம் | 18 |
| சோம. சுப்பிரமணியன் செட்டியார் | 18 |
| மு. வினைதீர்த்தான் செட்டியார் | 18 |
| வீர. சோலையப்பச் செட்டியார் | 18 |
| ராம. பழ. அருணாசலம் செட்டியார் | 17 |
| அருணாசலம் | 16 |
| VR. மகாலிங்கம் | 16 |
| MRM. சிதம்பரம் பிள்ளை | 16 |
| S. ரங்கராஜ ஐயங்கார் | 16 |
| RM. பழனியப்பன் | 16 |
| ப. செ. பழ. வீரப்பச் செட்டியார் | 16 |
| விநாயக கௌரி ஈரோடு | 15 |
| RM. நாகப்பன் | 11 |
| S. வீரப்பன் | 11 |
| RM. வள்ளியம்மை, கானாடுகாத்தான் | 11 |
| RM. குமரப்பன் | 11 |
| C. அழகம்மை ஆறாவயல் | 11 |
| S. செல்லப்பன் | 11 |
| K. சுந்தரம் செட்டியார் | 11 |
| கணேசன் | 11 |
| சுப்பையா | 11 |
| முத்தையா ஆசாரி | 11 |
| முத்துக்கனி | 11 |
| பழனியப்பன் (தேவகோட்டை) | 11 |
| AR. சேகர் | 11 |
| சொ. குமரப்ப ஆசாரி | 11 |
| M. முகமது சம்சுதீன் | 11 |
| பாண்டியன் கிராம பேங்க் | 11 |
| PV. இராமச்சந்திரன் | 11 |
| MR. பெரியசாமி ஆசாரி | 11 |
| R. வீரப்பன் | 11 |
| கரு. சொ. மீனாட்சி ஆச்சி தேனிப்பட்டி | 11 |
| C. மீனாட்சி சுந்தரம் | 11 |
| உமையாள்முத்து, சென்னை | 11 |
| M. இராமசாமி | 11 |

| | |
|---|---|
| நா. சோ. நாராயணன் | 250 |
| டைரக்டர் SP. முத்துராமன் | 100 |
| RM. கைலாசம் காரைக்குடி | 11 |
| RM. நாராயணன் காரைக்குடி | 11 |
| RM. பழனியப்பன் காரைக்குடி | 11 |
| சுப. வீர. கரு. வள்ளியம்மை ஆச்சி, கண்டனூர் | 11 |
| A. செல்லப்பன் | 11 |
| ப. செ. பழ. சே வீரப்பச்செட்டியார் | 11 |
| RM. விசுவநாதன் | 11 |
| அண. வள்ளியம்மை, கானாடுகாத்தான் | 11 |
| S. சரசுவதி சாத்தப்பன், காரைக்குடி | 11 |
| AR. சுப்புராமன் | 11 |
| வ. மீனாட்சி ஆச்சி, கோவை | 10 |
| ராம உமையாள் ஆச்சி, திருவாரூர் | 10 |
| RK சேஷாத்திரி | 10 |
| M. உமையாள், மதுரை | 10 |
| P. கருப்பையா | 10 |
| அழகப்பச்செட்டியார் | 10 |
| PL. வீமன் | 10 |
| S முத்தையாத்தேவர் | 10 |
| ச. இந்திராள்,ஓ சிறுவயல் | 10 |
| D ராஜகாந்தம், உடுமலைப்பேட்டை | 10 |
| S. பாஸ்கர் | 10 |
| RM. அழகம்மை ஆச்சி, அரியக்குடி | 10 |
| SP. உமையாள், புதுவயல் | 10 |
| T.K. ரெங்கராஜன் | 10 |
| அண்ணாமலை | 7 |
| P. ராமர் | 7 |
| V ராமசாமி | 7 |
| சோலையாதவ் | 6 |
| SR. ராஜாராம் | 6 |
| S. சரோஜா ஆச்சி, சென்னை | 5 |
| சுப. லெட்சுமி ஆச்சி சென்னை | 5 |
| AN. கணேசன் | 5 |
| சித. சோமசுந்தரம் | 5 |
| மு வினைதீர்த்தான் | 5 |
| நாச்சம்மை, கோட்டையூர் | 5 |

| | |
|---|---|
| AR. உமையாள், சிறுவயல் | 5 |
| S.V, சுப்பிரமணியன் | 5 |
| வீர. ராம | 5 |
| பழனியப்பன் | 5 |
| S நாகேந்திரன் | 5 |
| சுந்தரம் | 5 |
| K. முத்துராமன் | 5 |
| M. கிருஷ்ணன் | 5 |
| ஆறு. அங்கமுத்து | 5 |
| T. கிருஷ்ணன் | 5 |
| நாச்சியப்பன் | 5 |
| SP. பழனிச்சாமி | 5 |
| KM.சுப்ரமணியன் செட்டியார் | 5 |
| டாக்டர் K. சண்முகம் | 5 |
| K. சாரங்கபாணி ஐயங்கார் | 5 |
| பெ. கருப்பையா | 5 |
| சித. உடையப்பன் | 5 |
| RM. சோமசுந்தரம் | 5 |
| ஆ. த. லெ. ராம. சுப. தெய்வானை ஆச்சி, காரைக்குடி | 5 |
| D. சுந்தரம் | 3 |
| K. சுப்பு | 3 |
| வெங்கடாசலம் | 3 |
| வெங்கடாசலம் செட்டியார் | 3 |
| AK முகமது கனி | 3 |
| KC. கன்னையா | 3 |
| M. முகமது ஹனிபா | 3 |
| லெட்சுமணன் | 2 |
| மலேசியா வீர. பழ. வீரப்பன் வகையில் | 4946 |